


# இஸ்ரயேலர் - அரேபியர்களின்
# சமாதான நடவடிக்கைகளும்
# மற்றும்
# வேதாகம தீர்க்கதரிசனமும்

கிறிஸ்தவர்களுக்காக கிறிஸ்தவர்களால் எழுதப்படும் மனம் திறந்த கடிதம்




மேலே காட்டப்பட்டுள்ள "பன்மடங்கு ஏவுகணை ஏவூர்தியாகிய" கத்யுஷா ஏவுகணையை மிக எளிமையாக பிரித்து, "இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத" பாலஸ்தீன தேசத்திற்கு கடத்திச் செல்லலாம். குழாய் மற்றும் வெறும் கார் ஊர்தியின் மின்கலனை (Battery) கொண்டு கத்யுஷா இராக்கெட்டை ஏவ முடியும். இங்கு காட்டப்பட்டுள்ள பாரவண்டியின் மேலிருக்கும் ஏவுகணைகள் 12.7 மைல்கள் (20.4 கிலோ மீட்டர்) தொலைவிற்கு செல்லக்கூடியது. கத்யுஷா ஏவுகணைகள் இரசாயன போராயுதங்களை சுமந்துச் செல்லக்கூடியது. பாரவண்டியில் இருந்து ஏவப்படும் முழு அளவிலான கத்யுஷாவின் வேட்டுவிடல், "ஈராக்கின்" நான்கு ஸ்கட் ஏவுகணைகள் ஏற்படுத்தும் வெடிப்பிற்கு சமமானது. டெல் அவிவில் இருக்கும் எந்த அபார்மெண்ட் கட்டிடமும் தப்ப முடியாது.


# இஸ்ரயேலர் - அரேபியர்களின் சமாதான நடவடிக்கைகளும் மற்றும் வேதாகம தீர்க்கத்தரிசனமும்

## பொருளடக்கம்


முன்னுரை


1. வரலாற்றின் உரிமைகளை விளக்கும் தேவனுடைய தொலைநோக்குப் பார்வை
2. வரலாற்று உரிமைகள் – வரலாற்றின் கண்ணோட்டம்
3. சகல ஜாதிகளும் அவரின் தேசத்தை பங்கிட்டனர் மற்றும் கர்த்தர் கோபமாக உள்ளார்
4. அரேபிய – இஸ்ரயேல் சமாதானம் – வேதாகமத்தின் கண்ணோட்டம்
5. மீந்தவர்களே (பரிசுத்த மந்தை) ஆசீர்வதிக்கப்போகும் தேசமாக இருப்பார்கள்

## பாலஸ்தீனம் மீதான பிரிட்டனின் ஆதிக்கம்





வரைபடம் 1

## பிரிட்டனின் நிர்வாக மாற்றம் 1921-22





வரைபடம் II

## ஐ.நா. சபை நிலபகிர்வு திட்டம் – 1947





வரைபடம் III

## 1947–1967 தற்காலிக
## போர் நிறுத்த எல்லைகள்





வரைபடம் IV

## 1967 போர் நிறுத்த எல்லைகள்





வரைபடம் V

# இஸ்ரயேலின் தற்போதைய எல்லைகள்




வரைபடம் VI

## வருங்கால இஸ்ரேலின் எல்லைகள் - எதிர்கால இஸ்ரயேல்-அரேபிய போருக்குபின்




வரைபடம் VII

# இஸ்ரயேலர் - அரேபியர்களின் சமாதான நடவடிக்கைகளும் மற்றும் வேதாகம தீர்க்கத்தரிசனமும்

(கிறிஸ்தவர்களுக்காக கிறிஸ்தவர்களால்
எழுதப்படும் மனம் திறந்த கடிதம்)

# முன்னுரை

இந்த தேசம் போல் வேறு எந்த பழமையான தேசமும் அழிக்கப்பட்டதில்லை. இதன் மக்கள் போல் பூமியின் கடையாந்திரமட்டும் யாரும் சிதறடிக்கப்பட்டதில்லை. ஆனாலும் நூற்றாண்டு காலங்களாக இவர்கள் தனித்துவத்துடன் தனித்தன்மையாகவே வாழ்ந்து வந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பிறகு இந்த மக்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு, தங்கள் தேசத்தை மீண்டும் உருவாக்கியுள்ளது காலத்தையும், அறிவையும் கடந்த செயலாகவே உள்ளது. 1948-ல் மீண்டும் ஒரு தேசமாக உருவான இஸ்ரயேல் நாடு வரலாற்றின் தனிச்சிறப்பு வாய்ந்த அதிசயமாக உள்ளது.

இந்த தேசத்தினுடைய மறுபிறப்பின் திட்டம், 1878-ல் உருவானதாக பார்க்கலாம். புதிய இஸ்ரயேல் தேசம் 1948-ல் தொடங்கவில்லை. மாறாக 1878-ல் பாலஸ்தீன தேசத்திற்கு குடிபெயர்ந்த யூதர்களின் வழிகாட்டுதலின்படி, யூத குடியிருப்புகளான பெத்தா திக்வா (Petah Tikvah) உருவாக்கப்பட்டதாக டேவிட் பென்குரியன் கூறுகிறார். இதற்கு ''நம்பிக்கையின் வாசல்'' என்று அர்த்தமாம்[1]. 1878-ம் ஆண்டு முதலே, இஸ்ரயேல் தேசம் அதிசயக்கதக்க விதமாய் மீண்டும் உருவாவதற்கான வேதாகம தீர்க்கதரிசனங்கள் வியக்கத்தக்க அளவிற்கு முழுமையாகவும், படிப்படியாகவும் நிறைவேற ஆரம்பித்தன. அந்த ஆண்டில் யூதர்கள் பாலஸ்தீன தேசத்தில் குடிபெயர்வதை தடுத்து நிறுத்தம் சட்டமும் தளர்த்தப்பட்டது. இதன் பின்னர் யூதர்கள் பாலஸ்தீன தேசத்தில் இடம் வாங்கலாம் என்பதும் அறிமுகப்படுத்தப்பட்டது.

வேதாகம தீர்க்கத்தரிசனம் நிறைவேறும் வண்ணமாக, சிதறடிக்கப்பட்ட தேசங்களில் இருந்து திரளான யூதர்கள் தங்கள் பழமையான தாயக தேசமான இஸ்ரயேலுக்கு திரும்பி வருவதும் தொடங்கியது (எரேமியா 16 : 14-16, ஏசாயா 43 : 4-6).

நிலத்தை விலைக்கு வாங்குவார்கள் என்ற தீர்க்கத்தரிசனம் நிறைவேறிற்று (எரேமியா 32 : 44). விளைச்சல் இல்லாத பாலைவன நிலங்களும் மற்றும் மலேரியா சதுப்பு நிலங்களும் முஸ்லீம் உரிமையாளர்களிடமிருந்து மிகவும் அதிக விலைக்கு வாங்கப்பட்டது. அதிசயத்தக்க வகையில் காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டு, பின்மாரியும் பெய்து, வறண்ட நிலத்தை புதுப்பித்தன (யோவேல் 2 : 21-24) . வானங்கள் திறந்ததால், பல நூற்றாண்டு காலமாக மிதமாக பெய்து வந்த முன்மாரி

மழை மிகவும் அதிகமானது. அதிக காலம் பெய்யாமல் இருந்த ‘‘பின்மாரியும்’’ பிற்பாடு பெய்ய தொடங்கியது. இதன் விளைவாக, விளைச்சல் இல்லாத பாலைவன நிலங்களும் மற்றும் மலேரியா சதுப்பு நிலங்களும் ரோஜாவை போல பூத்து குலுங்கின. திராட்சை தோட்டம், பழத்தோட்டம் மற்றும் ரோஜாக்கள் பற்றியும் கூறிய தெய்வீக தீர்க்கத்தரிசனம் இவ்வாறு நிறைவேறியது (ஏசாயா 35 : 1, ஆமோஸ் 9 : 14-15).

இதன் பிறகே இஸ்ரயேல் தேசத்திற்கு பிரசவ கஷ்டங்கள் தொடங்க ஆரம்பித்தன. 1929-ம் ஆண்டு எப்ரோனில் 67 யூதர்கள் அரேபியர்களால் கொல்லப்பட்டனர்[++2]. 1930-ம் ஆண்டு நாஜிப் பிரசாரத்தால் உந்தப்பட்ட எருசலேமின் தலைமை முஸ்தீப், பாலஸ்தீனத்தில் சிறுபான்மையினராக இருந்த அரேபியர்களோடு கைகோர்த்து யூத தேசம் ‘‘இறந்து பிறக்க’’ திட்டமிட்டார்[#3]. இதுபோன்ற ‘‘கஷ்டமான வலியான’’காரியங்கள், யூதர்களின் குடியிருப்புகள் மேல் தீவிரவாத செயல்களாக தொடுக்கப்பட்டன. இதன்பின்பு 1940-ம் ஆண்டு ஐரோப்பாவில் வாழ்ந்த அடால்ப் இச்மேன்னும் (Adolph Eichmann), முஸ்தீப்பும் (யாசர் அராபத்தின் மாமா)[+4] படிப்படியாக யூதர்களை கொலை செய்து, அழிக்க முற்பட்டனர்[++5]. இந்த அவமான காரியத்தையே ‘‘இனப்படுகொலை’’ என்று வரலாறு பதிவு செய்துள்ளது. கடைசியாக இந்த இனப்படுகொலையால் குற்ற உணர்வு கொண்ட நாடுகள், யூதர்களுக்கு என்று ஒரு தேசம் தேவை என்பதை தார்மீக கடமையாக எண்ணினார்கள். ஐக்கிய நாடுகளின் 1947-ம் ஆண்டு நிலபகிர்தல் திட்டம் மூலம் யூதர்களுக்கு கிடைக்கவிருந்த நாட்டை பிளவுபடுத்தியதோடு, கிடைக்கச் செய்யாமல் இருக்க அரபு தேசங்கள் தடை செய்துகொண்டு இருந்தனர்.

ஆனால் தெய்வீக மருத்துவரான தேவனோ, யூத தேசம்‘‘இறந்து பிறப்பதை’’தடுத்தார். கடைசி கஷ்டமான சுதந்திர போரின் போது, ஆறு அரபு தேசங்கள் படையெடுத்த போது, 100 க்கு ஒன்று என்ற நிலையை அடைந்த உண்மையை புரிந்துக் கொள்ளாமல், யூத தேசம் பிறந்தது. பெரும்வாரியான யூதர்களின் குடிபெயர்தலால், புதிதாய் பிறந்த தேசம் ஸ்திரப்பட்டது. வேதாகமத்தின் தீர்க்கத்தரிசனம் நிறைவேறும் வகையில் நிலம் ஆக்கிரமிக்கப்படுவதும் தொடர்ந்தது. 1967-ம் ஆண்டு நடந்த ஆறுநாள் போரில், யூதர்களின் பழமையான இடங்களாக கருதப்பட்ட சமாரியா, யூதேயா, கிழக்கு எருசலேம், காசா பகுதி மற்றும் கோலான் குன்றுகள் புதிய

இஸ்ரயேல் தேசத்தோடு இணைக்கப்பட்டன.

---

++2 பரூக் கோல்ட்ஸ்டையின் வஞ்சக நீதி கொடுமையானது என்று நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

#3 பாலஸ்தீன முஸ்லீம்களின் தலைவர்

+4 அராபத்தின் முழுமையான பெயர் அபத் அல் ரகுமான் அபத் அல் பாவ் அராபத் அல் குத் அல் வுசைன் என்பதாகும். நாஜிக்களோடு கைகோர்த்த முன்னாள் எருசலேமின் முஸ்தீப்போடு (அஜ் முகமது அமின்) தனக்கிருந்த இரத்த சம்பந்தப்பட்ட உறவை மறைப்பதற்காகவே தனது பெயரை சுருக்கிக் கொண்டார் (ஹோவர்ட் மா. சச்சார், இஸ்ரயேலின் வரலாறு (நியூயார்க் : நாப், 1976).

++5 ஐச்மேன் உதவியாளர், அல் உசைனி பற்றி தான் கண்ணால் கண்டதை இவ்வாறாக கூறுகிறார் :- ஐரோப்பிய யூதர்களை படிப்படியாக அழிப்பதில், இவர் ஐச்மேனுக்கும் (Eichmann) மற்றும் ஹிம்லருக்கும் (Himmler) ஆலோசகராக இருந்தார். யூதர்கள் அழிக்கப்படவேண்டும் என்ற கொள்கை கொண்டவர்களில் இவரும் ஒருவராக இருந்தார். ஐச்மேனின் முக்கிய நண்பர்களில் ஒருவராக விளங்கிய இவர், வேகமாக யூதர்களை கொல்வதற்கு ஐச்மேனை ஆசுவாசப்படுத்தியவர் (ஜ.ப.செச்சட்-மேன், முப்தியும் ஜெர்மானிய அரசும், அஜ் அமீன் அல்-உசைனி உயர்தலும் வீழ்தலும் (நியூயார்க் : த. யோஸ்லப், 1965).

---

இஸ்ரயேலின் மறுமலர்ச்சி பற்றி வேதாகமத்தில் காணப்படும் தீர்க்கத்தரிசனங்களை மேற்கோள் காட்டி, மெனக்கிம் பிகின் (Menachim Begin) மற்றும் இட்சாக் சாமிர் (Yitzhak Shamir) என்ற பெயர் கொண்ட இரண்டு பிரதம மந்திரிகள், 1,30,000 யூத குடிமக்களை சமாரியாவிலும், யூதேயாவிலும் மற்றும் காசா பகுதியிலும் வளமாக வாழ முறையாக உதவினார்கள்.

1989 -ம் ஆண்டு திடீரென்று கம்யூனிசம் வீழ்ச்சியுற்றது. இதுவும் ஒரு மிகப்பெரிய அதிசயம். இதனால் மேலும் அதிசயத்தக்க விதமாய், திடீரென்று 5 இலட்ச ரஷ்ய யூதர்கள் இஸ்ரயேல் தேசத்தில் பெரும்வாரியாய் உட்புகுத்தினர். நிச்சயமாக பத்து அல்லது இருபது இலட்சம் யூதர்கள் இன்னும் சிறிது காலத்தில் வருவார்கள்.

ஆனால் வேகமாக சென்ற இஸ்ரயேலின் தீர்க்கத்தரிசனம் நிறைவேறாமல் நின்று போனது. 1992-ம் ஆண்டு நடந்த தேர்தலில், லுக்குத் (Likud) மற்றும் வலது சாரி கட்சிகள் அதிகபட்ச யூதர்களின் ஓட்டுகளைப் பெற்றாலும், கணிசமான இஸ்ரயேலிய அரேபியர்களின் வாக்குகளால் தொழிலாளர் கட்சி ஆட்சி அமைத்தது. பென்குரியன் மற்றும் கோல்டா மேயர் அவர்களின் தலைமையில் அமைந்திருந்த தொழிலாளர் கட்சிக்கோ, சீயோன் கொள்கைகள் முக்கிய குறிக்கோளாக இருந்தமையால், ''தோராவானது சீயோனில் இருந்து புறப்படும்'' என்று எண்ணினர். வெளித்தோற்றத்தில், இப்பொழுது உள்ள தொழிலாளர் கட்சியின் எழுச்சியூட்டும் உயர்ந்த கொள்கை என்பது ''வளைகுடாவில் ஒரு பொது சந்தை '', அதில் அரேபிய கடல் மற்றும் முஸ்லிம் நாடுகளின் நடுவில் ஒரு சிறிய தீவாக இஸ்ரயேல் தேசம் இருக்கிறது. இதன்பிறகு இரஷ்ய யூதர்களின் வருகையும் குறைய தொடங்கியது. ''சமாதானத்திற்கு பதிலாக நிலத்தை'' தரவேண்டும் என்ற எண்ணமும் உருவாக தொடங்கியது.

வேகமாக நிறைவேறி வந்த இஸ்ரயேல் சம்பந்தப்பட்ட வேதாகம தீர்க்கத்தரிசனங்கள் தடைபட்டது போல் தோன்றியதால்,பல கிறிஸ்தவர்கள் தீர்க்கத்தரிசன எதிர்பார்ப்புகளை மீண்டும் பரிசீலனை செய்யத் துவங்கியுள்ளார்கள். ஒருவேளை பாரம்பரிய சபைகள் கூறுவது சரியே, கிறிஸ்துவ ஆலையங்கள் நிரந்தரமாக இஸ்ரயேல் இடங்களை ஆக்கிரமித்துள்ளது. சில ஆயிரம் ஆண்டுகளாக அரேபியர்கள் அதிகளவில் பாலஸ்தீன தேசத்தில் வாழ்ந்து வருகின்றர் என்ற பாலஸ்தீனர்களின் கூற்று நிசப்தமான உண்மை. உலக நாடுகள் இஸ்ரயேல் தேசம் மீது அதிக அழுத்தம் கொடுத்து யூத நிலங்களை திருப்பி கொடுக்க தோன்றுகிறது அல்லவா? ஆனால் இந்த சந்தேகங்கள் வேதாகம அடிப்படை இல்லாமல் இருக்கின்றன. இன்று நடக்கக்கூடிய உலக காரியங்களை வைத்து வேதாகம தீர்க்கத்தரிசனங்களை விளக்கினாலும், இன்றைய செய்தி தலைப்புகளின்படி வேதாகம தீர்க்கத்தரிசனங்களை உறுதிப்படுத்த முடியவில்லை.

# தேவனுடைய தொலைநோக்கு பார்வை

ஒரு தொலைநோக்கு பார்வையானது எல்லா சமாதான நடவடிக் கையையும், ஒத்து இருத்தலையும் மற்றும் சமரசத்தையும் கடந்து செல்கிறது. அதுவே தேவனுடைய தொலைநோக்கு பார்வை. யூத கிறிஸ்துவ வேதாகமம் தேவனுடைய தொலைநோக்கு பார்வையை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவருடைய மறுக்கமுடியாத சமாதான திட்டத்தை அமுல்படுத்துவதையும் வெளிப்படுத்துகிறது. இங்கு கூறப்பட்டுள்ள காரியங்கள், தேவனுடைய தொலைநோக்கு பார்வையை ஆதாரமாக தருவதில் ஒரு முயற்சியாக காட்டப்பட்டுள்ளது.

**அத்தியாயம் 1 –** இஸ்ரயேல் தேசம் யூதர்களுக்கு எல்லா காலத்திற்கும் சொந்தமானது. அது அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படாது என்றும் தேவனுடைய வாக்குத்தத்தம் கூறுகிறது.

**அத்தியாயம் 2 –** யூத மக்களின் தற்காலிக வெளியேற்றத்திற்கு பிறகு,இஸ்ரயேல் தேசம் பல நூற்றாண்டுகளாக பாழாக்கப்பட்டு இருக்கும் என்று வேதாகம தீர்க்கத்தரிசனம் உரைக்கின்றது. இறுதியாக தேவன் நியமித்த காலத்தில், யூதமக்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள். இதனால் அந்நாட்டின் வளமை திரும்புவதால் சுற்றுப்புறத்தில் சூழ்ந்திருக்கும் அரேபியர்கள் கவரப்பட்டு பெரும் திரளாய், அந்த தேசத்திற்குள் உட்புகுவார்கள்.

**அத்தியாயம் 3 –** புறஜாதி நாடுகள் தேவனுடைய தேசத்தை பங்கிட்டு, அதன் பாகங்களை அரேபியர்களிடம் கொடுப்பார்கள் என்று தேவன் குறிப்பிடுகிறார்.

**அத்தியாயம் 4 –** என்னதான் சமாதான பேச்சுவார்த்தை நடந்தாலும், இறுதி இஸ்ரயேல்-அரேபியர் போரில் தனக்கு வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட இடங்களை, இஸ்ரயேல் தேசம் பெற்றுக்கொள்ளும் என்று வேதாகமம் உணர்த்துகிறது.

**அத்தியாயம் 5 –** இஸ்ரயேலில் மீதமுள்ளவர்கள் நிறைய பேர் இருப்பார்கள் என்று வேதாகமம் சொல்கிறது. தேவனுடைய இராஜ்யம் பூமியில் எருசேலமை தலைநகரமாக கொண்டு அமையும்போது, இஸ்ரயேலரும் அரேபியர்களும் ஒருமித்து இறுதியாக சமாதானத்தை அடைவார்கள்.

## அத்தியாயம் – 1

# வரலாற்றின் உரிமைகளை விளக்கும் தேவனுடைய தொலைநோக்குப் பார்வை

தங்களுக்கு இஸ்ரயேல் தேசத்தின் மீது வரலாற்று உரிமைகள் மற்றும் வரலாற்று வேர்கள் இருப்பதாக அரேபிய பாலஸ்தீனர்கள் கூறுகின்றனர். ஆனால் வரலாற்றின் தொலைநோக்கு பார்வையை விட, அவ்வரலாற்றை முன்னமே எழுதிய ஒருவரின் தொலைநோக்கு பார்வை பெரியதாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தையான வேதாகமம், இஸ்ரயேல் தேசம் பெறப்போகும் மிகச் சரியான எல்லையை குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஆபிரகாம் மற்றும் அவருடைய சந்ததியாரிடம் தேவன் செய்த உடன்படிக்கைபடியே இவ்வெல்லை அமைந்துள்ளது. இந்த வாக்குத்தத்தம் ஈசாக்கிடம் ஏற்படுத்தப்பட்டதே தவிர இஸ்மவேலிடம் இல்லை. அதன்பிறகு இஸ்ரயேல் என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோபிடம் கொடுக்கப்பட்டது. இஸ்ரயேலின் புத்திரர்கள் ‘‘எகிப்து நதி துவங்கி ஐபிராத்து நதிவரை உள்ள இடங்களை பெற்றுக் கொள்ளுவார்கள்’’ என்றும் அவ்வாக்குத்தத்தம் உறுதிப்படுத்துகின்றது (ஆதியாகமம் 15 : 18).

## வரலாற்றின் மிகப்பெரிய பெரும் திருட்டு

இனப்படுகொலையின் வரலாற்றை பற்றி வாதமாக பேசுவதற்கு முன்னமே, இஸ்ரயேல் மக்களுக்கு தேவன் தந்த வாக்குத்தத்தங்கள் பற்றி கிறிஸ்தவர்கள் மறுபரீசிலித்து வந்தனர். 1700 ஆண்டுகளாக இருந்த யூத விரோதக் கொள்கையினால் பாதிக்கப்பட்டதால், பாரம்பரிய கிறிஸ்தவர்கள் ‘‘மாற்று இறையியல்’’ என்ற கோட்பாட்டை உருவாக்கினர். உண்மையில் இவை ‘‘மறுபரிசீலனை மாற்று இறையருள்‘‘ என்பதே ஆகும். ஆதி சபையின் இறையியல் மேலாளர்கள் இயேசுவை ஏற்காத இஸ்ரயேல் மக்களை, தேவன் முழுவதும் புறந்தள்ளினார் என்ற தவறான முடிவுக்கு வந்தனர். தற்போதைய ஆவிக்குரிய இஸ்ரயேலர் ‘‘சபை’’ என்றும் அச்சபையே மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு பதிலாக இருக்கிறது என்ற கூற்றை கூறுகிறார்கள். இந்த ‘‘மாற்று இறையியல்’’ ஆனது, இன்றும் பல

கிறிஸ்துவ சபைகளில் இருக்கிறது. வேதாகம சத்தியத்தை சொல்லும் தேவ ஆலயங்களில் மெல்ல உள்ள நுழைந்துள்ளது, இன்றோ ''மறுபுனரைமப்பு'' என்ற தலைப்பபில் ஒரு சக்திபெற்ற இயக்கமாக வளர்ந்து கொண்டு வருகிறது. தங்கள் தேசம் முழுவதையும் இஸ்ரயேல் இழந்துவிட்டதாக பொய்யான காரியங்களை இந்த இறையியல் கூறுகின்றது. இயேசுவின் காலம் தொடங்கி தங்களுடைய மேன்மையை தொலைத்த அறுதிப் பெரும்பான்மையான யூத மக்கள், தங்களுடைய மகிமையான நித்திய வாழ்வை இழந்துவிட்டனர் என்று மிக பெரிய முயற்சியோடு கூறுவதே வரலாற்றின் மிகப்பெரிய பெரும் திருட்டு முயற்சி ஆகும்.

கிங் ஜேம்ஸ் வேதாகம (**King James Bible**) பதிப்பு முழுவதும் ''திருத்த இறையியல்'' நிறைந்துள்ளது என்பதை உதாரணமாக காட்டலாம். பழைய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசன அத்தியாயத்தில் இஸ்ரயேலுக்கும், யாக்கோபிற்கும் கொடுக்கப்பட்ட தேவனின் ஆசீர்வாதங்கள் குறித்த வாக்குத்தத்தங்கள் உள்ளன. திருத்தல்வாதியான வெளியீட்டாளர்கள் வேண்டுமென்றே யூதர்கள் பற்றி கூறும் வேதாகம அத்தியாய தலைப்புகளை மாற்றி, அந்த வசனங்கள் எல்லாம் சபைக்கு சொல்லப்பட்டது என்று தன்னிச்சையான முயற்சிகளை கொண்டு கூறி வருகின்றனர்.

சில இடங்களில் உள்ள ''இஸ்ரயேல்'' என்ற வார்த்தை ஆவிக்குரிய இஸ்ரயேலரான சபையை குறிக்கும். ஆனால் ''யாக்கோபிற்கு'' தரப்பட்ட வாக்குத்தத்தம் எப்போதும் ''மாம்சீக இஸ்ரயேலர்களையே'' குறிக்கும். யூத மக்களுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் பற்றி கூறும் முழு அதிகாரங்கள் எழுத்தியல் மூலமாக திருடப்பட்டுவிட்டன. இதையே மிகப்பெரிய திருட்டு என்று எளிய முறையில் கூறலாம். உதாரணமாக, ஏசாயா 43-ம் அதிகாரத்தில், தேவன் வாக்குத்தத்தங்கள் கொடுக்கும் நேரத்தில், யாக்கோப்பே என்றும் இஸ்ரயேலரே என்று கூறுவதைப் பார்க்கலாம். ஆனால் கிங் ஜேம்ஸ் வேதாகம பதிப்பிலோ, இந்த அதிகாரத்தின் தலைப்பு ''சபையை தம்முடைய வாக்குத்தத்தங்கள் மூலம் தேற்றுகிறார்'' என்று தன்னிச்சையாக தவறுதலாக எழுதப்பட்டுள்ளது.

இஸ்ரயேல் மக்கள் தேவனிடம் பெற்ற சாபத்தை வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டில் உள்ள அத்தியாயங்களை வாசிக்கும் பொழுதே,

யூதர்களுக்கு எதிரான மனநிலையை கொண்ட ‘‘மாற்று இறையியல்’’ தெளிவாக தெரிகிறது. இந்த அதிகாரத்தில் உள்ள ‘‘இஸ்ரயேல்’’ என்ற வார்த்தைக்கு ஆவிக்குரிய முறையில் பொருளை கண்டுபிடிக்க முயற்சிக்கவில்லை. எங்கெல்லாம் தேவன் இஸ்ரயேலர்களை சபித்த வசனங்கள் வெளிப்படுகிறதோ, அவை எல்லாம் யூதர்களையே குறிக்கின்றது. ஏசாயா 59-ம் அதிகாரத்தில் உள்ள தலைப்பு ‘‘யூதர்களின் பாவங்கள்’’ என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதனுடைய அதிகாரமான, ஏசாயா 60-ல் யூதர்களின் வருங்கால மகிமையை உணர்த்தும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் திருத்தவாதிகளால் திருடப்பட்டது. இதனை கிங் ஜேம்ஸ் வேதாகம பதிப்பில், ‘‘சபையின் மகிமை’’ என்று பொய்யான தலைப்பு கொண்டு எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இதனை வரலாற்று ஆசரியரான ஜேம்ஸ் பார்க் கூறும்போது: ‘‘கிறிஸ்தவ இறையியலாளர்கள் பழைய ஏற்பாட்டை இரண்டு மக்களின் கதையை சொல்லும் புத்தகமாக பிரித்து உள்ளனர். நன்மை செய்யும் யூதர்கள் அனைத்து துதியும், வாக்குறுதிகளும் பெற்றுக் கொள்ளுவார்கள் என்றும் பொல்லாத யூதர்களுக்கு குற்றங்களும், கண்டனமும் கிடைக்கும் என்று கூறுகிறார்[6]’’.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல், மாற்று இறையியலின் இவ்விளக்கமானது சாத்தியமான தருணத்தில் மாற்றப்பட்டு, திரும்ப திரும்ப பல நூற்றாண்டுகளாக கூறப்பட்டு வருகிறது.

## ‘‘மாற்று இறையியலும்’’ மற்றும் ஆதிசபையின் பிதாக்களும்

துரதிருஷ்டமான ‘‘மாற்று இறையியலின்’’ துவக்கம் எப்போது தொடங்கியது? இந்த ‘‘திருத்தல்வாதிகள்’’ அல்லது ‘‘மாற்று இறையியல்’’ என்பது ஆதிசபை பிதாக்களின் மனதில் வேரூன்றி இருந்த யூதர்கள் மீதுள்ள விரோதத்தன்மையை காட்டுகிறது. ஆதிசபையின் எழுத்தாளரான பர்னபாஸ் தன் நிருபத்தில் ‘‘தேவன் தந்த உடன்படிக்கை எதுவும் யூதர்களுக்கு எதிர்காலத்தில் இருக்காது’’என்று கூறுகிறார். ‘‘உடன்படிக்கை உங்களுக்கும், எங்களுக்கும் கொடுக்கப்பட்டது என்று சொல்லி உங்கள் பாவங்களோடு இதனை சேர்க்காதீர்கள்’’. ‘‘ஆமாம், அது எங்களுடையது; ஆனால் அவர்கள் நிரந்தரமாக இழந்து விட்டார்கள்’’ என்று உறுதியாக கூறுகிறார்.

யூத தலைவரான திரிப்பே (கி.பி 138) விற்கு, ஜஸ்டின் மார்டிர் (Justin Martyr) யூதர்களின் வேதாகமத்தை சுட்டிக்காட்டி கூறும்போது, ''வேதாகமம் உங்களுடையதாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அவை எங்களுடையது''. ''உங்கள் தேசத்திற்கென்று கொடுக்கப்பட்ட தீர்க்கத்தரிசன ஆசீர்வாதங்கள் அனைத்தும், எங்களுக்கு மாற்றித் தரப்பட்டுள்ளது'' என்று மேலும் கூறுகிறார்.

கி.பி. 387-ம் ஆண்டில், ஜான் கிறிஸ்டோம் (John Chrysostom) கோபமாக கூறுகையில் ''யூதர்களின் துன்பங்கள் ஆரம்பித்தது முதல் அவர்கள் பேய்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்..... அவர்கள் வெட்டுண்டு போகிறதற்கு மட்டும் தகுதி உடையவர்கள். முறைகேடாக வாழும் பன்றிகள் மற்றும் மாடுகளின் நடவடிக்கையை விட கீழான குணங்களை கொண்டவர்கள். யூதர்களின் வழிபாட்டு கூடமானது ஒரு விபச்சார கூடமாகவும், திருடர்களின் குகையாகவும், மூர்க்கமான மிருகங்கள் வாழும் குகையாகவும் உள்ளது''[9]. இன்னும் அதிகமாக வாதிடுகையில், கிறிஸ்தவர்கள் யூதர்களை அடித்துக் கொன்றார்கள் என்றால், அதன் பழி யூதர்கள் மேல் விழவேண்டியதே தவிர மாறாக ''தேவனுடைய சித்தத்தை'' செய்த கிறிஸ்தவர்கள் மேல் அல்ல[10].

கி.பி. 388-ம் ஆண்டு, மிலனின் பிஷப்பாக இருந்த அம்ப்ரோஸ், யூதர்களின் வழிபாட்டுத்தலத்தை தீயிட ஆணை பிறப்பித்தார். இதனால் ''கிறிஸ்துவை ஒதுக்கி தள்ளியவர்களுக்கு, இனிமேல் எங்கும் இடம் இருக்காது''என்றார். அவருடைய பார்வையில், ''யூதர்களின் வழிபாட்டுத்தலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பால் அழிக்கப்பட்டது'' என்று கூறினார்.

## மாற்று இறையியலும் மற்றும் யூதர்கள் மீதான எதிர்ப்பும்

யூதர்களின் மேல் உள்ள பகைமையினால், ஆதிசபை பிதாக்களால் உருவாக்கப்பட்டதுதான் ''மாற்று இறையியல்'' ஆகும். அதுபோல''மாற்று இறையியலை'' ஏற்றுக்கொண்டதால், யூதர்கள்மேல் வெறுப்புள்ளவராக மாறின மார்டின் லூத்தர் (Martin Luther) நமக்கு ஒரு உதாரணமாக

உள்ளார்.

கி.பி. 1523-ல் லூத்தர் எழுதிய ''அந்த இயேசுவும் யூதராக பிறந்தார்'' என்ற கட்டுரையில்: ''கத்தோலிக்கர்கள் யூதர்களை மனிதர்கள் போல நடத்தாமல், நாய்களை போல நடத்தினர். அவர்களுக்கு ஒன்றும் செய்யாமல், சபித்தும் மற்றும் அவர்களின் செல்வத்தையும் அபகரித்தனர். இதனால் நான் அனைவருக்கும் அறிவுறுத்தி தாழ்மையுடன் வேண்டுவது என்னவென்றால், யூதர்களை தயவுடன் நடத்துங்கள். வேதாகமத்தை அவர்களுக்கு விளக்குங்கள். இதன்மூலம் எல்லா யூதர்களும் நம்மிடம் வர வாய்ப்பு உள்ளது. நாம் அவர்களை தயவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் நம்முடன் போட்டிப்போட்டுக்கொண்டு வாழ உதவவேண்டும். சிலபேர்கள் இதில் பிடிவாதமாக இருந்தால், நமக்கென்ன? எல்லோரும் நல்ல கிறிஸ்தவர்கள் அல்ல'' என்று கூறுகிறார்[12].

லூத்தர் எதிர்பார்த்தது போல், யூதர்கள் யாரும் மனந்திரும்பவில்லை. இதனால் வெறுப்படைந்த லூத்தர், சில காலத்திற்கு பிறகு “யூதர்களும் அவர்களுடைய பொய்கள் பற்றியும்” என்ற துண்டு பிரசாரத்தை வெளியிட்டார். இதில் யூதர்களுக்கு எதிராக எட்டு செயல்களை செய்ய சொல்கிறார்.

அவையாவன:

* யூத வழிப்பாட்டு தலங்களை எரித்தல்.
* யூதர்களின் பயணத்தை தடைச் செய்தல்.
* யூதர்களின் குடியிருப்புகளை அழித்தல்.
* யூதரல்லாதவர்களுக்கு யூதர்களால் கொடுக்கப்படும் பணத்திற்கு வரும் வட்டியை தடுத்தல் மற்றும் யூதர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தல்.
* யூதர்களின் புனித புத்தகங்களை பறிமுதல் செய்தல்.
* வலுகட்டாயமாக யூதர்களை உழைக்க வைத்தல்.
* ரபிக்களின் கற்பித்தலை தடைச் செய்தல்
* கிறிஸ்தவர்கள் வாழும் மாகாணத்தில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்படுதல்

யூத மக்கள் தங்கள் நாட்டிற்கான உரிமையை இழந்து விட்டனர் என்று “மாற்று இறையிலாளர்கள்” இன்றும் தவறுதலாக கூறி வருகின்றனர். இஸ்ரயேல் மக்கள் தங்கள் சொந்த தேசத்தில் குடியமர்த்தப்படுவார்கள் என்ற ஏசாயா மற்றும் எரேமியா புஸ்தகங்களில் சொல்லப்பட்ட அனைத்து தீர்க்கத்

தரிசனங்களும் பாபிலோனிய சிறையிருப்புக்கு (கி.மு.536) பிறகு நாடு திரும்பிய இஸ்ரயேல் மக்களின் காலத்திலே நிறைவேறியதாக கூறுகின்றனர். கி.மு. 536-க்கு பிறகு அவர்களுக்கு கிடைக்கப்போகும் ஆசீர்வாதங்கள் எல்லாம், அவர்கள் காட்டும் விசுவாசத்தை பொருத்தே தோன்றும். விசுவாசத்தை நிருபிக்காமல், ஆனாலும் விசுவாசமில்லாமல் இயேசுவை மறுத்து கொலை செய்தலால் ஒரு நாடாக அல்லது மக்களாக கிடைக்கப் பெற விருந்த ஆசீர்வாதங்களை இழந்தனர்.

### இதனை பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது?

இஸ்ரயேல் மக்கள் தங்கள் தேசத்தை இழந்துவிட்டனர் என்று கூறும் மாற்று இறையியலாளர்களின் கூற்றை எரேமியா தீர்க்கத்தரிசி வன்மையாக மறுக்கிறார். இதனை பற்றி கூறுகையில்:

சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காகவும் சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக்காகவும் கட்டளையிட்டவரும், அலைகள் காந்தளிக்கத்தக்கதாகச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரும், சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவருமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

இந்த நியமங்கள் எனக்கு முன்பாக இல்லாதபடி ஒழிந்து பேனால், அப்போது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுவது என்னவென்றால்: மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்து விடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 31:35-37.

வானத்துக்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களை நான் காவால், பகற்காலத்தையும் இராக்காலத்தையுங்குறித்து நான் பண்ணின உடன்படிக்கை அற்றுப்போகிறது உண்டானால், அப்பொழுது நான் யாக்கோபின் சந்ததியையும், என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் தள்ளி, நான் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் சந்ததியை ஆளத்தக்கவர்களை அதிலிருந்து எடுக்காதபடிக்கு வெறுத்துப்போடுவேன், அவர்களுடைய சிறையிருப்பை நான் திருப்பி, அவர்களுக்கு இரங்குவேன் என்று கர்த்தா சொல்லுகிறார் என்றார். எரேமியா 33:25,26.

இந்த இரண்டு எரேமியா தீர்க்கத்தரிசனங்களும், மாற்று இறையியல் கூற்றை தகர்த்தெரிந்தன. இரவையும், பகலையும், வானம் மற்றும் பூமியை இயக்கும் செயல்கள், எப்போது தேவனுடைய பிரபஞ்சத்தின் கட்டுபாடுகள் மூலம் நிறுத்தப்படுகிறதோ, அன்றுதான் ஆபிரகாம், ஈசாக் மற்றும் யாக்கோபின் வித்தை தேவன் நீங்கலாக்குவார். இதன் பின்பு நாடு திரும்பிய யூதர்களால் (பழைய எருசலேம்) நகரம் தேவனுக்கு கட்டப்படும் என்றும் அந்த நகரம் என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, இடிக்கப்படுவதுமில்லை என்றும் எரேமியா கூறுகிறார். யாக்கோபின் வம்சத்தாரே (இஸ்ரயேல்) முழு எருசலேமையும் (கிழக்கு எருசலேம் உட்பட) நிரந்தரமாக பெற்றுக் கொள்ளுவார்கள், மாறாக ஏசா மற்றம் இஸ்மவேல் வம்சத்தார் அல்ல.

பாபிலோனிய சிறையிருப்பில் இருந்து யூதர்கள் திரும்பி, இரண்டாம் ஆலயத்தை கட்டும் சமயத்தில் எழுதப்பட்டது சகரியா புஸ்தகம் ஆகும். ஆனாலும் சகரியா தீர்க்கத்தரிசி யூதர்களின் வருங்கால சிதறடிக்கப்படுதலையும் மற்றும் இறுதியில் அவர்கள் தங்கள் சொந்த தேசமான இஸ்ரயேலில் கூட்டிச் சேர்க்கப்பட்டு, இறுதியாக பூமியில் கர்த்தருடைய இராஜ்யம் எருசலேம் நகரில் ஸ்தாபிக்கப்படும் என்று தீர்க்கத்தரிசனமாக கூறியுள்ளார்.

> இதோ, கிழக்குதேசத்திலும் மேற்குதேசத்திலுமிருந்து என் ஜனங்களை நான் இரட்சித்து,
>
> அவர்களை அழைத்துக் கொண்டு வருவேன். அவர்கள் எருசலேமின் நடுவிலே குடியிருப்பார்கள். அவர்கள் எனக்கு உண்மையும் நீதியுள்ள ஜனமாயிருப்பார்கள். நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். சகரியா 8:7,8
>
> சம்பவிப்பதென்னவென்றால் யூதா வம்சத்தாரே, இஸ்ரேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபாயிருந்து போலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன். பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடபபடக்கடவது. சகரியா 8:13
>
> இன்னும் ஜனங்களும் அனேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள் என்று சேனையின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு பட்டணத்தின் குடிகள் மறுபட்டணத்தின் குடிகளிடத்தில் போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்துப் போவோம் வாருங்கள். நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள்.

அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்.

அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக் கொண்டு தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம். ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சோதனைதாரின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார். சகரியா 8:20-23

70 வருட பாழாக்கப்படுதல் /சிறையிருப்புக்கு பிறகு இஸ்ரேல் மக்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி முதன் முதலாக குடிப்பெயர்வார்கள் என்று ஏசாயா, எரேமியா, தானியேல், ஆமோஸ் மற்றும் பல தீர்க்கதரிசிகள் நிச்சயமாக கூறுகிறார்கள். ஆனால், தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் ''அந்த நாட்களில்'' ''அந்த இறுதி நாட்களில்'' இறுதியாக கூட்டி சேர்க்கப்படுவார்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். உலகம் முழுவதும் சமாதானம், சந்தோஷம், செழிப்பு மற்றும் பொருளாதார பாதுகாப்பு தரக்கூடிய தேவனுடைய இராஜ்யம் (ஏசாயா 2:2-4; எரேமியா 31:29-34; மீ.கா 4:1-7) எப்போது ஸ்தாபிக்கப்பட போகிறது? தயை பெற்று, இயேசுவின் மரணத்திற்கு பிறகு பூமியின் மேல் அமைய இருக்கும் தேவனுடைய வருங்கால இராஜ்யத்தில் இஸ்ரயேல் மீண்டும் முக்கிய பங்கு வகிக்கும் என்று ஏசாயா தீர்க்கத்தரிசி சில தீர்க்கத்தரிசனங்களை வெளிப்படுத்துகிறார்.

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம்:

கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்.

திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்.

நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.

அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. ஏசாயா 2:1-4

## இரண்டாம் தடவை கூட்டிச் சேர்க்கப்படுதல்

பாபிலோனிய சிதறடிப்புக்கு முன்னதாகவே ஏசாயா புஸ்தகம் எழுதப்பட்டிருந்தாலும், இஸ்ரயேலை இரண்டாம் தடவையாக கர்த்தர் கூட்டிச் சேர்ப்பார் என்றும் அவை கூறுகிறது. 70 வருட பாழாக்கப்படுதல்/ சிறையிருப்புக்கு பிறகு, கர்த்தர் அவர்களை முதன்முறையாக கூட்டிச் சேர்த்தார். இயேசு இறந்து நாற்பது வருடங்கள் பிறகே, அதாவது கி.பி. 70-ஆண்டில் ரோம பேரரசின் இராணுவத்தால் எருசலேம் நகரம் பாழாக்கப்படும் வரை யூத மக்கள் அங்கிருந்து சிதறடிக்கப்படவில்லை. இதன் பின்னரே அவர்கள் சிதறடிக்கப்பட்டனர். நமது காலத்தில் நடக்கும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தங்கள் தேசத்தில் யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுதல், ஏசாயா தீர்க்கத்தரிசனத்தால் கூறப்படும் ‘‘இரண்டாம் கூட்டிச் சேர்க்கப்படுதல்’’ ஆகும். இதனை ஏசாயா கூறுகையில்,

அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும் எகிப்திலும் பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக் கொள்ள திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி,

ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். (ஏசாயா 11 : 11-12)

பாபிலோனிய தேசத்தை தாண்டி மிக தூரத்தில் இருக்கும் பல நாடுகளில் இருந்து ''இரண்டாம் தடவை'' கூட்டிச் சேர்க்கப்படுதல் நடக்கும் என்று முன்னமே கணிக்கப்பட்டது. தங்கள் பிதாக்களுக்கு தெரியாத தேசத்திற்கு யூதர்கள் சிதறடிக்கப்படுவார்கள் என்று உபாகமம் புஸ்தகம் நமக்கு விளக்குகிறது. இதனை உபாகமம் 28:36-37 பார்க்கையில்:

> ''கர்த்தர் உன்னையும், உனக்காக நீ ஏற்படுத்திக்கொண்ட ராஜாவையும், நீயும் உன் பிதாக்களும் அறியாத ஜாதிகளிடத்துக்குப் போகப்பண்ணுவார், அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய். கர்த்தர் உன்னைக் கொண்டுபோய் விடும் எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய். உபாகமம் 28;36-37

மோசே கூறின அதே வார்த்தைகளை எரேமியா தீர்க்கத்தரிசி இங்கு கூறியுள்ளதால், பிதாக்கள் என்ற வார்த்தை ஆபிரகாம், ஈசாக் மற்றும் யாக்கோப்பை நிச்சயமாக குறிப்பிடுவதாக எரேமியா கூறுகிறார். இஸ்ரயேலர்கள் தங்கள் தேசத்தை சுதந்தரிப்பதற்கு முன்னமே இருந்த ''பிதாக்களையே'' இத்தீர்க்கத்தரிசனம் குறிக்கின்றது. மாறாக திருத்தல்வாதிகள் பொய்யாக கூறுவது போல், இஸ்ரயேல் தேசத்தை சுதந்தரித்த பின்னர் வழிநடத்தி அழைத்து சென்ற கீழ்ப்படியாமையின் தலைவர்களாகிய இந்த பிதாக்கள் அல்ல. 70 வருட பாழாக்கப்படுதல்/ சிறையிருப்பின் காலத்திற்கு முன்னமே எரேமியா தீர்க்கத்தரிசி வாழ்ந்தாலும், அவர் மிகவும் சரியாக, தங்கள் பிதாக்களுக்கு தெரியாத தூர தேசத்திலிருந்து இரண்டாம் தடவையாக யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று முன்னமே கணித்து கூறியிருந்தார். அவர்களின் ''பிதாவாகிய'' ஆபிரகாம் வாழ்ந்த பாபிலோனிய மற்றும் கல்தேயர் தேசங்களையும் தாண்டி இரண்டாம் சிதறடிக்கப்படுதல் நீளும். ஆதலால் இரண்டாம் சிதறடிக்கப்படுதலையும் மற்றும் இன்றளவும் அதிசயமாக நிறைவேறிக் கொண்டிருக்கும் இரண்டாம் கூட்டிச் சேர்த்தலையும் பற்றிய இரண்டு தீர்க்கத்தரிசனங்களையும் பற்றி எரேமியா இங்கு கூறுகிறார்.

> ஆதலால், உங்களை இந்தத் தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன், அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களை சேவிப்பீர்கள், அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை. எரேமியா 16;13-15.

> ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய வனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள், நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திருப்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 16;13-15

பாபிலோனிய சிறையிருப்புக்கு முன்னமே எழுதப்பட்ட, ஆனால் இன்று கடைசி காலத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கத்தரிசனமானது செப்பனியா 3:8, 9 ல் உள்ளது. இந்த தீர்க்கத்தரிசனம் கூறும் காலத்தில், கர்த்தர் தன் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் பூமியிலுள்ள சகல ஜாதிகளின் மேலும் ஊற்றுவார். மேலும் கூறுகையில், ‘‘அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக (உண்மையான சுவிசேஷம்) மாறப் பண்ணுவார். இதனால் ஜனங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு கர்த்தருடைய நாமத்தை தொழுதுக் கொள்ளுவார்கள்’’. கடந்த காலங்களில் ஒருபோதும் ‘‘எல்லோரும்’’ கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டதே இல்லை.

கடைசி காலத்தில் நடக்கும் மாம்சீக இஸ்ரயேலர்களின் திரும்ப அமைக்கப்படுதல் மற்றும் கர்த்தருடைய இராஜ்யத்தில் இஸ்ரயேலின் பங்கு ஆகியவையும் இந்த அதிகாரத்தில் மிகவும் அழகாக கூறப்பட்டுள்ளது.

> இதோ, அக்காலத்தில் உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன். நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்க்க கொள்வேன். அவர்கள் வெட்கம் அனுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்.
>
> அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டு வருவேன். இக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்வேன். உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (செப்பனியா 3:19-20)

இவ்வகையான கடைசி கால தீர்க்கத்தரிசனங்கள், பாபிலோனிய சிறையிருப்புக்கு பிறகு திரும்பின இஸ்ரயேலர்களின் காலத்தில் நிச்சயமாக நிறைவேறவில்லை. தேவனுடைய இந்த தீர்க்கத்தரிசன வாக்குத்தத்தின்படி

யூதர்கள் இடம் பெயர்க்கப்படவோ அல்லது மாற்றி வைக்கப்படவோ இல்லை. நவீன கால இஸ்ரயேலர்களை குறித்து கூறப்பட்ட இந்த தீர்க்கத்தரிசனம் கண்டிப்பாக நிறைவேறும்.

## ''இனிமேல் பிடுங்கப்படுவதில்லை''

இறுதியாக யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு முடிவில்லா சந்தோஷமும், ஆசீர்வாதங்களும் கிடைக்கும் என்று இக்காரியங்கள் பற்றி வேதாகமம் கூறுகிறது.

> ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக்காப்பார் என்று சொல்லுங்கள்.
>
> கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக் குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடி வருவார்கள், அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும், அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை. (எரேமியா 31:10-12)

இஸ்ரயேல் தங்கள் தேசத்தில் மீண்டும் அமர்த்தப்பட்ட பின்னர் அவர்கள் அனைரும் நித்திய மகிழ்ச்சியை பெறுவார்கள். ஆனால், இவை வருங்காலத்தில் நடக்க வேண்டிய காரியமாக உள்ளது.

> ''என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பை திருப்புவேன். அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.
>
> அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன். நான் அவர்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப் படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார். ஆமோஸ் 9;14-15

இந்த தீர்க்கத்தரிசன வசனங்களை எல்லாம் அடையாள பாஷையில் பொருள் கொள்ளக் கூடாது. மீண்டும் இஸ்ரயேல் மக்கள் ‘‘தங்கள் சொந்த தேசமான, அவர்களுடைய பிதாக்களின் தேசமான கானான் தேசத்தில் நடப்படுவார்கள்’’ என்றே சரியாக படிக்க வேண்டும். ஆபிரகாம் மற்றும் அவரின் வித்துடன் தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கை மூலமாக, ஆபிரகாமின் சந்ததியாருக்கு நித்திய சுதந்திர தேசமாக இஸ்ரயேல் தேசத்தை கொடுத்துள்ளார். இந்த வாக்குத்தத்தம் தேவனால் அருளப்பட்டதால், அவை நிச்சயமாக நிறைவேறும். ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானது என்றும் நிலைத்து நிற்கும்.

> ‘‘லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.
>
> நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து.
>
> உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப் பண்ணுவேன். ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். ஆதியாகமம் 13;14-17
>
> ‘‘நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி. உனக்கு அதைத் தருவேன் என்றார். ஆதியாகமம் 17;8

‘‘இனிமேல் பிடுங்கப்படுவதில்லை... தேசம் எப்பொழுதும் உங்களிடமே இருக்கும்’’.. ‘‘நித்திய சுதந்திரமாக’’- இதுபோன்ற வசனங்கள் இஸ்ரயேலின் எதிர்க்காலத்தையும் மற்றும் நித்தியமாக தேசத்தை சுதந்தரித்து கொள்ளுவதையும் குறிப்பிடுகிறது. கானானை குறித்து தேவன் குறிப்பாக இந்த வாக்குத்தத்தை கொடுத்தார்:

> ‘‘நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி. உனக்கு அதைத் தருவேன் என்றார். ஆதியாகமம் 17;8

ஆதியாகமத்தில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக, ஆபிரகாம் இன்னும் தேசத்தை பெற்றுக் கொள்ளவே இல்லை என்று கிறிஸ்துவரான ஸ்டீபன் கூறுகிறார் (அப்போஸ்தலர் 7:5).

ஆபிரகாமும் அவருடைய வம்சத்தாரும் (யூத மக்கள்) தங்கள் தேசத்தை கர்த்தரின் இராஜ்யத்தில் நித்திய சுதந்தரமாக பெற்றுக் கொள்ளுவார்கள் என்று ஸ்டீபன் கூறுகிறார். கானான் தேசம் பரலோகத்தில் இல்லை, மாறாக பூமியில் தான் உள்ளது.

இந்த தீர்க்கத்தரிசனங்கள் எல்லாம் அப்போஸ்தலர் பவுலால் சொல்லப்பட்ட ரோமர் 11:25-36 காரியத்திற்கு ஒத்து வருகிறது. ஆதாமின் மரணத்தில் இருந்தும் மற்றும் நியாயபிரமாணத்தின் சாபத்தில் இருந்தும் எல்லா இஸ்ரவேலரும் காக்கப்படுவார்கள். ஏனெனில் ''தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே'' (ரோமர் 11:29).

**வேதாகம சீயோன்காரர்கள்–இஸ்ரயேலின் ஜாமக்காரர்கள்**

தற்போதைய இடப்பிரச்சினைகள் மற்றும் ''சமாதான நடவடிக்கைகள்'' பற்றி கூறும் மிகவும் தகுந்த வேத வசனம் எரேமியா 31:5-10 ஆகும். கடைசி காலத்தில் தங்கள் தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் யூதர்களை குறித்து கர்த்தர் கூறுகையில், ''மறுபடியும் (சிதறடிக்கப்பட்ட நாடுகளில் இருந்து மீண்டும் வந்த சமயத்தில்) சமாரியாவில் (மேற்கு கரை) மலைகளிலே திராட்சத் தோட்டங்களை நாட்டுவாய்... சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்கும் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் (மேற்கு கரை) மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறும் காலம் வரும்''. வேதாகம சீயோனார்களே ''ஜாமக்காரர்கள்'' ஆவார். அவர்களில் பல பேர் சமாரியா மற்றும் எப்பிராய்மின் மலைகளில் வாழ்கிறார்கள். சமயம் சார்பற்ற இஸ்ரயேலர்களை நோக்கி, கர்த்தரிடமும் அவருடைய வேதாகமிடமும் திரும்பி வாருங்கள் என்று வேதாகம சீயோனாளர்கள் அழைக்கிறார்கள். வேதாகம சீயோனர்களுக்கும் மற்றும் சமய சார்பற்ற இஸ்ரயேலர்களுக்கும் மத்தியில் இன்றளவும் விவாதம் நடந்துக் கொண்டு தான் இருக்கிறது.

ஆனால், வசனம் 7 - கிறிஸ்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட வசனமாகும். ''யாக்கோபின் (மாம்சீக இஸ்ரயேலர்) நிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரின் (அமெரிக்கா இன்று ஜாதிகளின் தலைவராக உள்ளது) ஆர்ப்பரியுங்கள், சத்தத்தைக் கேட்கப் பண்ணி,

துதித்து: கர்த்தர் தாமே, இஸ்ரயேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள் (இங்கு கிறிஸ்தவர்கள், மாம்சீக இஸ்ரயேலரோடு கெம்பீரித்து பாட அறிவுறுத்தப்படுகிறார்கள்)''[14]. இஸ்ரயேல் மக்களுக்காகவும், சமாரியா மற்றும் எப்பிராயீமின் (மேற்குக் கரை) மலையில் வசிக்கும் மக்கள் அனைவருக்காகவும் தேவனிடத்தில் கிறிஸ்தவர்கள் வேண்டிக் கொள்ள வேண்டும். தேவன் என்ன செய்துக் கொண்டிருக்கிறார் என்று அமெரிக்க தேசத்திடம் கிறிஸ்தவர்கள் ''வெளிப்படுத்த'' வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேவனுடைய காரியங்களை செய்ய கர்த்தருக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு தருகிறதா? இஸ்ரயேல் தேசம் மேற்குக் கரையை திருப்பி தர வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் தருவதால், நிச்சயமாக கர்த்தருக்கு விரோதமான செயல்களையே அமெரிக்கா செய்துக் கொண்டிருக்கிறது. கர்த்தருக்கு விரோதமாக அமெரிக்கா இருப்பதால், ''இஸ்ரயேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் (சமாரியாவில் வாழ்பவர்கள்) என் சேஷ்டபுத்திரானயிருக்கிறான்''என்று கர்த்தர் கூறுகிறார் (எரேமியா 31:9-12). மாம்சீக இஸ்ரயேலரான, யாக்கோப்பை மீண்டும் அவர்களின் தேசத்தில் கர்த்தர் அமைக்கிறார் என்பதை அனைத்து நாடுகளும் கண்டு உணர வேண்டும் என்பதையே இத்தீர்க்கத்தரிசனம் வெளிப்படுத்துகிறது.

மாம்சீக இஸ்ரயேலருக்கென கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் கிறிஸ்தவர்களுக்கு என்று கொடுக்கப்படவில்லை. பாபிலோனிய சிறையிருப்புக்கு பிறகு தங்கள் சொந்த தேசத்திற்கு யூதர்கள் திரும்பி வருவதை இந்த வாக்குத்தத்தம் கூறாமல், மாறாக அதிசயத்தக்க வகையில் இன்று தேசமாக மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள் என்றே விளக்குகிறது. இன்று இருக்கக்கூடிய இஸ்ரயேல் இனிமேல் ''பிடுங்கப்படபோவதில்லை'', எப்போதுமில்லை.

---

+ ஜாதிகளின் தலைவன் என்ற வார்த்தையை ஐக்கிய நாடுகள் சபை என்றும் மாற்று பெயராக பயன்படுத்திக் கொள்ளலாம்.

---

## அத்தியாயம் - 2

# வரலாற்று உரிமைகள் - வரலாற்றின் கண்ணோட்டம்

70 வருட பாபிலோனிய சிறையிருப்பு/பாழாக்கப்படுதல் தவிர, இஸ்ரயேல் தேசத்தில் எந்த இடைவெளியும் இல்லாமல் 1700 வருடங்கள் ஒரு தேசமாக கி.பி. 70-135 வரை யூத மக்கள் வாழ்ந்து வந்தனர். கி.பி. 70-ல் எருசலேம் நகரம் அழிக்கப்படுவதற்கு முன்னும் மற்றும் யூதர்கள் மிகவும் அதிகமாக கொல்லப்பட்டு, இரண்டாம் தடவையாக ரோம இராஜ்யத்தால் சிதறடிக்கப்படுவதற்கு முன்னரும், இஸ்ரயேலில் இருந்த யூதர்களின் மக்கள் தொகையானது 30 இலட்சத்தை தாண்டியது[+15].

யூதர்களுக்கு உண்டான தேச உரிமையை தேவன் அவர்களுக்கு கொடுத்தாரேயானால், பின் எதற்கு யூதர்கள் இஸ்ரயேல் தேசத்தில் இருந்து ரோமர்களால் விரட்டியடிக்கப்பட்டனர்? ‘‘பாலஸ்தீனம்’’ என்று ரோமர்களால் பெயர் மாற்றி அழைக்கப்பட்ட தேசத்தின் கதவானது, பல நூற்றாண்டு காலமாக யூதர்களுக்கு மட்டும் ஏன் அடைக்கப்பட்டது? யூதர்கள் சிதறடிக்கப்பட்ட காரணத்தை இயேசு இங்கு விவரிக்கிறார். தன்னை இஸ்ரயேலின் இராஜா என்று வெளிப்படுத்திய பிறகும் (சகரியா 10:9 தீர்க்கத்தரிசனம் இதன்மூலம் நிறைவேறிற்று), இஸ்ரயேல் மக்கள் தீர்க்கத்தரிசகளை கொலை செய்து, அவரை ஏற்றுக் கொள்ள மறுத்தனர் என்று இயேசு குறிப்பிடுகிறார்.இதோ, இதுமுதல் உன் வீடு பாழாக்கிவிடப்படும் என்றும் இயேசு கூறினார் (மத்தேயு 23:37)[#16]. இதை போலவே சகரியா தீர்க்கத்தரிசி முன்னமே கணித்து கூறுகையில், அரணாக விளங்கிய இயேசுவிடம் யூதர்கள் திரும்பாததால், கர்த்தர் அவர்களுக்கு இரட்டிப்பாய் (எபிரேய வார்த்தை மிஸ்னா: சமபகுதி ) கொடுப்பார். யூத மக்கள் எப்படி தயையின் காலத்தை தேவனிடம் இருந்து அனுபவித்தனரோ, அதே சம கால பகுதியை தண்டனையின் காலமாக அனுபவிக்க வேண்டும் (சகரியா 10:12).

---

+ ஜோஸோபஸின் இலக்கான 50 - 70 இலட்ச மக்கள் தொகையை தற்போது எல்லா அறிஞர்களும் ஒத்துக் கொள்கின்றனர்.

# பார்க்க வெளி 11.8. தேவனுடைய கணிப்பின்படி, கிறிஸ்தவ மார்க்கமும் இயேசுவின் மரணத்திற்கு குற்றவாளியாகின்றன.

---

சமபகுதி காலமான தண்டனையின் காலத்தை பற்றி எரேமியா தீர்க்கத்தரிசி முன்னமே கணித்து கூறுகையில், தேவன் ''அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன்'' என்று கூறியுள்ளார். இவையெல்லாம் இஸ்ரயேல் தேசத்தில் யூதர்கள் குடியமர்த்தப்படுவதற்கு முன்னரே நிறைவேறும் (எரேமியா 16:14-18, குறிப்பாக வசனம் 18). பாலஸ்தீனம் மீது ஆட்சிக் காவலராக பிரிட்டன் இருந்தபோது, பெர்லின் காங்கிரஸ் நாடுகளின் கூட்டமைப்பில் பிரிட்டனின் பிரதமராக விளங்கிய பென்ஜமின் டிஸ்ரேலி, பாலஸ்தினத்தின் கதவு யூத மக்களுக்கு 1878-ம் ஆண்டு திறக்க தம்முடைய இராஜதந்திர திறனை உபயோகப்படுத்தினார். காங்கிரஸ் நாடுகளின் கூட்டமைப்பை அணுகிய டிஸ்ரேலி, பாலஸ்தினத்தை தங்களுடைய முழு கட்டுபாட்டில் கொண்டு வந்து விட்டால், ''ஒரே மொழியை பேசக் கூடிய, ஒரே மனநிலையை கொண்ட பத்து இலட்சம் வலுவான யூதர்களை திரளாக திருப்பி, சுயாட்சியையும் விடுதலையையும் பெற முடியும்'' என்று எண்ணினார். இந்த நிகழ்வுகள் மூலம் பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடிப்பெயர்தலுக்கும், அவர்கள் இடங்கள் வாங்குவதற்கும் இருந்த தடை இறுதியாக தளர்த்தப்பட்டது.

இந்த காலத்தில் தான், யூதர்கள் முதன்முதலாக தங்களுடைய விவசாய குடியிருப்புகளான ''பெத்தா திக்வா'' வை தங்கள் முற்பிதாக்கள் வாழ்ந்த பழமையான தேசத்தில் அமைத்தார்கள்[18]. இதற்கு ''நம்பிக்கையின் வாசல்'' என்று அர்த்தமாம். இங்குதான் குடிப்பெயர்ந்த யூதர்கள் தங்கள் நிலத்தை சீர்திருத்த தொடங்கினர்[19]. 1878-ம் ஆண்டு தொடங்கப்பட்ட யூதர்களின் கூட்டிச் சேர்த்தல், தேவனின் தயை அவர்களுக்கு மீண்டும் கிடைத்துவிட்டது என்பதற்கு ஒரு முதற் உறுதியான அடையாளமாக இருக்கிறது.

தேசம் ''மனுஷனில்லாமலும், மிருகமில்லாமலும் அவாந்தரவெளியாய்'' ஆன பிறகே யூதர்கள் தங்கள் தேசத்தில் குடியமர்த்தப்படுவார்கள் என்று எரேமியா தீர்க்கத்தரிசனம் உரைக்கிறார். தேசம் திரும்ப அமைக்கப்படுதலின் வாக்குத்தத்தமானது, பாபிலோனில் இருந்து யூதர்கள் தங்கள் 70 வருட சிறையிருப்புக்கு பிறகு திரும்பிய காலத்தில் நிறைவேறவில்லை என்பதனை எதனை வைத்து தெரிந்துக் கொள்வது? அப்படியிருக்க 70 வருட சிறையிருப்பின் காலத்திற்கு முன்னரே

எரேமியா தீர்க்கத்தரிசி இதைபற்றி எழுதியுள்ளார். மேசியாவின் அரசாட்சியில் யூதர்கள் நிரந்தரமாக குடியமர்த்தப்படுவார்கள் என்று வசனம் 15, 16 கூறுகிறது. ''தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன்... எருசலேம் சுகமாய் தங்கும்''. ஆனால் 70 வருட பாழ்க்கடிப்பு/ சிறையிருப்புக்கு பிறகு மீண்டும் அமைக்கப்பட்ட எருசலேம் நகரம் ''பாதுகாப்பாய் குடியிருக்கவில்லை''. இரண்டாம் முறை சிதறடிக்கப்பட்ட காலத்திற்கு பிறகு, பல நாடுகளில் இருந்து கூட்டிச் சேர்க்கப்பட்ட யூதர்கள் நிரந்தரமாக தங்கள் சொந்த தேசத்தில் குடியமர்த்தப்படுவார்கள் என்று இயேசு தீர்க்கத்தரிசனம் கூறுகிறார் (லூக்கா 21 : 24).

கி.பி.70 முதல் இன்று வரை நடைபெற்று வரும் கூட்டிச் சேர்க்கப் படுதலின் காலம் வரை, இஸ்ரயேல் தேசம் முழுவதும் மனுஷனிமில்லாமலும், மிருகமில்லாமலும் அவாந்திரவெளியாய் இருக்க வேண்டும் என்று தேவன் எண்ணுகிறார். ஏன்? இதன் பிறகே வெகு யூத ஜனங்கள், குறிப்பிட்ட தீர்க்கத்தரிசன காலத்தில், தங்கள் தேசத்தில் குடிப்பெயறுவார்கள். வேறு எந்த தேசமும் இந்த இடைப்பட்டக் காலத்தில் பாலஸ்தீனாவில் தன்னை நிலைநிறுத்த முடியாது. இங்கே தான் வேதாகம கூற்றுக்கும், அரேபிய பாலஸ்தீனர்களின் கூற்றுக்கும் ஒரு நம்பத்தன்மையான இடைவெளி இருப்பதை நாம் பார்க்கலாம். தங்களுடைய தேசத்தில் யூதர்கள் தேவனால் கூட்டிச் சேர்க்கப்படும் வரை, பெரும் அளவிலான யூதர்களின் சிதறடிப்பு நடைபெறும் என்றும் இதனை தொடர்ந்து பல நூற்றாண்டு காலமாக கொஞ்சம் அளவிலே குடியிருப்பார்கள் என்றும் வேதாகமம் கூறுகிறது. ஆனால், பாலஸ்தீன தேசம் கி.பி.640 – 1099 ஆண்டு வரை அரேபியர்களால் ஆளப்பட்டதால், பாலஸ்தீன நாகரீகம் ஒன்று உருவானது என்று அரேபிய பாலஸ்தீனர்களோ கூறுகிறார்கள். இந்த இரண்டு கூற்றில் எந்த கூற்று வரலாறு வாயிலாக உண்மையானது?

## வரலாற்றின் பதிவு

கி.பி.70 மற்றும் கி.பி.135-ல் யூதர்கள் அதிகமாக சிதறடிக்கப்ட் டிருந்தாலும், தங்கள் இஸ்ரயேல் தேசத்தின் மீது இருந்த முழு ஈடுபாட்டால், சிலபேர் எல்லைக்கு வெளியே காலத்தை கடத்தி, அமைதியான காலத்திற்காகவும் காத்திருந்து திரும்பி வர எண்ணினர். ஆதிசபை பிதாக்களில் ஒருவரான, லூரிஜென், கி.பி.231-254 காலத்தில், பாலஸ்தீன நாட்டில் தங்கி வாழ்ந்து வந்தார். அந்த காலத்தில் அங்கு யூதர்களே பெரும்பான்மையிராக வாழ்ந்ததாக கூறுகிறார். கி.பி.4-ம் நூற்றாண்டில் ரோம இராஜ்யம் கிறிஸ்துவ மதத்தை தழுவிய பிறகு, அங்கிருந்த மீதமான யூதர்களின் சிதறடிப்பு படிப்படியாக தொடங்கியது. ஆனாலும், கி.பி. 614- 617 இடைப்பட்ட காலத்தில் இஸ்ரயேல் தேசத்தின் அதிகமான பகுதிகளை யூதர்கள் தங்கள் கட்டுபாட்டில் வைத்திருந்தனர்[20]:

பாலஸ்தீன யூதர்களின் பெரிய அளவிலான எழுச்சியின் மூலம், பெர்சிய படையின் உதவியோடு, பாலஸ்தீன யூதர்கள் மூன்று வருடங்கள் எருசலேமையும, திபேரியாவையும் மற்றும் அதனோடு சேர்ந்து பல பெரிய பகுதிகளையும் கட்டுப்படுத்தி வந்தனர் (கி.பி.614-617). இந்த மூன்று வருடங்களுக்கு பிறகு, பெர்சியர்கள் தோற்கடிக்கப்பட்டு, பைசண்டைன் கிறிஸ்தவர்களால் எருசலேம் நகரம் பிடிக்கப்பட்டது[21].

## அரேபியர்களின் ஆக்கிரமிப்பு

அரேபியர்கள் கி.பி.640-ல் பைசாண்டைன் சிரியாவை கைப்பற்றிய போது, தேசத்தின் மக்கள் தொகையில் ''மெல்லிய'' சிறுபான்மையினரே இருந்தனர். ரோம பேரரசால் பாலஸ்தீனம் என்று பெயர் மாற்றி அழைக்கப்பட்ட நாட்டின் மெல்லிய சிறுபான்மையினர் மக்கள்தொகையில் யூதர்களும், சமாரியார்களும், கருத்து வேறுபாடுடைய கிறிஸ்தவர்களும் மற்றும் வைதீக சிரியா கிறிஸ்துவர்களும் வாழ்ந்தார்களே தவிர அங்கு அரேபியர்கள் யாரும் இல்லை.

கி.பி. 640 - 1099 ஆண்டுகள் வரை பாலஸ்தீனத்தை அரேபியர்கள் ஆண்டார்கள் என்றாலும், அவர்கள் பெரும்பான்மையான மக்களாக

வாழ்ந்தனரா என்பதே மிகப் பெரிய கேள்வியாகும். வரலாற்று ஆசிரியரான ஜேம்ஸ் பார்க்கர் எழுதுகையில்[22]:

அரேபிய ஆக்கிரமிப்புக்கு (கி.பி.670-740) பின்னர் ஏற்பட்ட முதல் நூற்றாண்டில், காலிபாவும் சிரியாவின் ஆளுநர்களும் பாலஸ்தீனத்தில் இருந்த கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் ஆண்டனர். முந்தைய நாட்களில் வாழ்ந்த பெதாயின் மக்களை தவிர, யோர்தானுக்கு மேற்கு திசையில் இருந்த அரேபியர்கள் காவற்கடையில் இருந்தனர். கி.பி.985-ம் ஆண்டில் வாழ்ந்த அரேபிய எழுத்தாளரான முக்தாகி, எருசலேமில் யூதர்களே அதிக மக்கள் தொகை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்று புகார் கூறினார். இதேனாடு கூட இன்னும் கூறும்போது ''மசூதியில் வணங்குபவர்களே இல்லை''[23] என்றும் குறை கூறுகிறார். அரேபிய பேரரசின் (கி.பி.996-1021) காலிப்பான அல்-அக்கிம், சிரியாவிலும் மற்றும் பாலஸ்தீனத்திலும் வாழ்ந்த முஸ்லீம் அல்லாதவர்கள், இஸ்லாமிய மதத்திற்கு மாறவேண்டும் அல்லது வெளியேற்றப்படுவார்கள் என்று ஆணை பிறப்பித்தார். இதன் பின்னர் அல்-அக்கிம் சில கட்டுபாடுகளை தளர்த்தியதால், அரேபியர்கள் என்றும் சிறுபான்மையிராகவே இருக்கும்படியாயிற்று. முக்கிய அரேபிய வரலாற்று ஆசிரியரான முனைவர் பிலிப் ஹித்தி (Philip K. Hitti) கூறுகையில்: அரேபியரின் ஆக்கிரமிப்பு (கி.பி.1070) பிறகு, சுமார் நானூறு ஆண்டுகள் கழித்து, சிரியாவிலும் பாலஸ்தானத்திலும் வாழ்ந்த முஸ்லீம்களை போல கிறிஸ்தவர்களும் அதிக அளவில் இருந்தனர். ஆனால், எல்லா முஸ்லீம்களும் அரேபியர்கள் இல்லை[24].

தேசத்தில் நடந்த சிலுவை போருக்கு (கி.பி.1099-1291) பிறகு, முஸ்லீம் அல்லாத மாமலூகீஸ் ஆட்சியாளர்களால் (கி.பி. 1291-1517) பாலஸ்தீன தேசம் ஆளப்பட்டது. இந்த காலத்தில்தான் அரேபியர்கள் அதிகமாக பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறினர் என்று அரேபிய வரலாற்று ஆசிரியரான பிலிப் ஹித்தி கூறுகிறார்[25]. கி.பி.1377-ம் ஆண்டில் வாழ்ந்த அரேபிய வரலாற்று ஆசிரியரான இபுல்தான் எழுதுகையில்: இஸ்ரயேல் தேசம் மீதான யூதர்களின் அரசுரிமை 1400 ஆண்டுகளாக நீடித்து இருந்தது... இந்த யூதர்களே நிரந்தரமாக வாழ தேவையான கலாச்சாரத்தையும், சுங்க வரிகளையும் ஏற்படுத்தினர்[26]. பாலஸ்தீன தேசத்தை ஆட்சி புரிந்த அரேபிய அரசர்களின் காலத்தில் இருந்து சுமார்

முன்னூறு ஆண்டுகளுக்கு பிறகு வாழ்ந்த, முக்கிய அரேபிய வரலாற்று ஆசிரியரான கல்தான் ''யூதர்களின் நாகரிகமும் மற்றும் கொள்கைகளும், இன்றும் தேசம் முழுவதும் ஊறி உள்ளதாக'' கூறுகிறார் (அர்னால்ட் போயின்பி அவர்களால் பெரிய வரலாற்று ஆசிரியர் என்று போற்றப்பட்டவர்). அரேபிய இராஜ்யம் ஆரம்பிக்கப்பட்டு, சுமார் மூன்று நூற்றாண்டுகள் சென்ற பின்பும், பாலஸ்தீன நாகரிகமோ அல்லது அதன் வேரோ இருந்த சுவடும் இன்றும் இல்லை.

மாம்லூகஸ் ஆட்சிக்காலத்தில், கருப்பு வாதை என்னும் கொள்ளை நோயால், யோர்தான் நதிக்கு மேற்காக உள்ள இஸ்ரயேல் தேசத்தின் மக்கள் தொகையாக இருந்த 1,50,000 முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களின் எண்ணிக்கை 1,40,000 ஆக குறைந்தது[27]. கி.பி. 1517-ம் ஆண்டில் பாலஸ்தீனத்தை கைபற்றிய துருக்கியர்கள், அதன் பிறகு வரிக்கட்டுதல் தொடர்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பை அட்டவணைப்படுத்தினார்கள். இதில் 49,181 குடும்ப தலைவர்களும் மற்றும் தனி ஆட்களும் வரிக்கட்டுவதற்கு ஏதுவாக இருந்தார்கள்.

கி.பி.1553-1554-ம் ஆண்டில், மொத்தமாக 2,05,000 முஸ்லீம் களும், கிறிஸ்தவர்களும், யூதர்களும் வாழ்ந்ததை சரியாக கணக்கிட்டு பேராசிரியர் இராபர்டோபச்சி கூறினார். கி.பி.1785-ம் ஆண்டு பயணம் மேற்கொண்ட பிரான்காஸ் காம்டி டி வோல்னி, பாலஸ்தீன தேசத்தில் 2,00,000 குறைவான மக்கள் தொகை உள்ளதாக கணக்கிட்டார்[28].

கி.பி. 1800-ல் பாலஸ்தீன மக்கள் தொகை இரண்டு இலட்சத்திற்கும் குறைவாக இருந்ததாக பிலிப் க. ஹித்தியும் (Philip K. Hitti) மற்றும் ஆல்ப்ரட் போனியும் (Alfred Bonni) ஒத்துக்கொள்கிறார்கள்[29, 30]. கி.பி. 1850-ம் ஆண்டு, பாலஸ்தீனத்தின் மக்கள் தொகை 1,50,000 ஆக இருந்ததாக சிலர் கணக்கிட்டுள்ளார்கள். இந்த மொத்த மக்கள் தொகையில் யூதர்களும், கிறிஸ்தவர்களும் மற்றும் அரேபியர்களும் இருந்தனர்.

கி.பி. 1856-ம் ஆண்டின் போது, சர் மோசஸ் மோன்ட்பியர் (Sir Moses Montefiore) எருசலேமிற்கு வெளியே இடங்களை வாங்கி, யூதர்களுக்கு விவசாயத்தை கற்றுக் கொடுக்க ஆரம்பித்த சமயத்தில், யூதர்களின் நிதி பாலஸ்தீன தேசத்திற்குள் அதிகப்படியாக வர ஆரம்பித்தது[31]. கி.பி. 1878-ம் ஆண்டில் இருந்து, யூத விவசாய குடியிருப்புகளை உருவாக்குவதற்காக நிதி வழங்க எட்மண்ட் டி

ரோத்ஸ்செல்ட் (Edmond derothschild) ஆரம்பித்தார் . இந்த காலத்தில்தான், தடையில்லாமல் யூதர்களின் நிதியும், வருகையும் பாலஸ்தீனத்திற்குள் அதிகமாக வந்தது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதால், சுற்றியிருந்த தேசத்திலிருந்து, அரேபியர்கள் பாலஸ்தீனத்தில் குவிய ஆரம்பித்தனர். அக்காலத்தில் பாலஸ்தீனத்தை முஸ்லீம் துருக்கியர்கள் ஆண்டதால், மத்திய கிழக்கில் பரவியிருந்த அரேபியர்கள் தங்கு தடையின்றி பாலஸ்தீனத்திற்குள் நுழைய முடிந்தது. கி.பி. 1918-ம் ஆண்டிற்குள், அரேபியர்களின் மக்கள் தொகை 5,60,000-க்கு உயர்ந்தது. யூதர்களின் வருகைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், 1948-ம் ஆண்டில் இஸ்ரயேல் தேசம் உருவாகும் வரை, அரேபியர்களும், யூதர்களும் அதிகமாக குவியத் தொடங்கினர். யூதர்களின் முதலீடும், வருகையும் மற்றும் அதனோடு நிலத்தை சீர்திருத்தி விவசாயம் செய்ததன் மூலமாகவும், இஸ்ரயேல் தேசம் பொருளாதார வரைபடத்தில் இடம்பெறும தகுதியை அடைந்தது.

## அரேபியர்களின் ஆக்கிரமிப்பா? அல்லது பாழாக்கப்படுதலா?

இந்த வரலாற்று கண்ணோட்டத்தின் மூலமாக என்ன முடிவுக்கு வரலாம்? கி.பி. 70-ம் ஆண்டு ரோமர்களின் ஆட்சியின் போது ஏற்பட்ட அழிவு வரை, 1700 ஆண்டுகள் இஸ்ரயேல் தேசத்தில் எவ்வித தடையுமின்றி யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த காலத்தில்தான் 35 இலட்சமாக இருந்த இஸ்ரயேலின் மக்கள் தொகை, சிதறடிக்கப்பட்டதாலும் பெரிய படுகொலையாலும் மிகவும் குறைந்து போனது. ஆனால் கி.பி. 617-ம் ஆண்டுக்கு பிறகு, எருசலேமும் மற்றும் அதனுடன் சேர்ந்த பல அதிகமான இடங்களும் யூதர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த காலத்திற்கு பிறகு, பாலஸ்தீனத்தை அரேபியர்கள் கைப்பற்றினாலும், சிறுபான்மை மக்களாகவே அவர்கள் வாழ்ந்தனர். கிறிஸ்தவ சிலுவை வீரர்கள் மற்றும் மாமாலூக்ஸ் (Mamelukes) நூற்றாண்டு காலமாக ஆண்டிருந்தாலும், பாலஸ்தீன தேசம் முழுவதும் யூதர்களின் நாகரீகத்தாலும், கொள்கைகளாலும் நிரம்பி இருந்தன. இவை கி.பி. 1400 வரைக்கும் தொடர்ந்தாலும், அரேபியர்கள் சிறுபான்மையினராகவே இருந்தனர். ஏனெனில் இரண்டாம் சிதறடிக்கப்படுதலில் இஸ்ரயேல் தேசம் பாழடிக்கப்பட்டு மறக்கப்படும் என்று எரேமியா தீர்க்கத்தரிசி முன்னமே கூறியிருந்தது போல, துருக்கியரின் காலத்தில் பாலஸ்தீன தேசம் தெளிவற்ற நிலையில் சிரியாவின் உப்பங்கழியாக மாறியது. இதன் பின்னர் பல

நூற்றாண்டுகளாக, முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களின் மக்கள் தொகை 2,00,000 குறைவாகவே இருந்தது. இருபது இலட்சமாக இருந்த யூதர்களின் மக்கள் தொகையானது, எரேமியா தீர்க்கத்தரிசி முன்பே கூறியது போல மனுஷனில்லாமலும், மிருகமில்லாமலும் அவாந்தரவெளியாய் மாறியது.

## பாலஸ்தீனர்களின் கூற்று

பாலஸ்தீன தேசத்தில் தங்களுக்கென்று பல நூற்றாண்டுகளாக பாலஸ்தீன நாகரிகம் இருந்தது என்பது பாலஸ்தீனர்களின் கூற்றாகும். ஆனால் அவை வரலாறால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால், உலக நாடுகள் அனைதும் இந்த கூற்றை காது கொடுத்து கேட்கின்றனர். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான யாசர் அராபத், ஐக்கிய நாடுகள் சபையில் 1974-ம் ஆண்டு பேசுகையில், ''யூதர்களின் படையெடுப்பு கி.பி. 1881-ல் தொடங்கின. அப்போது பாலஸ்தீன தேசம் பசுமையான தேசமாகவும், அதில் தங்களுக்காக இருந்த உள்நாட்டு நாகரிகத்தை மேம்படுத்தியும் மற்றும் நல்ல வாழ்க்கை முறையை கடைபிடித்ததும் அரேபிய மக்கள் வாழ்ந்து வந்தனர்'' என்று கூறுகிறார்.

இந்த கூற்றை மற்ற அங்கீகாரம் பெற்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றோடு ஒப்பிட்டு பார்த்தால் என்னவாகும்? கி.பி. 1738-ம் ஆண்டு தாமஸ் ஷா (Thomas Shaw) ''தேசம் வெறுமையாக இருந்தது... குடியமர்த்த மக்கள் தேவைப்படுகின்றனர்'' என்று கூறுகிறார்[38]. கி.பி. 1785-ம் ஆண்டு, மூன்று முக்கிய நகரங்களின் மக்கள் தொகையைப் பற்றி கான்ஸ்டான்டைன் பிரான்கைஸ் டி வால்னி அதிகாரப்பூர்வமாக பதிவு செய்தார். எருசலேமில் 12,000 - 14,000 மக்கள் தொகை இருந்தது, பெத்லகேமில் 600 வலுவான ஆண்கள் இருந்தனர். எப்ரோனில் 800 - 900 ஆண்கள் இருந்ததாக பதிவு செய்தார்[34]. கி.பி. 1835-ம் ஆண்டு அல்போன்ஸா டி லாமார்டின் (Alphonse De Lamartine) எழுதுகையில், ''எருசலேமிற்கு வெளியில் நாங்கள் வாழும் எந்த பொருளையும் காணவில்லை, வாழ்பவர்களின் சத்தத்தையும் நாங்கள் கேட்க முடியவில்லை. மாறாக ஊரிலும், சாலையிலும், தேசம் முழுவதிலும் நிசப்தமான அமைதியே இருந்தது... மொத்த மக்களின் கல்லறையாகவே விளங்கியது''[35].

கி.பி. 1857-ம் ஆண்டு, பாலஸ்தீனத்தின் பிரிட்டன் தூதராக இருந்த ஜேம்ஸ் பின் அறிக்கையிடும்போது, ''தேசம் முழுவதும் குடியிருப்பவர் இல்லாமல் பெருமளவில் வறுமை காணப்படுவதால், இதற்கு பெரிய தீர்வாக

## பரிசுத்த தேசம்

| குறிப்பிடத்தக்க வருடங்கள் | வரலாற்று நிகழ்வுகள் |
|---|---|
| 1700 வருடங்கள் முதல் ரோமர்களால் எருசலேம் அழிக்கப்படும் வரை, கி.பி. 70 | யூதர்கள் ஒரு தனி தேசமாக அவர்களுக் கென நீதித்துறையும், வர்த்தகமும், பெற்றிருந்தார்கள். 25 இலட்சம் மக்கள் |
| கி.பி. 70 - 135 | 25 இலட்சம் யூதர்களை கொலை செய்யவும் (அல்லது) சிதறடிப்பதற்கும் ரோம பேரரசு தொடங்கியது. |
| கி.பி. 614-617 | பாலஸ்தீன தேசத்தின் பல பகுதிகளை யூதர்கள் கட்டுப்படுத்தி வைத்தல் |
| கி.பி. 640 - 1099 | அரேபியர்களின் ஆக்கிரமிப்பு, ஆனால் பெரும்பான்மை மக்களாக இல்லை |
| கி.பி. 1099 - 1291 | சிலுவைபோர் வீரர்களின் ஆட்சி |
| கி.பி. 1291 - 1517 | அரேபியர் அல்லாத மாமலூக்ஸ்களின் முஸ்லீம் ஆட்சி |
| கி.பி. 1517 - 1917 | துருக்கியர்களின் ஆட்சியில் தேசம் தெளிவற்ற நிலைக்கு சென்றது |
| கி.பி. 1856 - 1948 | யூதர்களின் நிதி முதலீடும், விவசாயத்தை மேற்கொள்ளுதல். இதன்மூலமாக யூதர்களும், அரேபியர்களும் இஸ்ரயேல் தேசத்திற்கு வருதல் |

ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகை தேவையாக உள்ளது'' என்று கூறுகிறார்[36]. இஸ்ரயேலின் ''இரட்டிப்பான'' தண்டனை மற்றும் சிதறடிக்கப்படுதல் காலத்தில், கர்த்தர் தேசத்தை மனுஷனில்லாமலும், மிருகமில்லாமலும் ஆக்குவார் என்ற வேதாகமத்தின் கணிப்பு இந்த வரலாற்று கூற்றுகளை உறுதியாக்குகிறது (எரேமியா 33 : 10, சகரியா 10 : 12, எரேமியா 16 : 14-18). என்ன ஆச்சரியம்! கி.பி. 1857-ம் ஆண்டில் தேசம் ''மக்கள் தொகைக்காக'' காத்துக் கொண்டிருந்தது ! கி.பி. 1878-ம் ஆண்டிற்கு பிறகு, இஸ்ரயேலின் இரட்டிப்பான தண்டனையின் காலம் முடிவடைந்த பிறகு, எதிர்பார்க்கப்பட்ட யூத மக்கள் தொகை தேவனுடைய திருவுளச் செயலால் மீண்டும் வரத் தொடங்கினர். இஸ்ரயேல் தேசத்தின் பாழாக்கப்பட்ட நிலைமையை கூறும் மிக பிரபலமான மேற்கோளானது, மாற்கு டைவன் எழுதிய இன்னோசென்ஸ் அப்ராடு (கி.பி. 1867) என்ற புத்தகத்தில் மிக விரிவாக உள்ளது. அவையாவன ''பாலஸ்தீன தேசம் சாக்கு பைகள் மற்றும் சாம்பல் மேல் அமர்ந்து உள்ளது. சாபத்தின் மூலமாக அதனுடைய விவசாய நிலங்கள் உலர்ந்துபோனது மற்றும் ஆற்றலும் விலங்கிடப்பட்டுள்ளது. பாலஸ்தீனம் பாழாக்கப்பட்டும், அன்பில்லாமலும் இருக்கிறது. சாரமில்லாத, நம்பிக்கையற்ற, மனமுடைந்த நிலையில் பாலஸ்தீனம் இருக்கிறது.

யூதர்களின் சிதறடிக்கப்படுதல் மற்றும் இரட்டிப்பான தண்டனை காலத்தில், இஸ்ரயேல் தேசம் பாழாடிக்கப்பட்டு விளங்கும். இதன்பின் 1878-ம் ஆண்டில், அவர்களுடைய இரட்டிப்பான தண்டனைக் காலம் முடிந்தவுடன், யூத மக்களை மீண்டும் பெற்றுக் கொள்ளுவதற்காக இஸ்ரயேல் தேசம் காத்திருக்கும் என்ற வேதாகமத்தின் கணிப்பை வரலாற்று ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அரேபியர்களின் ஆளுகைதொடங்கி (கி.பி. 640 - 1099) ''பசுமையான தேசத்தில்'' தங்களுக்கென்று ஒரு தனித்துவமான நாகரிகம் இருந்தது என்றும் கலாச்சார வேர்கள் தங்களுக்கு பாலஸ்தீனத்தில் இருந்தது என்ற இன்றைய பாலஸ்தீனர்களின் கூற்றுகளை வரலாற்று ஆவணங்கள் உறுதிப்படுத்தவில்லை.

## தெற்கு சிரியாவும் VS ''பாலஸ்தீனமும்''

இஸ்ரயேல் தேசம் என்ற பெயரை பாலஸ்தீனம் என்று ரோமர்களே மாற்றினார்கள். ஆனால் கி.பி. 640 முதல் 1960 வரை, அரேபியர்கள் இந்த பகுதியை ''தெற்கு சிரியா'' என்றே அழைத்தனர். 1960-ல் இருந்துதான் தேசத்தை ''பாலஸ்தீனம்'' என்று அரேபியர்கள் அழைக்க ஆரம்பித்தனர். 18-ம் நூற்றாண்டு வரை, இந்த பகுதியை ''பரிசுத்த தேசம்'' என்று கிறிஸ்தவர்கள் அழைத்தனர். இதன்பிறகு கிறிஸ்தவர்கள் இந்த பகுதியை ''பரிசுத்த தேசம்'' என்றும் ''பாலஸ்தீனம்'' என்று இரண்டு பெயர்களால் அழைத்தனர். கி.பி. 1922-ம் ஆண்டு, உலக நாடுகளின் கூட்டமைப்பானது, யூதர்களுக்கு பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியை தனிநாடாக அமைத்து தரும் பொறுப்பை, பிரிட்டனிடம் ஒப்படைத்தது. இதன்பின்னர் இந்த தேசமானது, 1948-ம் ஆண்டு இஸ்ரேல் தேசம் உருவாகும் வரை ''பாலஸ்தீனம்'' என்றே அழைக்கப்பட்டது. இந்த காலத்தில்தான், தேசத்தில் வாழ்ந்த அரேபியர்களின் தலைவர்கள் அத்தேசத்தை ''பெரிய சிரியாவின்'' பகுதி என்றும் தங்களை ''தெற்கு சிரியர்கள்'' என்றும் கூறிக்கொண்டனர். சிரியா, லெபனான், ஈராக், டிரான்ஸ்-ஜோர்டான் மற்றும் பாலஸ்தீனம் ஆகியவை ''அரேபிய தேசங்கள்'' என்று அழைக்கப்பட்டன. கி.பி. 1960-ல் பாலஸ்தீனர்களில் அடையாளம் எவ்வளவு தாமதமாக பிறந்தது என்பதை டைம் பத்திரிக்கை இங்கு விலாவாரியாக குறிப்பிடுகின்றது[37]:

பாலஸ்தீனர்கள் என்ற ஒன்று இல்லாதிருந்தது என்று கோல்டா மேயர் விவாதம் செய்கிறார். அந்த சமயத்தில் அவர் முற்றிலும் தவறாக கூறவில்லை. யாசர் அராபத் பொய் பிரச்சாரம் செய்வதற்கு முன்னே, பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அதிகப்படியான அரேபியர்கள் தங்களை அரபு தேசங்களின் உறுப்பினர்களாகவே எண்ணினர். பாலஸ்தீனர்கள் தனித்தன்மை வாய்ந்த மக்கள் என்பதை அராபத்தே முதன்முதலாக விளக்கி கூறினார். இதை உறுதிப்படுத்துவதற்காக அவர் கொண்டிருந்த கூற்றை புகுத்தியும், ஏற்பாடு செய்தும், சண்டையிட்டும் உலக மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அரேபிய பாலஸ்தீனர்களின் கலாச்சாரம் என்ற ஒன்று இருந்திருந் தால், அவர்களின் மக்கள் தொகை அதிகமாக இருந்திருக்கும் என்பது

எதிர்பார்த்ததே. ஆனால் கொஞ்சம் குடும்பங்கள் மட்டுமே இருந்ததால், அரேபியர்களுக்கு அந்த தேசத்தில் எவ்வித பிணைப்பும் இல்லாமல் போயிற்று. பொருளாதார காரணங்களால் தெற்கு சிரிய அரேபியர்கள், பாலஸ்தீனத்திற்கு வந்திருந்தாலும், ஒரு தலைமுறைக்குள் அல்லது சிரியா மற்றும் பல அரபு தேசங்களின் கலாச்சாரத்தால் திரும்பவும் அங்கு இழுக்கப்பட்டிருப்பார்கள். இந்த காரணத்தினாலே அரேபியர்களின் எண்ணிக்கையானது குறைவாகவே இருந்தது. யூதர்களின் நிதி முதலீட்டாளும், மற்றும் கி.பி. 1800-ம் ஆண்டிற்கு பிறகு வாழ்ந்த யூத மக்களின் வாழ்க்கை தரத்தாலும், பாலஸ்தீனத்தின் நிதி உயர்ந்ததால் அரேபியர்களின் எண்ணிக்கை உயர தொடங்கியது. பின் கி.பி. 1850 முதல் கி.பி 1918 வரை, அரேபியர்களின் மக்கள் தொகை 5,60,000-க உயர்ந்தது. யூதர்களை குற்றப்படுத்தாமலும், ஆனால் அதேசமயத்தில் பிரிட்டன் கொள்கைகளை பாதுகாத்தும், யூதர்களுக்கு நண்பர் அல்லாத காலனி நாடுகளின் பிரிட்டன் அரசு செயலாளரான மால்கம் மெக்டொனால்ட் (Malcolm C McDonald) கீழ்சபையில் அறிவிக்கையில் (நவம்பர் 24, 1938), ‘‘அரேபியர்களை தேசத்தில் இருந்து யூதர்கள் விரட்டியடிக்கின்றனர் என்று அரேபியர்கள் கூறமுடியாது. கி.பி. 1918-க்கு பிறகு பாலஸ்தீனத்திற்கு ஒரு யூதர் கூட வராமல் இருந்திருந்தால், பாலஸ்தீனத்தின் அரேபிய மக்கள் தொகை 6,00,000 அளவிலே இருந்திருக்கும்...’’[38]

யூதர்களின் பங்களிப்பும், வருகையும் பாலஸ்தீனத்தில் அதிகமாகி கொண்டே இருந்தது. சமூக பொருளாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, யூதர்கள் தொழிற்சாலைகளையும், விவசாய நிலங்களையும், மருத்துவ மனைகளையும் உருவாக்கினர். இதனால் வேலை வாய்ப்பு அதிகரித்ததால், அரேபியர்களின் வருகையும் அதிகரித்தது. உண்மையில் கி.பி. 1939-ம் ஆண்டு குடியரசு தலைவரான ரூஸ்வெல்ட் கூறுகையில் ‘‘கி.பி. 1921-ம் ஆண்டு முதல் அரேபியர்களின் வருகை மொத்த யூதர்களின் வருகையை தாண்டியது’’ என்கிறார்[39]. இதற்கு ஒரு உதாரணமாக, சிரியா ஆரான் (Hauran) மாகாணத்தில் இருந்து கி.பி. 1934-ம் ஆண்டில் சுமார் 30,000 - 36,000 அரேபியர்கள், நல்ல தரமான வாழ்க்கைக்காக பாலஸ்தீனத்திற்கு குடிபெயர்ந்தனர்[40].

ஆனால் இதற்கு மாறாக, பிரிட்டன் அரசானது தம்முடைய 1939-ம் ஆண்டு வெள்ளை அறிக்கையின் மூலம் யூதர்களின் குடிபெயர்தலை

தடுத்து நிறுத்தியது. அதே சமயத்தில், இரண்டாம் உலகப்போரின் போது மிகப்பெரிய அளவில் வாய்ப்பு அதிகமாக இருந்த புதிய தேசத்தில் அரேபியர்கள் குடிப்பெயர்ந்தனர்[41]. கி.பி. 1946-ம் ஆண்டு, அமெரிக்க அரசு பார்வையாளரான பார்ட்லி க. கிரம் (Bartiel C. Crum) எழுதுகையில், ''நல்ல வாழ்க்கைக்காக இலட்சக்கணக்கான அரேபியர்கள் பாலஸ்தீனத்திற்குள் குடிபெயர்ந்தனர். இன்னும் வந்து கொண்டிருக்கின்றனர்'' என்று கூறுகிறார்[42].

## அரேபியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் சாட்சியங்கள்

கி.பி. 1960 வரை பாலஸ்தீனத்தை தெற்கு சிரியா (அல்லது) சிரியாவின் ஒரு பகுதி என்று அரேபியர்கள் கூறி வந்தார்கள். கி.பி. 1919-ம் ஆண்டு, பொது சிரியா காங்கிரஸ் கூறுகையில், ''தெற்கு சிரியாவின் பகுதியாக எண்ணப்பட்ட பாலஸ்தீனத்தை பிரிக்க நாங்கள் கேட்கவில்லை''[43]. பாலஸ்தீனத்தின் (1918-ம் ஆண்டு) பற்றிய அரேபியர்களின் கண்ணோட்டத்தை, கி.பி. 1939-ம் ஆண்டு ஜார்ஜ் ஆண்டனியோல் (George Antonius) கூறுகையில்[44]: பாலஸ்தீனத்தின் எதிர்காலம் பற்றி பைசல் கூறும் கருத்துக்கள், அவர் தந்தையின் கருத்தோடும் மற்றும் அரசியல் சிந்தனை கொண்ட அரேபியர்களின் கருத்தோடும் ஒத்திருந்தது. அரபு தேசங்களின் பிரதிநிதியாக இருந்த ஹுசைன் (மெக்காவின் முதன்மை அதிகாரி, தற்போது இருக்கும் யோர்தான் நாட்டின் இராஜாவான ஹுசைன் அவர்களின் தாத்தா ஆவார்), 1918-ம் ஆண்டு ஜனவரி மாதம் பிரிட்டன் அரசிடம் தங்கள் அரபு தேசங்களின் கண்ணோட்டத்தை விளக்கினார். பாலஸ்தீனம் அரேபியர் இடம் என்றும் சிரியாவின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்பதே அரேபியர்களின் கூற்றாகும்.

கி.பி. 1939-ம் ஆண்டு கொண்டிருந்த பாலஸ்தீனத்தை பற்றிய அரேபியர்களின் அதே கருத்தை ஜார்ஜ் ஆண்டனியோல் குறிப்பிடுகையில் ''முழு சிரியா நாடு, அதிகார பிரதேசங்களாக இன்று பிரிந்துள்ளது''[45]. சிரியாவை பற்றிய பிரான்ஸ் ஆணையில் பாலஸ்தீனம் கொண்டு வரப்படவில்லை மாறாக பாலஸ்தீனம் பிரிட்டன் பிரகடனத்தின் கீழ் இருந்தது என்றும் புலம்புகிறார்.

கி.பி. 1947-ம் ஆண்டு மே மாதத்தில், ஐக்கிய நாடுகள் சபைக்கு அரபு பிரதிநிதிகள் நினைவுபடுத்துகையில், ‘‘பாலஸ்தீனம் சிரியா மாகாணத்தின் ஒரு பகுதியாகும். பாலஸ்தீன அரேபியர்கள் அரசியல் சாசனத்திற்குட்பட்டு தங்களுக்கென ஒரு சுதந்திர தேசத்தை உருவாக்கிக் கொள்ள முடியாது[46]’’.

கி.பி. 1956-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி, பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தற்போதைய தலைவரான அகமத் சுக்காரி, எவ்வித தயக்கமும் இல்லாமல், பாதுகாப்பு சபையில் எல்லோருக்கும் முன்பாக ‘‘பாலஸ்தீனம் என்பது ஒன்றுமல்ல, அவை தெற்கு சிரியாவாகும் என்பது அறிந்ததே’’ என்றார்[47].

சிரியா குடியரசு தலைவரான அபிஸ் ஆசாத் ஒருமுறை பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரான யாசர் அராபத்தை பார்த்து ‘‘எங்களைப் போல் நீங்கள் பாலஸ்தீனத்தின் பிரதிநிதி இல்லை. இந்த முக்கிய விஷயத்தை நீங்கள் மறந்துவிடக்கூடாது: பாலஸ்தீன மக்கள் என்று ஒன்று இருந்ததில்லை, பாலஸ்தீனர்கள் என்பதற்கு உள்பொருள் ஒன்றுமில்லை. சிரியா என்ற ஒன்றே உள்ளது. நீங்கள் சிரியா மக்களின் ஒருங்கிணைந்த பகுதி ஆவிர். பாலஸ்தீனம் சிரியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எனவே சிரியா அதிகாரிகளாகிய நாங்களே பாலஸ்தீன மக்களின் உண்மையான பிரதிநிதிகள்’’என்று கூறுகிறார்.

08-ம் தேதி மார்ச் மாதம், கி.பி. 1974-ம் ஆண்டில் ஆசாத் கூறுகையில் ‘‘பாலஸ்தீனம் தெற்கு சிரியாவின் பகுதியாகும். இதன்மூலம் எங்கள் அரபு தாயக தேசம் மற்றும் சிரியாவில் இருந்து விடுவிக்கப்பட்ட பங்குதாரராக பாலஸ்தீனத்தை கருதுவதை நாங்கள் எங்கள் உரிமையாகவும், கடமையாகவும் பார்க்கிறோம்’’[49].

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் முன்னாள் இராணுவ தளபதியாகவும் மற்றும் நிர்வாக குழுவில் இருந்தவருமான ஜுகிர் முக்ஸின் (Zuhair Muhsin) கூறுகையில் ‘‘லெபனானியர்கள், பாலஸ்தீனர்கள், சிரியர்கள் மற்றும் ஜோர்டானியர்கள் இடையே எந்த வித்தியாசமும் இல்லை. நாங்கள் எல்லோரும் ஒரே தேசத்தை சேர்ந்தவர்கள். அரசியல் காரணத்திற்காக மட்டுமே மிகவும் ஜாக்கிரதையாக பாலஸ்தீனத்தின் அடையாளத்தை வலியுறுத்துகிறோம். ஆம், தந்திர நோக்கங்களுக்காகவே

நாங்கள் பாலஸ்தீன அடையாளத்தை உபயோகப்படுத்துகிறோம். இஸ்ரயேல் தேசத்திற்கு எதிரான போரை தொடர்ந்து நடந்ததற்காகவே பாலஸ்தீன தேசத்தை உருவாக்கி புதிய உபகரணமாக உபயோகப்படுத்துகிறோம்''.

கி.பி. 1800-ம் ஆண்டு வாழ்ந்த பாலஸ்தீன அரேபிய கிறிஸ்தவர்களின் முக்கியமான கூற்றுகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன[51]: அரேபியர்கள் தற்காலிகமாக குடியேறினவர்கள், அவர்கள் நிரந்திர குடிவாசிகள் அல்ல. மேய்ச்சல் நிலத்திலும் மற்றும் அடைக்கலமாக இருந்த இடத்திலும் தங்களுக்கு கூடாரங்களை அமைத்துக் கொண்டனர். அவர்கள் ஒன்றையும் உருவாக்கவில்லை. அந்நியர்களாக வந்தவர்களாகிய இவர்கள், தேசத்திற்கு என்றும் எஜமானாக முடியாது. பாலைவன காற்று எப்படி இவர்களைக் கொண்டு வந்ததோ, அப்படியே இவர்கள் நடந்து வந்த பாதையில் எவ்வித தடயமும் வைக்காமல் திரும்பவும் கொண்டுபோய்விடும்.

அமெரிக்க இறையியலாளர்களில் முக்கியமானவராக கருதப்பட்ட ஸ்டீபன் ஒலின் D.D., L.L.D., (Stephen Olin) அவர்கள் பாலஸ்தீன தேசத்தில் பயணம் மேற்கொண்டு, பாலஸ்தீன அரேபியர்களைப் பற்றி கூறும்போது ''இவர்கள் எல்லோரும் ஒருவேளை சிரியாவின் பழைய குடிமக்களின் பிள்ளைகளாக இருக்கலாம்''[52].

பரிசுத்த தேசம் யாருக்கு சொந்தமாக வேண்டும் என்பதை இஸ்லாமியர்களின் நூலான குரானும் கூறுகிறது[53]: எப்படியெனில் வேதாகமம் போல் குரானும் இஸ்ரயேலின் பிள்ளைகளோடு கடவுள் (அல்லாஹ்) உடன்படிக்கையை ஏற்படுத்தி, பரிசுத்த தேசத்தை யூதர்களுக்கென கொடுத்தார் (பார்க்க குரான், சூரா V ''அட்டவணை''). கடைசி காலத்தில் தங்களுக்கென கொடுக்கப்பட்ட ''ஆசீர்வதிக்கப்பட்ட'' தேசத்தில் மீண்டும் யூதர்கள் திரும்ப வருவார்கள் என்று குரானும் விளக்குகிறது.

நிரந்தரமாக இத்தேசத்தை யூதர்களுக்கென தேவன் கொடுத்துள்ளார் என்று கூறும் கிறிஸ்தவ வேதாகமத்தை இவ்வகையான சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. கி.பி. 670 – கி.பி. 1878 ஆண்டு வரை சுற்றித்திரிந்த சில அரேபியர்கள் தற்காலிக குடிவாசிகளே ஆவர். தற்போதைய அரேபியர்களின் பெருந்திரளான வருகையானது, யூதர்களின் கூட்டிச் சேர்க்கப்பட்ட வருகையோடு ஒத்த சம்பவங்களாக இருந்தாலும், அவர்களுக்கு பரிசுத்த தேசத்தின் மீது எந்தவித வரலாற்று உரிமையும் இல்லை என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது.

## வரலாற்றின் தீர்ப்பு: தேசத்தின் உரிமைகள்

யூதர்களின் பணமுதலீடு மற்றும் அவர்களின் வருகைக்கு முன்னர், பெருந்திரளான அரேபியர்கள் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறினர். இதன்பின்னர் எல்லாம் மாறியது. ''அரேபியர்கள் வெளியேறின நாடாக இருந்த பாலஸ்தீனம், பின்னாளில் அரேபியர்கள் குடியேறின நாடாக மாறியது. சீயோனிய முன்னோடிகளால் தரம் உயர்த்தப்பட்ட பாலஸ்தீனத்தின் நிதி நிலைமையை பார்த்து நல்ல வாழ்க்கை கிடைக்கும் என்ற எண்ணத்தில் எண்ணிலடங்கா அரேபியர்கள் சிரியா மாகாணமான ஆரான் மற்றும் சுற்றியிருந்த நாடுகளில் இருந்து பாலஸ்தீனத்தில் குவியத் தொடங்கினர்''[54]. இதனை உறுதிப்படுத்தும் விதமாக பாலஸ்தீன அரசு குழு அறிக்கையில், பால்போர் பிரகடனம் முதல் ஐக்கிய நாடுகள் பகிர்வு தீர்மானம் (கி.பி. 1947) காலம் வரை, அரேபியர்கள் பாலஸ்தீனத்தில் அதிக அளவில் குடியேறினர் என்று கூறுகிறது[55]. மேலும் பிரான்கன்ஸ்டைன் (Frankstein) ஆவணப்படுத்துகையில் அரேபியர்களின் வருகை சமீபகாலத்தில் நடந்த நிகழ்வு என்கிறார்[56]: ஆரம்பகால சீயோனியம் மீது அன்பு கொண்டவர்களாலே அரேபியர்களின் வருகை உந்தப்பட்டது. சில எழுத்தாளர்கள் 1942-ம் ஆண்டு, 75% அரேபிய மக்கள் 100 வருடத்திற்கு முன்னர் குடியேறினவர்களாகவும் மற்றும் பாலஸ்தீனத்தில் குடியேறினவர்களின் பிள்ளைகளாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வருகின்றனர். இவை எல்லாம் கி.பி. 1882-ம் ஆண்டிற்கு பிறகே நடந்தேறின.

தீர்க்கதரிசிகள் உறுதிப்படுத்தினதை விட வரலாற்றின் தீர்ப்பே அதிகளவில் உறுதிப்படுத்துகிறது என்பது உண்மையே. இஸ்ரயேலின் ''இரட்டிப்பான'' தண்டனை காலம் 1878-ம் ஆண்டில் முடியும் வரைக்கும், மற்றும் யூதர்களின் கூட்டிச் சேர்க்கப்படுதல் தொடங்கும் வரைக்கும் இஸ்ரேல் தேசத்தின் மக்கள் தொகை குறைவாகவே இருக்கும் (எரேமியா 33 : 10, சகரியா 9 : 12, எரேமியா 16 : 14-18). இந்த 1878-ம் வருடத்திற்கு பிறகே அதிக அளவிலான அரேபியர்களின் வருகை தொடங்கியதாக வரலாற்று ஆவணங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இரண்டு ஆண்டுகள் மட்டும் பாலஸ்தீனத்தில் வாழும் அரேபியர்களை ''பாலஸ்தீன அகதி'' என்று ஐக்கிய நாடுகள் விளக்கம் கொடுப்பது ஏன் என்பதை இந்த வரலாற்று உண்மைகள் விளக்குகின்றன[57]. அரேபிய பாலஸ்தீனர்கள் 1000 - 2000 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர் என்ற கூற்று, ஐக்கிய நாடுகள் சபையின் விளக்கத்திற்கு உண்மையில் ஒத்துப்போகவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளாக பாலஸ்தீன தேசத்தை யூதர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். தங்களை பாலஸ்தீனர்கள் என்று கூறும் அரேபியர்களின் கூற்றைப் பார்க்கிலும், யூதர்களே உண்மையான ''பாலஸ்தீனர்கள்'' ஆவார்கள். ஏதாவது ஒரு மக்கள் தங்களை பாலஸ்தீனர்கள் என்று கூறிக்கொள்ள உரிமை கொண்டவர்கள் என்றால், பெயர் மாற்றி அழைக்கப்பட்ட ''பாலஸ்தீன தேசத்தில்'' வாழ்ந்த மூதாதையர்களாகிய யூதர்களே ஆவார்கள்.

# அத்தியாயம் - 3

# சகல ஜாதிகளும் அவரின் தேசத்தை பங்கிட்டனர் மற்றும் கர்த்தர் கோபமாக உள்ளார்

இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும், நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப் போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்திரத்தையும் புறஜாதிக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக் கொண்டதினிமித்தமும்''. (யோவேல் 3:1, 2)

''இரட்டிப்பான'' தயை இல்லாத மற்றும் தண்டனையின் காலம் முடிந்தபிறகு, ''தமது ஜனத்தை'' வேட்டையாடி சிதறடித்த தேசங்களோடு வழக்காடுவேன் என்று தேவன் கூறுகிறார். கி.பி. 1878-ம் ஆண்டு தொடங்கி, தம்முடைய திருவுளச்செயலினால் யூதர்களை ''தம்முடைய தேசத்தில்'' கூட்டிச்சேர்த்த தேவன், அவருடைய தேசமான அதாவது ''தம்முடைய தேசத்தை பங்கிட்டதற்காக புறஜாதிகளின் தேசங்களோடு வழக்கு இருக்கிறது'' என்று கூறுகிறார். அவருடைய தேசத்தை புறஜாதிகளின் நாடுகள் எப்படி பங்கிட்டன?

யூதர்களின் கூட்டிச்சேர்த்தலை பற்றி விளக்கும் கடைசிகால தீர்க்கத்தரிசனத்தின் இரண்டாம் முக்கிய நிகழ்வாக முதலாம் உலகப்போர் எண்ணப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளையும் (பாலஸ்தீனம் உட்பட) மற்றும் வடக்கு ஆப்பிரிக்காவையும் ஆண்டு வந்த துருக்கியர்கள், ஜெர்மனி யோடும் மற்றும் மத்திய அதிகார நாடுகளோடும் கைகோர்த்து நேச நாடுகளை எதிர்த்து போரிட்டனர். போரில் ஏற்பட்ட நேச நாடுகளின் வெற்றியின் மூலம் துருக்கி பேரரசானது உடைக்கப்பட்டதால், யூதர்கள் மற்றும் அரேபியர்கள் தங்களுக்கென சுயதீனமான நாடுகளை கேட்டனர். ஆனால் உலக நாடுகளோ மிகவும் தாராளமாக 22 சுதந்ததிர அரபு தேசங்களை (5,414,000 சதுர மைல்கள்) கொடுத்தன. இந்த பெரிய தேசத்தில் இருந்து 1% சதவீத இடத்தை மட்டும் யூதர்கள் கேட்டனர். 1917-ம் ஆண்டின் பால்ப்போர்

பிரகடனம் மற்றும் 1920-ம் ஆண்டின் சான் ரெமோ உலக தேசங்களின் மாநாட்டில், யூதர்கள் மற்றும் அரேபியர்களின் கோரிக்கையை (ஜோர்டானின் இரண்டு பக்கங்கள் உட்பட) நட்பு நாடுகள் ஏற்றுக்கொண்டன (பார்க்க வரைபடம் 1).

ஏகாதிபத்திய காரணத்திற்காக, கி.பி. 1921-ம் ஆண்டில் பிரிட்டன் அரசானது பால்போர் பிரகடனத்திலிருந்து மாறி, அதில் குறிப்பிடப்பட்டிருந்த 77 சதவீத இடங்களை பெயர்த்து, டிரான்ஸ்-ஜோர்டான் அரேபிய அமீரகத்தை ஏற்படுத்தியது (பார்க்க வரைபடம் II). இதன்பின்பு, 1922-ம் ஆண்டு உலக நாடுகளின் கூட்டமைப்பு, பிரிட்டனுக்கு அதிகாரம் கொடுத்து மீதமிருந்த 23 சதவீத பாலஸ்தீன இடங்களை (சமாரியா, யூதேயா, காசா, கோலான் குன்றுகள் மற்றும் கிழக்கு எருசலேம்) யூதர்களுக்கு ஒரு தாயக தேசமாக கொடுக்க முடிவு செய்தனர். ஆனால் பிரான்ஸ் அரசின் அழுத்தத்தால், 1923-ம் ஆண்டு கோலான் குன்றுகள் சிரியாவிடம் கொடுக்கப்பட்டது[58].

*அவர்கள் என் தேசத்தை பங்கிட்டார்கள் அதன் நிமித்தமாக கர்த்தர் கோபமாக இருந்தார்.*

## பெட்ரோலிய இராஜதந்திர சூழ்ச்சி

இதன்பிறகு பெட்ரோலிய எண்ணெய் அரபு நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக ‘‘எண்ணெய் இராஜதந்திரம்’’ உருவாக்கப்பட்டது. பிரிட்டனின் வெளியுறவு கொள்கைகள் அரேபியர்களை சமாதானப்படுத்தி சந்தோஷமடைய வைத்தது. கி.பி. 1939-ம் ஆண்டில் பிரிட்டனின் வெள்ளை அறிக்கை, யூதர்களின் பாலஸ்தீன வருகையை தடை செய்தது. கொடுமையான இரக்கமற்ற செயலால், அமெரிக்காவும் மற்றும் பல நாடுகளும் கஷ்டப்பட்ட ஐரோப்பிய யூதர்களை ஏற்றுக்கொள்ள மறுத்தன. இதனால் 60 இலட்சம் யூதர்கள் இனப்படுகொலையால் அழிக்கப்பட்டனர்.

பிரிட்டன் மற்ற உலக நாடுகளோடு கைகோர்த்து, தம்முடைய அதிகார த்தின் மூலமாக யூதர்களின் வருகையை தடைசெய்யாமல் இருந்திருந்தால், மகிழ்ச்சியற்ற மற்றும் பாதிக்கப்பட்ட எவ்வளவு இலட்ச கணக்கான யூதர்கள் பாலஸ்தீனத்தில் தஞ்சமடைந்திருப்பார்கள்? இவை எவ்வளவு கொடிதான,

கூட்டு குற்றங்கள் ஆகும்! பால்போர் பிரகடனம் வெளியிடப்பட்ட சமயத்தில், மகா பிரிட்டனின் பிரதமராக இருந்த லாய்ட் ஜார்ஜ் (Lloyd George), 1939-ம் ஆண்டு வெள்ளை அறிக்கையை தேசிய வானொலியில் வாசிக்கையில் ''இந்த தேச துரோக செயல் மூலமாக பிரிட்டனின் பெயர் களங்கப்படப்போகிறது'' என்றார்[59].

இந்த சமயத்தில் உலகநாடுகள் தேவனுடைய தேசத்தை யூதர் களுக்கு கொடுக்க மறுத்தன. *இதனால் கர்த்தர் கோபம் அடைந்தார்.* இறுதியாக 1922-ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையை கடைபிடிக்காமல், குற்ற உணர்வுடன் இருந்த புறஜாதி தேசங்கள் தம்முடைய தார்மீக கடமை யாக எண்ணி யூதர்களுக்கு ஒரு தேசத்தை கொடுக்க முன் வந்தனர். ஆனால் துரதிருஷ்டவசமாக, ஐக்கிய நாடுகள் சபையின் 1947 பகிர்வு திட்டத்தின் மூலம் யூதர்களுக்கு கிடைக்கவிருந்த தேசமானது மிகவும் குறைக்கப்பட்டது (பார்க்க வரைபடம் III). ''என் தேசத்தை'' அவர்கள் பங்கிட்டார்கள். ஆதலால் கர்த்தர் கோபமாக உள்ளார்...

இஸ்ரயேல் தேசமானது 1948-ம் ஆண்டு சுதந்திரம் அடைந்தபோது, ஆறு அரபு நாடுகளின் படைகள் புதிதாக பிறந்த தேசத்தின் மீது படையெடுத்தனர். 100 க்கு 01 என்ற எண்ணிக்கையில் குறைவாக இருந்த இஸ்ரயேலர்களின் படை, தங்களை ஆக்கிரமிக்க நினைத்த அரபு படைகளை விரட்டியடித்து, தங்களுக்கு உரிமை உள்ள அதிக பகுதிகளை கைப்பற்றினர். தேசம் யாருடையது என்பதை உலக நாடுகளுக்கு தெய்வீக திருவுளச்செயல் எடுத்துக் கூறியது.

## கிழக்கு எருசலேமை ஜோர்டான் ஆக்கிரமித்தது

இதன்பின்னர், அரபு தேசமான டிரான்ஸ்-ஜோர்டான் கிழக்கு எருசலேமை கைப்பற்றி, அங்கிருந்த யூதர்களை வெளியேற்றி அவர்களின் புனித வழிபாட்டுத்தலங்களை அழித்தது. இந்த சமயத்தில்தான் எருசலேம் ''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாக'' ஆயிற்று. ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தையும் மீறியதோடு மட்டுமல்லாமல், யோர்தான் நதியின் மேற்கு கரையையும் டிரான்ஸ்-ஜோர்டான் பிடித்தது. இதனால் டிரான்ஸ்-ஜோர்டான் என்றிருந்த தேசத்தின் பெயரை ஜோர்டான் என மாற்றியது. இன்றோ யோர்தான் நதியின் கிழக்கு கரையையும், மேற்கு கரையையும் ஆக்கிரமித்து

ஜோர்டான் ஆட்சி செய்து வருகிறது (பார்க்க வரைபடம் IV).

ஆனால் ''மேற்கு கரையை'' ஆக்கிரமிப்பு செய்த ஜோர்டானின் இந்த செயலை பிரிட்டனும், பாகிஸ்தானும் மட்டும் அங்கீகரித்தன மாறாக வேறு எந்த நாடுகளும் அங்கீகரிக்கவில்லை. அரேபிய நட்பு நாடுகளான சிரியா, லெபனான், எகிப்து மற்றும் சவுதி அரேபியாவும், ஜோர்டானின் ஆக்கிர மிப்பை வன்மையாக கண்டித்து, அரபு கூட்டு நாடுகளின் சபையிலிருந்து ஜோர்டானை வெளியேற்ற வேண்டும் என்றும் கூறியது![60] 6,00,000 அரேபியர்கள் ''தற்காலிகமாக'' பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியதாக கூறப்பட்டாலும், புதிதாக உருவான இஸ்ரயேல் தேசத்தை அரபு படைகள் அழிக்க முடியாததால், தற்காலிகமாக சென்றவர்கள் நிரந்தர நிலைமைக்கு தள்ளப்பட்டனர். 6,00,000 என்ற தொகை சுத்தப்பொய் என்று பென்குரியன் (Ben Gurion) தீர்க்கமாக விவாதிக்கிறார். ''அகதிகளை பற்றிய செய்தியானது ஒரு மிகப்பெரிய பொய், இந்த பொய்யானது எங்கள் மக்கள் மனதிலும் உள்ளது. என்னிடம் அனைத்து எண்ணிக்கையும் உள்ளது. 1948-ம் ஆண்டு உருவான இஸ்ரயேல் தேசத்தில் இருந்து 1,80,000 அரேபியர்கள் மட்டுமே வெளியேறினர். இஸ்ரயேல் தேசத்தில் முழுமையாக 3,00,000 அரேபியர்களே இருந்தனர். 1,20,000 அரேபியர்கள் மிச்சமிருந்தனர்''[61].

யூதர்களை ''கடலில் தள்ளுவோம்'' என்று சூளுரைத்த எகிப்து, சிரியா மற்றும் ஜோர்டான் நாடுகளுடன் நடந்த 1967-ம் ஆண்டின் ஆறு நாட்கள் போரில், இஸ்ரயேலிய படையானது ''ஆக்கிரமிப்பு பகுதியாக'' இருந்த எருசலேமை விடுவித்து, யூதர்களும் கிறிஸ்தவர்களும் மற்றும் முஸ்லீம் களும் மிக எளிதாக தங்களுடைய புனித வழிபாட்டுத் தலத்திற்கு சென்று வழிபட வழி வகுத்தது. இதனோடு ''மேற்கு கரை'' மற்றும் காசாவையும் இஸ்ரயேலிய படைகள் விடுவித்தது. இப்போது நடந்த நிகழ்வுகள் எவ்வளவு எளிதாக மறக்கப்பட்டுவிட்டன. ஒப்பிட்டு பார்க்கும் போது, சிற்சில தவறுகள் இருந்தாலும், இஸ்ரயேல் நிர்வாகம் மிகவும் மனித தன்மையுடன் நடந்து கொண்டது. ஜோர்டானியர்கள் மற்றும் எகிப்தியர்களின் ஆக்கிரமிப்பு பற்றிய உண்மையை ''கடுமையான உண்மைகள்'' (Harsh realities) என்ற பத்திரிக்கை இவ்வாறாக கூறுகிறது[62]:

19 வருடங்களாக, 1967-ம் ஆண்டு வரை, பெயர் மாற்றப்பட்ட ''மேற்கு கரையை'' கொடுமையான முறையில் ஆக்கிரமித்து, 20 UNWRA அகதி முகாம்களை அமைத்தது. டிசம்பர்' 55, ஏப்ரல் 57, ஏப்ரல்' 63, நவம்பர்'

66 மற்றும் ஏப்ரல்' 67-ம் ஆண்டுகளில் மேற்கு பாலஸ்தீனியர்கள் புரட்சி செய்கையில், இராஜாவான ஹுசைன் பீரங்கி படைகளை அனுப்பி, நகரத்தின் மீது குண்டு பொழிந்து, நூற்றுக்கும் மேற்பட்ட ஆண், பெண் மற்றும் குழந்தைகளை துப்பாக்கியால் கொன்று குவித்தார்.

கடந்த 19 வருடங்களாக எகிப்தின் கொடுமையான ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்ட காசா நகரில் சுமார் 8 UNWRA அகதிகள் முகாம்கள் இருந்தன. இந்த முகாம்களில் அழுக்கடைந்த நிலையில் பாலஸ்தீனர்கள் வலுக்கட்டாயமாக அதிக அளவில் அடைக்கப்பட்டு வாழ்ந்து வந்தனர். எந்த அகதியையும் எகிப்து ஏற்கவில்லை. அவர்களுக்கு இடங்கொடாமலும், கடவுச்சீட்டை கொடுக்காமலும், எகிப்தில் பயணம் மேற்கொள்ளவும் (அல்லது) வேலை செய்யவும் தடை விதித்தது. (இதற்கு மாறாக, 1967-ம் ஆண்டிற்கு பிறகு, பாலஸ்தீனியர்கள் இஸ்ரயேல் தேசத்தில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர்).

தங்களுடைய சக அரேபிய மக்களை 19 வருடங்களாக ஆக்கிரமித்த பிறகு, மேற்கு கரையையும் மற்றும் காசாவையும் முன்னேற விடாமல், பொருளாதாரத்தை முடக்கி, மிக அதிக வேலையில்லா திண்டாட்டத்தை வேண்டுமென்றே ஜோர்டானும் எகிப்தும் உருவாக்கியது. 1960-ம் ஆண்டு முதல் வேலையில்லா திண்டாட்டம் 35-45% தொட்டது, மற்றும் அகதிகளின் வேலையில்லா திண்டாட்டம் 83% உயர்ந்தது. ஆனால் இவையெல்லாம் நடைபெற்ற காலத்தில், உலகம் அமைதியாகவே இருந்தது. 1967-ம் ஆண்டில் நடைபெற்ற போரில், இஸ்ரயேலிய படைகள் இவ்விடங்களை கைப்பற்றிய பிறகே, பாலஸ்தீனிய அரேபியர்களின் ''தார்மீக உரிமை மற்றும் தேசிய உந்துதலை'' பற்றி பேச பலர் கண்டுபிடித்தனர்.

மனிதத்தன்மை கண்ணோட்டத்தோடு காணும்போது, இஸ்ரயேலின் நிர்வாகத்தில் பாலஸ்தீனர்களின் நிலைமை அதிகளவில் செம்மைப்படுத்தப்பட்டது. வெறும் 1% மட்டுமே வேலையில்லா திண்டாட்டம் (1989) இருந்தது. தனிநபரின் தலா மொத்த வருமானம், 20 வருடங்கள் குறைவான காலத்திலே, மூன்று மடங்காக உயர்ந்தது. 1967-ம் ஆண்டிற்கு முன்னர் 1,000க்கு 147 என்றிருந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000-க்கு 30 என்று மாறியது. ஆனால் மற்ற அரபு தேசத்திலோ, குழந்தையின் இறப்பு விகிதம் 1000-க்கு 80 என்று இருந்தது. 7 அரேபிய

கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகங்கள், இஸ்ரயேலிய ''ஆக்கிரமிப்பில்'' ஆரம்பிக்கப்பட்டது. 1967-ம் ஆண்டுக்கு முன்னர் இங்கு எதுவும் இல்லை. ஆனாலும், இஸ்ரயேல் இன்றளவும் தாக்கப்படுகிறது.

அரபு தேசங்களில் இருந்து வந்த திரளான யூத அகதிகளை இஸ்ரேல் தேசம் ஏற்றுக்கொண்டதுபோல, அரேபிய நாடுகளும் இதே போல உண்மையான மனபக்குவத்தோடு நடந்திருந்தால், மேற்கு பாலஸ்தீனத்திலிருந்து வந்த தம்முடைய அகதி சகோதரர்களை 40 வருட முன்னமே ஏற்றுக்கொண்டிருப்பர். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. பாலஸ்தீனிய அரேபியர்கள் ஒரே மொழியையும், மதத்தையும் மற்றும் கலாச்சாரத்தையும் உடையவர்கள். இவர்களில் 70% பேர் சுற்றியிருந்த அரபு தேசங்களில் இருந்து பணத் தேவைக்காக சுமார் 3 தலைமுறைக்கு முன்னர் பாலஸ்தீனத்திற்கு வந்தவர்கள். ஆனாலும் 22 அரபு நாடுகள், தங்கள் பாலஸ்தீனிய சகோதரர்களுக்கு உதவ மனமில்லாமல், இஸ்ரயேலுக்கு எதிரான அரசியல் ஆயுதமாக அவர்களை உபயோகப்படுத்தி வருகின்றனர். இந்த ஈவு இரக்கமற்ற மனித செயல் மாற்றத்தை ஐக்கிய நாடுகள் சபையும் ஆதரிக்கிறது.

1970-ம் ஆண்டின் நடுவில், காசாவில் வாழ்ந்து வரும் பாலஸ்தீன அரேபிய அகதிகளுக்கு புதிய நல்ல தரமான வீடுகளை கட்டித்தர இஸ்ரேல் முயற்சி செய்தது. ஆனால் அரபு நாடுகளின் அழுத்தத்தால், ஐக்கிய நாடுகள் பொது சபை ''தீர்மானம் 32/90-ஐ'' வெளியிட்டு, அகதிகளை வெளியேற்றியதற்காக இஸ்ரயேலை கண்டித்து, திரும்பவும் ''அதே இடத்திற்கு அகதிகளை அனுப்பவேண்டும்'' என்று உத்தரவு பிறப்பித்தது. ஆனால் ஜனவரி மாதம் 1988-ம் ஆண்டு 10 தொலைக்காட்சி குழுக்களுடன் வந்த ஐ.நா. சபை மூத்த அதிகாரி, உண்மை கண்டறியும் பொருட்டு காசாவிற்கு வந்தபோது, முழு பழியையும் இஸ்ரயேல் மீது சுமத்தினார். இதில் ஐ.நா. சபையும் உடன்பட்டு இருந்தது !

## அகதிகள் பிரச்சனை

1948-ம் ஆண்டு பிறந்த இஸ்ரயேல் தேசத்தின் மீது ஆறு அரபு தேசங்களின் படைகள் போர் தொடுத்த சமயத்தில், 6,00,000 அரேபியர்கள்

வெளியேற்றப்பட்டனர் என்பது நிறையபேர் கருத்து. ஆனால் அரேபியர்களின் வெறுப்பால், அந்த ஆறு அரபு தேசத்தில் வாழ்ந்த, 8,00,000 யூதர்கள் தங்கள் வாழ்க்கைக்காக விரட்டியடிக்கப்பட்டனர் என்பது பலபேருக்கு நன்கு தெரியவில்லை. இதற்கு சுலபமான தீர்வு, அகதிகளை பரிமாறிக் கொள்வதுதான்.

மிகுந்த பணக்கஷ்டத்திலும் 8,00,000 யூதர்களை இஸ்ரயேல் ஏற்றுக்கொண்டது. ஆனால் சக சகோதரர்களான அரேபிய பாலஸ்தீன அகதிகளை, அரபு நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு மாறாக, அகதிகள் எல்லோரும் இருட்டாகவும், கஷ்டமாகவும் உள்ள அகதிகள் முகாம்களில் அரபு தேசங்களால் அடைக்கப்பட்டனர். இஸ்ரயேலுக்கு எதிராக குரல்கொடுக்க இத்திட்டத்தை ஏற்படுத்தி வெற்றியும் பெற்றனர். எப்படியெல்லாம் வெற்றிபெற்று உள்ளார்கள்......

## அகதி முகாம்கள்

1967-ம் ஆண்டு நடந்த போரில், யூதேயா, சமாரியா (மேற்கு கரை) மற்றும் காசாவை தத்தெடுத்தது போல். ஐ.நா.சபையால் பராமரிக்கப்பட்டு வந்த பாலஸ்தீன அகதி முகாம்களை தத்தெடுத்தது. அகதிகள் பிரச்சனை மற்றும் சமாதான நடவடிக்கைகளை சீர்படுத்திக்கொள்ள இஸ்ரயேல் விரும்பியது, ஆனால் அரேபியர்களோ அதற்கு மறுப்பு தெரிவித்தனர். தந்திர பகடைகாய்களாக இருந்துவரும் இந்த அகதிகளின் நிலைமையை பார்த்து எல்லாரும் வருத்தப்படுவரே தவிர, யாரும் உதவ மாட்டார்கள். மோசமான நிலையில் உள்ள பாலஸ்தீன அகதிகளின் நிலை மிகவும் வருந்தப்படத்தக்கது. ஏனெனில் இச்சூழ்நிலைகள் எல்லாம் அவர்களின் சொந்த அரேபிய சகோதரர்களால் உருவாக்கப்பட்டு, நிரந்தரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன் பின்னர் ''பாலஸ்தீன புரட்சி'' வெடிக்க ஆரம்பித்தது. 1948 மற்றும் 1967 ஆண்டில் ஏற்பட்ட அகதிகள் பிரச்சனையை தீர்க்க அரபு நாடுகள் மறுத்துவிட்டன என்று பலபேர் கருத்து தெரிவிக்கின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்த பிரிட்டனைச் சேர்ந்த நிபுணரான கர்னல் ரிச்சர்ட் ஹென்றி மெயினர்ஸ் யேகன் இந்த கண்ணோட்டத்தை கூறுகிறார். பிரிட்டன் தூதரின் வீட்டிற்கு இரவு நேர விருந்திற்காக வந்தவரை பார்த்து கர்னல் கேட்கையில், ''அரேபியர்களான

பெட்ரோலிய வளங்கள் எல்லாவற்றையும் உபயோகித்து, பாலஸ்தீன அகதிகளுக்கு நீங்கள் ஏதாவது செய்யலாமே?'' அதற்கு அந்த லெபனானியர் பதில் கூறுகையில், ''எங்களிடம் உள்ள பிரமாதமான பிரச்சாரத்தை நாங்கள் அழிக்கப்போகிறமா என்று உண்மையில் நீங்கள் நினைக்கிறீர்களா? அவை எல்லாம் அரசியல் சுரங்கங்கள்''. இந்த கூற்று மிகவும் இறக்கமற்ற மற்றும் நெறிகெட்டதென்று உணர்ந்த கர்னலை பார்த்து அந்த லெபனானியர் மேலும் கூறுகையில், ''அவர்கள் எல்லோரும் சாதாரண மனித குப்பைகள், ஆனாலும் அவர்கள் அரசியலின் தங்க சுரங்கங்கள் !'' பாலஸ்தீன அகதி முகாம்களின் உபயோகத்தன்மையை பற்றி ஒரே எண்ணம் கொண்டு, வெவ்வேறு பாஷைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை, மெயினர்ஸ் யேகன் தம்முடைய புத்தகத்தில் ''மற்ற அரேபியர்களும் இதே கருத்தை கொண்டுள்ளதாக'' எழுதுகிறார். வீதியில் சென்று பிரச்சனையை உண்டாக்கும் புதிய பாலஸ்தீன தலைமுறை அகதிகள் முகாம்களில் உருவாகிக்கொண்டு வருகின்றனர். அவர்களின் இளம் வயது முதலே, யூதர்களை வெறுப்பதை மட்டுமே கல்வியாக பெற்றனர்.

ஆனால் 1967-ம் ஆண்டு ''எருசலேம்'' மற்றும் ''மேற்கு கரை'' பகுதிகளை ஆறுநாள் போரில் இஸ்ரயேல் மீட்டபின்னரே, மிகவும் தைரியமாக ஐ.நா. சபை இந்த இடங்களை ''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள்'' என்று கூறி வருகிறது. 1922-ம் ஆண்டு நடைபெற்ற உலகநாடுகளின் கூட்டமைப்பு, பாலஸ்தீனம் தேசம் (எருசலேம் உட்பட) மீது யூதர்களுக்கு சட்டரீதியாகவும், தார்மீகமாகவும் மற்றும் வரலாற்று உரிமையும் உள்ளது என்று ஆமோதித்தது. எருசலேம் மீது யூதர்களுக்கு உரிமை உள்ளது என்பதை 1922-ம் ஆண்டு உலக நாடுகள் ஆமோதித்திருப்பதால், அந்த உரிமை இன்றளவும் உயிரோடு இருப்பதாக எண்ணலாம். ஆனால் இதன் பின்னரே, மிகப் பெரிய அளவிலான எண்ணெய் வளங்கள் அரேபிய தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. தங்களுடைய பெட்ரோலிய எண்ணெய் தேவைகளுக்காக, இஸ்ரயேல் தேசம் மீதான யூதர்களின் உரிமையை உலகநாடுகள் சமரசம் செய்துகொண்டது ! இதனால் இன்றோ, அமெரிக்க நிர்வாகமும் மற்றும் ஐ.நா.சபையும் கிழக்கு எருசலேமை ''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி'' என்று விளக்கியுள்ளது. ஆனால் ''கிழக்கு எருசலேமை''ஜோர்டான் ஆக்கிரமித்த போது, எருசலேம் ''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி'' ஆனது.

உண்மையில் இன்றோ எருசலேமின் எந்த ஒரு பகுதியும் ''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாக'' இல்லை.

பகுக்கப்படாத எருசலேம் நகரம், இஸ்ரயேல் தேசத்திற்கு சொந்த மானது. இதே நிலைதான் ''மேற்கு கரையையும்'' சாரும். ஆனால் துரதிருஷ்டவசமாக, அமெரிக்காவும் மற்றும் உலகநாடுகளும், இஸ்ரயேல் அரசு மீது அதிக அழுத்தத்தை கொடுத்து, யூதர்களின் வரலாற்று உரிமையான யூதேயா - சமாரியா பகுதிகளை (மேற்கு கரை) விட்டுக்கொடுக்க கோரி வருகிறது.

## ''அவர்கள் என்னுடைய தேசத்தை பங்கிட்டார்கள்''

இந்த நிகழ்வுகளை பார்க்கும் போது, கர்த்தர் என்ன கண்ணோட்டத்தில் இருக்கிறார்? புறஜாதி நாடுகள் மீது கர்த்தர் கோபமாக உள்ளார். யாருடைய தேசம் இது? எப்படி உலக நாடுகள் இஸ்ரயேலை வற்புறுத்தி, தேசத்தை அராபியர்களுக்கு கொடுக்க முடியும்? கர்த்தருடைய இராஜ்யம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னே மற்றும் இன்று இஸ்ரயேலில் யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படும் சமயத்தில், இஸ்ரயேலர்களை ''என்னுடைய ஜனங்கள்'' என்றும், அவர்களின் தேசத்தை ''என்னுடைய தேசம்'' என்றும் கர்த்தர் கூறுகிறார் (எசேக்கியல் 38 : 16, ஏசாயா 11 : 11). புறஜாதி நாடுகள் மீது கர்த்தர் கோபமாக இருப்பதால், அந்த நாடுகள் அனைத்தையும் ''யோசபாத்தின் பள்ளத்தாக்கில்'' (தானியேல் 12 : 1, மத்தேயு 24 : 21 கூறும் மகா உபத்திரவ காலத்தை குறிப்பதாகும்) வரவழைத்து, இஸ்ரயேலுக்கு எதிராக பாவம் செய்ததால் அந்த நாடுகளை தண்டிப்பார் (யோவேல் 3 : 1-2). அந்த நாடுகளின் முதல் பாவமானது, ''தம்முடைய ஜனங்களை'' பூமியில் உள்ள நாடுகளுக்குள்ளாக சிதறடித்ததாலும் மற்றும் யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டும் காலத்தில் ''என்னுடைய தேசத்தை பங்கிட்டார்கள்'' என்று கர்த்தர் உரைக்கிறார். இந்த தேசம் யாருக்கு சொந்தமானது? அரேபியர்களுக்கா? இல்லை! தேசம் கர்த்தருடையது. அவர் அதை இஸ்ரயேலின் பிள்ளைகளுக்கு கொடுத்தார். ஆனால் உலகநாடுகள் கொடூரமாக தேவனுடைய தேசத்தை பங்கிட்டனர். ''தம்முடைய ஜனமான'' இஸ்ரயேலிடம் இருந்து 77 சதவீத இடங்களை பிடுங்கி, அரேபியர்களுக்கு கொடுத்தனர். ஆனால் இன்றோ அமெரிக்காவும், மற்ற உலக நாடுகளும்

இஸ்ரயேலுக்கு தேவன் தந்த இடங்களை, அரேபியர்களுக்கு திருப்பி தரவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்கிறது (முதல் பக்க அட்டையின் உள்ளே இருக்கும் வரைப்படத்தை காணவும்).

இதற்கு மாறாக அரேபியர்கள் உள்ளிட்ட பிற தேச அரசாங்கங்களின் நடவடிக்கையையும், இஸ்ரயேல் நடவடிக்கைகளையும் கர்த்தர் எப்படி மதிப்பீடு செய்கிறார்? இவர்கள் ஒவ்வொருவருக்கும் எப்படி தீர்ப்பு வழங்கப்போகிறார்? இதனை எரேமியா தீர்க்கதரிசியின் வசனம் மூலமாக காணலாம்.

> உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்.
> – எரேமியா 30 : 11

புறஜாதி நாடுகளின் அரசாங்கங்கள் அழிக்கப்பட்ட பின்னர், இந்நாடுகளின் மக்கள் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரை தேடு வார்கள். தேவனுடைய இராஜ்யத்தின் “தலைநகரமாக” எருசலேம் விளங்கும் (சகரியா 8 : 20-23). இஸ்ரயேல் தேசத்தையும், எருசலேமையும் பங்கு போடுவதற்கும், எடுத்துக் கொள்ளுவதற்கும் வராமல், இஸ்ரயேலின் தேவன் பற்றி அறிந்து, அவர் வழியிலே நடக்க எருசலேமிற்கு வருவார்கள். இஸ்ரயேல் தேசத்தை பங்கிட வராமல், வேதத்தையும், வசனத்தையும் படிக்க வருவார்கள் (ஏசாயா 2 : 1-4).

## அத்தியாயம் – 4

# அரேபிய - இஸ்ரேல் சமாதானம் - வேதாகமத்தின் கண்ணோட்டம்

அரேபியர்களுக்கும், இஸ்ரயேலர்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய உண்மையான சமாதானம் என்ற சாலை முழுவதும் நிறைய கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. சமாதானம் ஏற்படுகிறதோ அல்லது இல்லையோ, தற்போதைய ''சமாதான நடவடிக்கையால்'' மற்றுமொரு அரேபிய – இஸ்ரயேலிய போரானது மீண்டும் உருவாகும் என்று வேதாகமம் கூறுகிறது. இந்த ''சமாதான நடவடிக்கை'' பற்றி வேதாகமத்தை நம்பும் கிறிஸ்தவர்கள் மிகுந்த தீர்க்கத்தரிசன ஆவலோடு காண்கின்றனர். குறுகிய காலத்தில் இத்தீர்க்கத்தரிசனம் நடக்கும் என்று எதிர்பார்ப்பவர்கள், சமாதான நடவடிக்கைகள் மூலமாக எசேக்கியேல் 38:11 –ம் வசனத்தில் கூறியுள்ளபடி இஸ்ரேயலானது ''மதில்கள் இல்லாமல், தாழ்ப்பாள் மற்றும் கதவுகள் இல்லாமலும் அமைதியாக'' வாழ்வார்கள். இதன்பிறகு கோகும் அவனுடைய மற்ற சேனைகளும், இஸ்ரயேல் தேசம் மீது படையெடுப்பதால் இவ்வுலக இராஜ்யங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு போகும் (எசேக்கியல் 38 & 39). ஆனால் கோகின் படையெடுப்புக்கு முன்னர் இன்னுமொரு இஸ்ரயேலிய – அரேபிய போர் நடக்கும் என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது. இதனால் தற்காலிக சமாதானம் ஏற்படுகிறதோ அல்லது இல்லையோ, இந்த சமாதான நடவடிக்கையின் மூலம் ஏற்படக்கூடிய பல்வேறு நிகழ்வுகள் மற்றொரு இஸ்ரயேலிய – அரேபிய போரை ஏற்படுத்தும். ஆனாலும் கோகின் படையெடுப்பை ஒரு சில மாதங்களே இந்த அரேபிய – இஸ்ரயேலிய போர் தாமதப்படுத்தும்.

### எல்லையை விரிவுபடுத்துதல்

''அந்நாளிலே இஸ்ரயேலின் பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம்'' என்ற தேவனுடைய தீர்க்கத்தரிசன நிகழ்ச்சி நிரல்களுக்கு எதிராக இராபின் – அராபத் உடன்படிக்கை அமைந்து உள்ளது (மீகா 7:11)[64]. இஸ்ரயேலின் எல்லைகளை குறைப்பதற்காகவே இந்த சமாதான உடன்படிக்கை

ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இந்த உடன்படிக்கையானது அதிகநாள் நிலைத்திருக்காது. வேதாகமத்தில் ஒரே ஒரு தேசத்தின் எல்லைகள் மட்டும் மிக சரியாக வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த நாடு இஸ்ரயேல் ஆகும். எகிப்தின் நதி தொடங்கி, ஐபிராத் நதி வரை உள்ள எல்லைகளே இஸ்ரயேலின் எல்லைகளாகும் (ஆதியாகமம் 15 : 18-21). நம்முடைய கிறிஸ்தவ யுகத்தை முடிக்கக்கூடிய ''மகா உபத்திரவ காலம்'' அல்லது ''ஆபத்து காலம்'' முடிந்த பிறகே, இஸ்ரயேல் தேசம் தனக்கு உண்டான எல்லைகளை முழுமையாக கர்த்தருடைய இராஜ்யத்தில் பெற்றுக்கொள்ளும் (தானியேல் 12:1, மத்தேயு 24 : 3, 21-22, செப்பனியா 3 : 8,9). *(இந்த தீர்க்கத்தரிசன ஆய்வு எதிர்கால தீர்க்கத்தரிசன நிகழ்வுகளை பற்றி விவரித்தாலும், இவ்விவரங்கள் அனைத்தும் கலந்துரையாடல் உணர்வுடன் வழங்கப்பட்டுள்ளது. ''உபத்திரவத்தின் காலம்'' முடியும்போது, இஸ்ரேல் தேசம் நிச்சயமாக தங்களுக்குரிய சிறிய இடங்களைப் பிடித்துக்கொள்ளும் என்பதை நாங்கள் வரையறுத்து கண்டுப்பிடித்துள்ளோம். அதோடு மட்டுமல்லாமல் இரஷ்ய யூதர்களின் வருகை ''தேசப் பிரச்சனையோடு'' சம்பந்தப்பட்டிருக்கிறது).*

இஸ்ரயேலிய - அரேபிய போரை பற்றி சங்கீதம் 83-ல் வரைபடமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. வேதாகம கால மத்திய கிழக்கு நாடுகளின் நில வரைபடத்தை பார்த்தோமானால், எந்தெந்த நாடுகள் இஸ்ரயேலை தாக்கும் என்பதை கண்டறியலாம். ''அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக, அவர்களை அத்ம பண்ணுறோம். ஏகமனநிர்ணமாய் ஆலோசனை செய்து, நமக்கு விரோதமாய் ஒப்பந்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று இத்தேசங்கள் கூறுவதை காணலாம் (சங்கீதம் 83:4-7). இந்த கூட்டமைப்பு அரபு நாடுகளை பற்றிக் குறிப்பிடுகின்றது. சங்கீதம் 83-ல் சொல்லப்பட்ட காரியங்கள் எதிரி நாடுகளை தோற்கடிக்க, தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட ஜெபமாக இருந்தாலும் (தேவனே மவுனமாயிராதேயும், பேசாமலிரா தேயும்...) அத்தேசங்கள் தோல்வி (என் தேவனே, அவர்களைச் சழல் காற்றின் புழுதிக்கும், காற்றமுத்தத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாகும்) பற்றி கூறப்பட்டிருந்தாலும், இந்த போரின் முடிவு இங்கு விளக்கப்படவில்லை. ஆனால் அரேபியர்களின் தோல்வி எப்படி நிறைவேறும் என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது.

அந்நாளிலே இஸ்ரயேல் தன் எல்லைகள் பலப்படுத்தி

விரிவுபடுத்தும்போது, பூமியின் மேலிருக்கும் குடிகள்மீது மிக மோசமான ''உபத்திரவகாலம் வரும்'' என்றும் மீகா தீர்க்கதரிசி கூறுகிறார் (மீகா 7 : 11–17):

> உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது. அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம்.
>
> அந்நாளிலே அசீரியா முதல் எகிப்தின் பட்டணங்கள் வரைக்கும், எகிப்து முதல் நதிவரைக்கும், ஒரு சமுத்திரம் முதல் மறு சமுத்திரம் வரைக்கும், ஒரு பர்வதமுதல் மறு பர்வதம் வரைக்குமுளள் ஜனங்கள் உன்னிடத்திற்கு வருவார்கள்.
>
> ஆனாலும் தன் குடிகளினிமித்தமும் அவர்கள் கிரியைகளுடைய பலன்களினிமித்தமும் தேசம் பாழாயிருக்கும்.
>
> கர்மேலின் நடுவிலே தனித்து வனவாசமாயிருக்கிற உமது சுதந்தரமான மந்தையாகிய உம்முடைய ஜனத்தை உமது கோலினால் மேய்த்தருளும்: பூர்வநாட்களில் மேய்ந்ததுபோலவே அவர்கள் பாசானிலும் கீலேயாத்திலும் மேய்வார்களாக.
>
> நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்படட் நாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.
>
> புறஜாதிகள் கண்டு தங்களுடைய எல்லாப் பராக்கிரமத்தையுங் குறித்து வெட்கப்படுவார்கள். கையை வாயின்மேல் வைத்துக் கொள்வார்கள். அவர்கள் காதுகள் செவிடாய்ப் போகும்.
>
> பாம்பைப்போல மண்ணை நக்குவார்கள். பூமியின் ஊர்வனவற்றைப் போலத் தங்கள் மறைவிடங்களிலிருந்து நடுநடுங்கிப் புறப்படுவார்கள். நமது தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திகிலோடே சேர்ந்து, உனக்குப் பயப்படுவார்கள். மீகா 7:11-17

உபத்திரவ காலம் பற்றி எவ்வளவு பொருத்தமாக விளக்கப்பட்டுள்ளது ! உபத்திரவ காலம் அமைக்கப்படும் மத்தியில், பாசான் (கோலான் குன்றுகள்) மற்றும் கீலேயாத் பகுதிகளைக் கொண்ட இஸ்ரயேல் தேசத்தை கர்த்தர் மேய்ப்பார் (எபிரேய பதம் ''ஆட்சி செய்வார்''[65]) (வசனம் 14). மனாசேயின்

பாதி கோத்திரத்தார் பாசான் முழுவதையும் (உபாகமம் – 3: 3,4,13) மற்றும் பாசானின் ஒரு பகுதியான கோலான் குன்றுகளையும் யோசுவா 21:27) பெற்றுக் கொண்டார்கள். இன்றும் இருந்து கொண்டு வருகிறது. யோர்தான் நதியின் கிழக்கு கரை பகுதியாக கிலேயாத் விளங்குகிறது (பார்க்க வரைபடம் VI). தற்போது மத்திய கிழக்கில் ஏற்பட்டு வரும் சமாதான நடவடிக்கை, கோலான் குன்றுகள் மற்றும் ''மேற்கு கரையை'' தாரை வார்த்து தரும்படி உந்துகிறது. இஸ்ரயேலுக்கு தேவன் தந்த வாக்குத்தத்தங்களை பற்றி மனிதன் தேவனிடம் பேச்சு வார்த்தை நடத்த முடியுமா? தற்காலிக சமாதானத்திற்காக இஸ்ரயேல் தன்னடைய இடங்களை திருப்பி கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டால், மீண்டும் கோலான் குன்றுகளையும், மேற்கு கரை மற்றும் கிழக்கு கரையையும் இஸ்ரயேல் தேசம் உபத்திரவ காலத்திற்கு முன் மீண்டும் பெற்றுக் கொள்ளும்.

## இரஷ்யா மற்றும் அமெரிக்க நாடுகளில் இருந்து அதிக யூதர்கள் வெளியேறுவர்

''அசீரியா'' மற்றும் ''எகிப்திலிருந்த'' யூதர்கள் திரளாக திரும்பி வந்து கிலேயாத்தையும், லெபனானையும் நிரம்பும் அளவிற்கு குடியமர்த்தப்படுவார்கள் என்று சகரியா விளக்குகிறார் (சகரியா 10 : 10,11). இதனால் தெய்வீக உரிமையின்படி இஸ்ரயேல் தேசத்திற்கு ''லெபனான்'' சொந்தமாகும் (யோசுவா 13 : 5,6). வடக்கு லெபனானில் உள்ள இடையக மண்டல பகுதியை இஸ்ரயேல் ஏற்கனவே ஆக்கிரமித்துள்ளது. அசீரியா மற்றும் எகிப்தில் இருந்து வரும் யூதர்களின் எண்ணிக்கை மிக அதிகளவில் இருக்கும் என்று தீர்க்கமாக எதிர்பார்ப்பதால், ''அவர்கள் அனைவரையும் குடியமர்த்த இடம் இருக்காது''. இவர்கள் அனைவரும் கிலேயாத்தையும் (கிழக்கு கரை) மற்றும் சிறிதளவு வடக்கு லெபனானனையும் நிரப்புவார்கள். ''அசீரியா'' இங்கு ''ஈராக்'' ஐ குறிக்கும். ஆனால் ஈராக்கிலும் மற்றும் எகிப்திலும் சில ஆயிர யூதர்களே உள்ளனர். இந்த எண்ணிக்கையானது சகரியாவின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்ற போதுமானதாயிராது. ''அசீரியா'' என்பது அடையாள மொழியில் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக இஸ்ரயேல் தேசம் ஆசீர்வதிக்கப்போகும் தேசமாக மாறுவதற்கு முன்னரே, இஸ்ரயேல் தேசம் மீது அசீரியா படையெடுக்கும் என்று மீகா 5:5-7-ல் கூறப்பட்டுள்ளது (வசனம் 7).

‘‘அசீரியா’’தோற்கடிக்கப்படும். மீகாவின் தீர்க்கதரிசனமானது, கோகின் படையெடுப்புக்கு (எசேக்கியல் 38, 39) இணையாக கூறப்பட்டு உள்ளது. கோகும் அவனோடிருக்கும் சேனைகளும் இரஷ்யாவையும் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் குடியரசு நாடுகளையும் (முஸ்லீம் நாடுகள் உள்பட) குறிப்பதாக எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். எனவே அசீரியாவில் இருந்து திரளான ஜனங்கள் திரும்பி வருவார்கள் என்பது அடையாள மொழியில், இரஷ்யாவிலிருந்தும் மற்றும் முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளில் இருந்தும் யுதர்கள் திரும்பி வருவதை குறிக்கின்றது. எகிப்து என்பது அடையாள மொழியில் ‘‘கிறிஸ்துவ உலகத்தை’’ குறிக்கும் (வெளி 11:8). இன்று எந்த கிறிஸ்தவ தேசத்தில் மிக அதிகமான யூதர்கள் வாழ்ந்து வருகின்றனர்? அமெரிக்காவில் மட்டும் 50 இலட்சம் யூதர்கள் வாழ்கின்றனர்.

எகிப்தில் இருந்து இஸ்ரயேலர்கள் புறப்பட்டு வெளியே வந்தது, கிறிஸ்தவ யுகத்தின் முடிவில் சிதறடிக்கப்பட்ட பல தேசங்களில் இருந்து, இஸ்ரயேல் தேசத்திற்கு யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு நிழலாக உள்ளதை எசேக்கியேல் தீர்க்கத்தரிசி விளக்குகிறார் (எசேக்கியல் 20 : 32-38). பல நாடுகளிலிருந்து யூதர்கள் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் என்று தேவன் விளக்குகிறார் (எசேக். 20 : 36).

> ‘‘நான் எகிப்துதேசத்தின் வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடு வழக்காடினதுபோல உங்களோடும் வழக்காடுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார’’. எசேக்கியேல் 20:36

ஆதலால் சகரியா தீர்க்கத்தரிசி இவ்வசனத்தின் மூலம் விவரிக்கிறார்.

எகிப்தில் இருந்து இஸ்ரயேலர்கள் புறப்பட்டு வரும்போது, சமுத்திரம் மற்றும் நதியையும் கடந்து தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு சென்றனர். ‘‘சமுத்திரம்’’ மற்றும் ‘‘நதியை’’ அடிப்பது என்ற (இந்த தீர்க்கத்தரிசனத்தில் உள்ள எபிரேய வார்த்தையானது, ஐபிராத்தை குறிப்பிடாமல், வெறும் நதியை பற்றியே குறிப்பிடுகிறது). இங்கு அடையாள மொழியில், எல்லா தடைகளையும் மீறி, முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளிலிருந்து இஸ்ரயேல் தேசத்திற்கு யூதர்கள் திரும்பி

வருவதை குறிப்பதாக சகரியா தீர்க்கத்தரிசி கூறுகிறார் (சகரியா 10 : 11). கம்யூனிசமே முக்கிய தடையாக இருந்தது. கம்யூனிசம் உடைக்கப்பட்ட பிறகு, திரளான யூதர்கள் (5 இலட்சம்) இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பி வந்தனர். உலகில் உள்ள எந்த நாட்டில் இருந்தும், திரளான யூதர்கள் இந்தளவில் தேசத்திற்கு வருகை தந்ததில்லை (எரேமியா 16:14,15)

> ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல்,
>
> இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள், நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 16:14,15.

## போருக்கு இழுத்து செல்லும் ''சமாதான நடவடிக்கைகள்''

''சமுத்திரமும், நதிகளும் (ஐபிராத்து நதி அல்ல) அடிக்கப்படுவது (மற்றும்) அசீரியாவிலிருந்து திரளான யூதர்கள் இஸ்ரயேல் தேசத்திற்கு வருவார்கள் என்ற இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் சம்பந்தம் உள்ளதாக ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார் (ஏசாயா 11:14-16). இதற்கு முந்தைய வசனத்தில், இஸ்ரயேலில் துரத்துண்டவர்களையும் மற்றும் யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களையும் பல நாடுகளில் இருந்து கூட்டி சேர்க்கப்படுவார்கள் (ஏசாயா 11:10-12). ''எப்பிராயீம் யூதாவின்மேல் பொறாமையாயிரான் (ஏசாயா 11:13)'' என்ற வசனமானது பத்து கோத்திரத்தின் ''இஸ்ரயேல் வம்சத்தாரும்'' (எப்பிராயீம்) மற்றும் இரண்டு கோத்திர ''யூதா வம்சத்தாரும்''ஒன்றாக கூட்டிச் சேர்க்கப்பட்டு தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு ஒன்றாக கூடி வருவார்கள் (எரேமியா 3:18) என்ற எரேமியா தீர்க்கத்தரிசி உரைத்த காரியத்திற்கு இணையாக உள்ளது.

தேசத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்படும் சமயத்தில், இஸ்ரயேல் தேசத்தின் வடமேற்கு மற்றும் கிழக்கு கரையில் இருபுறமும் போர் வெடிக்கும்.

''அவர்கள் (இஸ்ரயேல்) இருவரும் ஏகமாய் கூடி மேற்கேயிருக்கிற (மத்திய தரை கடற்கரையின் வடமேற்கில் காசா உள்ளது. இங்கு தான் பாலஸ்தீனர்கள் தற்போது வாழ்ந்து வருகின்றனர்). [பெலிஸ்தருடைய எல்லைகளின் மேல் பாய்ந்து'' (ஏசாயா 11:14)], எபிரேய மொழியில் ''பாய்ந்து'' என்ற வார்த்தைக்கு ''பறந்து வந்து பின்னால் தாக்குவது'' என்று அர்த்தமாகும். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ''எல்லைகள்'' என்ற வார்த்தை கடற்கரையை குறிக்கும், அதாவது கடல்பரியந்தமும் அதன் கீழ்கரையோரம் குறிப்பதாகும் (எண்ணாகமம் 34:11). பாலஸ்தீன நாடு அல்லது காசாவின் தன்னாட்சி கொஞ்ச நாள் மட்டும் நீடித்திருக்கும். ஏவுகணைகள் அல்லது போர் விமானங்களை மத்தியதரை கடல் மேலாக பறக்க வைத்து, பாலஸ்தீனர்களை பின்னால் இருந்து இஸ்ரயேல் தாக்கும். கிழக்கு எல்லை என்னவாகும்?

> அவர்கள் **(இஸ்ரயேல்)** இருவரும் ஏகமாய்க்கூடி மேற்கேயிருக்கிற பெலிஸ்தருடைய எல்லைகளின்மேல் பாய்ந்து, கீழ்த்திசையாரைக் கொள்ளையிட்டு, ஏதோமின்மேலும் மோவாபின்மேலும் கைபோடுவார்கள் அம்மோன் புத்திரர் அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள். ஏசாயா 11:14

பழைய ஏற்பாட்டு கால தேசங்கள், இன்றைய யோர்தான் நதியின் கிழக்கு கரை மற்றும் உப்பு கடல் நடுவாக அமைந்துள்ள அரேபிய நாடான ஜோர்டானில் உள்ள பகுதிகளை கைப்பற்றியிருந்தது (பார்க்க வரைபடம் VI) ஜோர்டான் நாட்டை போரில் வெற்றி கொள்வதின் மூலம், இஸ்ரயேல் தேசமானது ஜோர்டான் பகுதிகளை (கிலேயாத், அம்மோன், மோவாப் மற்றும் ஏதோம்) பிடித்துக் கொள்ளும். இதனால் உலகம் முழுவதும் யூதர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு, அதன்மூலம் இரஷ்யாவிலிருந்தும் மற்றும் முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளிலிருந்தும் திரளான யூதர்கள் இஸ்ரயேலுக்கு திரும்பி வருவார்கள். ''அசீரியாவிலே அவருடைய ஜனத்தில் மீதியானவர்களுக்கு ஒரு பெரும்பாதையிருக்கும்...'' (ஏசாயா 11 : 16)

வடக்கு தேசத்தில் இருந்து கோகு வரும் என்று எசேக்கியல் தீர்க்கத்தரிசி கூறுகிறார் (எசேக்கியல் 38 : 14,15). பல தேசங்களில் இருந்து யூதர்கள் திரும்பி வருதலை பற்றி நிறைய தீர்க்கத்தரிசனங்கள்

உரைக்கப்பட்டிருந்தாலும் முக்கியமாக வடதிசை நாடுகளிலிருந்து (கோகின் தேசம் அல்லது முன்னாள் சோவியத் குடியரசு நாடுகள்) யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவர் என்ற தீர்க்கதரிசனமே முதன்மையாக உள்ளது (எரேமியா 16 : 14-15, 31:7-8, 23:8, 3:18). முதலில் கொஞ்சம் பேர் ''ஊரில் ஒருவனும் மற்றும் வம்சத்தில் இரண்டு பேருமாக'' திரும்புவார்கள் (எரேமியா 3:14-18). கி.பி. 1878-ம் ஆண்டு முதல் கம்யூனிசம் வீழ்ந்த கி.பி. 1990-ம் ஆண்டு வரை, சில இரஷ்ய யூதர்களே இஸ்ரேலுக்கு திரும்பி வந்துள்ளனர். ஆனால் ஏசாயா தீர்க்கத்தரிசியோ, சிறு துளிகளாய் (ஒவ்வொருவரும்) கூட்டிச்சேர்க்கப்படும் சமயத்தில் பெரிய எக்காளம் ஊதப்படும். அப்போது திரளான யூதர்கள் திரும்ப வருவார்கள் என்கிறார் (ஏசாயா 27:12-13). எவ்வளவு பெரிய இது எக்காளம்? இழந்து போன உரிமையை மீட்டு கொள்வதற்கான அடையாளமே பழைய யூபிலின் எக்காளம் (லேவியராகமம் 25). இன்றோ மக்களின் உரிமை என்ற எக்காளம் ஊதப்பட்டதால், கம்யூனிசம் வீழ்ந்தது. இதனால் 5 இலட்சம் யூதர்கள் இஸ்ரயேலுக்கு திரும்பினர். ''வடக்கு தேசத்திலிருந்து'' இன்னும் திரளான யூதர்கள் வெளியே வருவதற்கு மீண்டும் எது காரணமாகும்? குடியரசு நாடுகளில் இருந்து அதிகமான யூதர்கள் இஸ்ரேலுக்கு திரும்ப வருவதற்கு வருங்காலத்தில் நடக்கவிருக்கும் அடுத்த இஸ்ரயேல் - அரபு நாடுகளின் போரே காரணமாய் இருக்கும். இதனையே ஏசாயா தீர்க்கத்தரிசி குறிப்பிட்டு காட்டுகிறார் (ஏசாயா 11 : 14-16). இந்த முடிவு சரியான யூகம் தானா என்பதை காலம் தான் வெளிப்படுத்த வேண்டும்.

மேற்கிலே காசாவையும், கிழக்கிலே மோவாப், அம்மோன் மற்றும் ஏதோம் பகுதிகளை ஆண்டு வரும் பாலஸ்தீனர்களை இஸ்ரயேல் தோற்கடிப்பது குறித்த ஏசாயாவின் இத்தீர்க்கத்தரிசனத்திற்கு இணையாக செப்பனியா தீர்க்கத்தரிசனமும் உள்ளது (ஏசாயா 11:14, செப்பனியா 2:2-7). இவையெல்லாம் ''கர்த்தருடைய கோபத்தின் நாட்களில்'' அமைக்கப்படும் (செப்பனியா 2:1). காசாவில் இருக்கும் பெலிஸ்தர்களின் முழுமையான வீழ்ச்சி இங்கு குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. பழைய வேதாகமம் கால பெலிஸ்தர்களின் வரலாறு முடிந்து போனாலும், அடையாள பாஷையில் இவர்கள் இன்று அந்த இடங்களை ஆக்கிரமித்து வாழும் பாலஸ்தீனர்களை குறிக்கும். பாலஸ்தீனர்கள் தங்களை பெலிஸ்தர்களின் பிள்ளைகள் என்றும் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று கூறிக்கொள்ளும் ஒரு கதையும் நிலவிக் கொண்டுதான் இருக்கிறது. பாலஸ்தீனர்களின் தொடக்கத்தை பற்றி

எசேக்கியல் தீர்க்கத்தரிசி மிக அழகாக விளக்குகிறார் (எசேக்கியல் 36 : 1-7).

மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் மலைகளை நோக்கித் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்னவென்றால் இஸ்ரவேல் மலைகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், பகைஞன் உங்களைக் குறித்து ஆ ஆ, நித்திய மேடுகள் எங்கள் வசமாயிற்று என்று சொல்லுகிறபடியினால்,

நீ தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், நீங்கள் புறஜாதி களில் மீதியானவர்களுக்குச் சுதந்தரமாயிருக்கும்படி அவர்கள் உங்களைப் பாழாக்கி, உங்களைச் சுற்றிலுமிருந்து விழுங்கின படியினாலும், நீங்கள் வாயாடிகளுக்குப்பேச்சும் ஜனங்களுக்கு அவதூறுமானவர்களானபடியினாலும்,

இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; மலைகளுக்கும், மேடுகளுக்கும், ஆறுகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும், பாழாக்கப்பட்ட அவாந்தர இடங்களுக்கும், வெறுமையாய் விடப்படட் பட்டணங் களுக்கும் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்:

உங்களைச் சுற்றிலும் மீதியான புறஜாதிகளுக்கு நீங்கள் கொள்ளையும் பரியாசமுமாய்ப்போனபடியினால்,

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என் தேசத்தைக் கொள்ளையிடப்பட்ட வெளியாக்கும்படிக்கு அதை முழு இருதயத்தின் சந்தோஷத்தோடும் கர்வமான மனதோடும் தங்களுக்குச் சுதந்தரமாக நியமித்துக்கொண்ட புறஜாதிகளில் மீதியானவர்களுக்கு விரோதமாகவும் ஏதோம் அனைத்துக்கும் விரோதமாகவும், என் அக்கினியான எரிச்சலினால் பேசினேன் என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

ஆகையால், நீ இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துத் தீர்க்க தரிசனம் உரைத்து, மலைகளுக்கும், மேடுகளுக்கும், ஆறுகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும் சொல்லவேண்டியது

என்னவென்றால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, நீங்கள் புறஜாதிகள் செய்யும் அவமானத்தைச் சுமந்தபடியினால் நான் என் எரிச்சலினாலும் என் உக்கிரத்தினாலும் பேசினேன்,

ஆதலால், கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் கரத்தை உயர்த்துவேன், உங்களைச் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகள் தங்களுடைய அவமானத்தை நிச்சயமாய்ச் சுமப்பார்கள் என்று சொல்லுகிறேன். எசேக்கியேல் 36:1-7.

இஸ்ரயேல் தேசத்தை சுற்றி இருக்கக்கூடிய (அரேபியர்கள்) மீது கர்த்தர் கோபமாக இருக்கிறார். இவர்கள் இஸ்ரயேல் தேசத்தில் குடிபெயர்ந்து அதனைப் பாழாக்கினர். கர்த்தர் பாலஸ்தீனர்களை தண்டிப்பார் (கடைசி அட்டைக்கு முன்னால் உள்ள வரைபடத்தை பார்க்கவும்)[+66]. மேலும் மோவாப் மற்றும் அம்மோன் புத்திரர் இஸ்ரயேல் மக்களுக்கு செய்த நிந்தையை செப்பானியா கூறுகிறார். ''அவர்கள் (இஸ்ரயேல்) எல்லையைக் கடந்து பெருமை பாராட்டிச் சொன்ன தூஷணத்தையும் கேட்டேன்'' (செப்பனியா. 2 : 8). இஸ்ரயேலின் வனாந்திர பயணத்தின் போது இருந்த மோவாப்பையும் மற்றும் அம்மோனியரையும் கர்த்தர் ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார். ஆனால் தற்கால மோவாப் மற்றும் அம்மோனியரான ஜோர்டான் அரபு தேசங்களை கர்த்தர் விடமாட்டார். 1948-ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர போரில், மேற்கு கரை மற்றும் வேதாகம எருசலேமை அவர்கள் எல்லையை கடந்து ஜோர்டான் கைப்பற்றியது. கைப்பற்றினபின்பு, மேற்கு கரை மற்றும் கிழக்கு எருசலேமில் இருந்த அனைத்து யூதர்களையும் ஜோர்டான் நாடு வெளியேற்றியது. என் ஜனத்தை நிந்தித்து... 1967-ம் ஆண்டு போரில் இஸ்ரேல் தேசம் வெற்றியடையும் வரை, யூதேயா மற்றும் சமாரியாவை (தவறுதலாக மேற்கு கரை என்று அழைக்கப்படுகிறது) ஜோர்டான் நாடு தன் வசம் வைத்திருந்தது. எருசலேமில் இருந்த யூதர்களின் புனித வழிபாட்டுத்தலங்களை அழித்ததும் ஜோர்டான் நாடுதான். சதாம் உசேனோடு இணைந்து, ''இஸ்ரயேலின் பாதி பகுதி எரித்துப்போடப்படும்'' என்ற நம்பிக்கையோடு பாலஸ்தீனர்களோடும் கைகோர்த்து ஜோர்டான் தோற்றது. ஆனால் இன்று அரங்கேறி கொண்டிருக்கும் ''சமாதான நடவடிக்கையில்'' ஜோர்டான் இராஜாவான ஹுசைன் கடந்த கால நிகழ்வுகளை எல்லாம் மறந்து, நியாயமான காரியங்களை எவ்வளவு

மேன்மையாகவும் சமநிலையோடும் கூற வேண்டும் என்று அறிந்து உள்ளார். ஆனால் கர்த்தரோ மறக்கவில்லை. இந்த பாவங்களால், மோவாபும், அம்மோனும் (தற்போதைய ஜோர்டான் பகுதிகள்) ''நித்திய பாழுமாயிருக்கும். என் ஜனத்தில் (இஸ்ரயேல்) மீந்தவர்கள் அவர்களை கொள்ளையிட்டு, என் ஜாதியில் (இஸ்ரயேல்) மீதமானவர்கள் அவர்களை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் (செப்பனியா 2 : 9). கோகின் படையெடுப்பிற்கு முன்னர், இஸ்ரேல் பல பகுதிகளையும் மற்றும் திரளான ஜனங்களை பெற்றுக் கொள்ளும் என்று வேதாகமம் கூறுகிறது. இஸ்ரேல் அரபு போரில், இஸ்ரயேல் வெற்றிபெற்று, தம்முடைய எல்லைகளை விரிவுபடுத்தும் சமயத்தில், மேற்கூறப்பட்ட இரண்டு காரியங்களும் நிறைவேறும். இதனால் உலகம் முழுவதும் யூதர்கள் மேல் வெறுப்பு உண்டாகும். திரளான யூதர்கள் இஸ்ரேல் தேசத்திற்கு வருவது உந்தப்படும்.

## அத்தியாயம் - 5

# மீந்தவர்களே (பரிசுத்த மந்தை) ஆசீர்வதிக்கப்போகும் தேசமாக இருப்பார்கள்

அரேபியர்களை போரில் வென்றபிறகு (ஏசாயா 11:14, செப்பனியா 2:4-10, எசேக்கியல் 36:7), இஸ்ரயேல் அமைதியாகவும், சமாதானத்துடனும் மற்றும் ''மதில்கள் இல்லாத கிராமங்களைப்போல்'' இருக்கும் என்று அடையாள பாஷையில் எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறுகிறார் (எசேக்கியல் 38:12)

இந்த தருணத்தில்தான், கோகும் அதனோடு சேர்ந்த நாடுகளும் இஸ்ரயேல் மீது படையெடுக்கும் (எசேக்கியேல் 38 : 3-6). இங்கு கோகு படையெடுக்கும் போது, 10-ல் 9 பாகம் யூதர்கள் ''இரண்டாவது இனப்படுகொலையால்'' நிரந்தரமாக கொல்லப்படுவார்கள் என்றும் மீதமுள்ள ஒரு பாகம் மட்டுமே பரிசுத்த மீந்தவர்களாக எண்ணப்படுவர் என்று மறுஜென்ம கிறிஸ்தவர்களின் இந்த கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

### கோகு படையெடுப்பின் காரணம்

தேவனுடைய பராக்கிரமத்தை இஸ்ரயேல் தேசம் உணரவேண்டும் என்பதற்காக கோகு படையெடுப்பு நடத்தப்படுகிறதா? அல்லது தேசத்தை தாக்கவரும் புறஜாதி நாடுகள், இஸ்ரயேல் தேவனின் பராக்கிரமத்தை உணர்ந்துகொள்ள, இப்படையெடுப்பு நடத்தப்படுகிறதா? இருவருக்கும் தேவன் சரியான பதில், ''ஆமாம்'' என்பதே. ஆனால் தேவன் இவர்களுக்கு உணர்த்தும் பாடம் வேறுபட்டு இருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் எப்படி இஸ்ரேல் மக்களோடு சேர்ந்து தேவன் போரிட்டாரோ, அப்படியே நிகழ்காலத்திலும் இஸ்ரயேலுக்கு ஆதரவாக செயல்படுவார். இதனை சகரியா 14:1-3-ல் வாசிக்கலாம்.

இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளை யானது உன் நடுவிலே பங்கிடப்படும்.
எருசலேமுகக் விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதி களையும் கூட்டுவேன். நகரம் பிடிக்கப்படும். வீடுகள் கொள்ளை யாகும். ஸ்திரீகள் அவமானப்படுவார்கள். நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள். மீதியான ஜனமோ நகரத்தை விட் அறுப்புண்டு போவதில்லை.

கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்'' சகரியா 14:1-3

இஸ்ரயேலை விடுவிக்கும் சமயத்தில், கர்த்தரோ இவ்வாறாக கூறுகிறார்.

ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்ன வென்றால் நான் இஸ்ரவேல் வம்சத்தார் மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லு கிறார் என்றார். (எசேக்கியேல் 39:25,29.)

இதோடு, கோகின் படையை தோற்கடிக்கும்போது, அநேக ஜாதிகளின் முன்பாக மகத்துவத்தையும் பரிசுத்தத்தையும் கர்த்தர் வெளிப்படுத்துவார் என்றும் அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள் என்றும் தேவன் கூறுகிறார் (எசேக்கியல் 38:23). இஸ்ரயேலின் மதத்துவமான வெற்றியால், அவர்கள் வேறுவழியில்லாமல் தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன், உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன். எரேமியா 30:11

கோகின் படையெடுப்பின்போது எவ்வளவு யூதர்கள் கொல்லப் படுவார்கள் என்று எசேக்கியல் தீர்க்கத்தரிசனம் கூறவில்லை. மாறாக கோகின் சேனை மிகப்பெரிய அளவில் கர்த்தரால் அழிக்கப்படும் என்றே இங்கு வலியுறுத்தி காட்டப்படுகிறது. இதற்கு மாறாக, இஸ்ரயேலின் வெற்றி

வாய்ப்பு இங்கு கூறப்படுகிறது.

> ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்
>
> அவர்கள் தங்கள் அவமானத்தையும், பயப்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய்த் தங்கள் தேசத்தில் குடியிருக்கும்போது எனக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த எல்லாத் துரோகத்தையும் சுமந்து தீர்த்தபின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி, இஸ்ரவேல் வம்சமனைத்துக்கும் இரங்கி, என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன். (எசேக்கியேல் 39:25,26)

"எருசலேம் நகரத்தாரில் பாதிப்பேர் சிறைப்பட்டு போவர்கள் (கொல்லப்படமாட்டார்கள்). மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டு போவதில்லை " என்று இதற்கு இணையான தீர்க்கத்தரிசனம் கூறுகிறது (சகரியா 14 : 2,3). சிறைப்பட்டு போனவர்கள் என்ன ஆவார்கள்? கோகின் படையெடுப்பிற்கு பிறகு, இன்னும் நிறைய யூதர்கள் இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார் (ஏசாயா 66 : 19, 20; 60:4-9). சிறைப்பட்டு போகும் "பாதி" மனுஷர்கள், கோகின் படையெடுப்பிற்கு பிறகு, இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பி கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

## இஸ்ரேலுக்காக செங்கோல் ஏந்துபவர்

10-ல் 9-பாக யூதர்கள் அழிக்கப்படுவார்கள் என்ற இக்கருத்தானது, பழைய திருத்தப்பட்ட நியம பதிப்பில் (Revised Standard Version) எசேக்கியல் 20:37-ல் உள்ள "கோல்" என்ற எபிரேய வார்த்தை தவறுதலாக மொழிபெயர்க்கப்பட்டதால் ஏற்பட்டது. இங்கு கூறப்பட்டுள்ள "கோல்" என்ற வார்த்தைக்கு "மேய்ப்பனின் எண்ணும் கோல்" என்று தவறுதலாக அர்த்தம் கொண்டுள்ளது. ஆனால் புதுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ள புதிய திருத்தப்பட்ட நியம மதிப்பில் (New Revised Standard Version) இவ்வார்த்தையானது சரியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எரேபிய வசனத்தில் எந்த ஒரு எண்ணிக்கையோ அல்லது எண்ணுவதோ கொடுக்கப்படவில்லை என்பது நன்கு விளங்கும். கிங் ஜேம்ஸ் வேதாகம

பதிப்பில், சீபத் (Shebet) என்ற எபிரேய வார்த்தை ''கோல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், அவற்றை ''தடி (அல்லது) செங்கோல்'' என்றும் மொழிப் பெயர்க்கலாம். ''சீபத்'' என்ற எபிரேய வார்த்தையில் ''எண்ணுவது'' என்ற பொருள் இல்லை. ஆனால் ''இரண்டாம் இனப்படுக்கொலை'' வர்ணனையாளர்கள் துரதிருஷ்டவசமாக இந்த வார்த்தையை ''தசமபாகத்தோடு'' சேர்த்துவிட்டார்கள் (லேவி 27: 32, 33).

எங்கெல்லாம் ஒரு இராஜா ஆளுகை செய்யும் சூழ்நிலை பொருத்தமாகிறதோ, அங்கெல்லாம் பலமுறை ''சிபெத்'' என்ற எபிரேய வார்த்தை (கோல் என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது) செங்கோல் என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. யூதர்கள் திரும்பவும் கூட்டிச் சேர்க்கப்படும் சமயத்தில், தேவன் அரசாளுவார் என்று எசேக்கியல் 20:37 கூறுகிறது (வசனம் 34). சில ஆங்கில வேதாகமத்தில் ''சீபத்'' என்ற வார்த்தைக்கு ''செங்கோல்'' என்று விளிம்பில் கொடுக்கப்பட்டிருக்கும்.

நியாயப்பிரமாண முறைமையின்படி, தேவனுக்கு என்று 10-வதாக தசமபாகமாக கொடுக்கப்படும் ஆடு, மாடுகளை அதாவது 10-வது ஆடு, மாடுகளை இளப்பமானதா, நல்லதா என்று ஆராயக் கூடாது (லேவி. 27: 32, 33). மோசமாகவும், கோளாறு மற்றும் முடமான பிராணியாக இருந்தாலும், அது கர்த்தருடையது. சிலர் கூறுவதுபோல், கோகின் படையெடுப்பின்போது பத்தாம் பாகமாகிய ''விசுவாச யூதர்கள்'' படையெடுப்பில் இருந்து மீட்கப்படுவார்கள் என்ற கருத்து இங்கு சரியாக பொருந்தவில்லை.

பத்தாம் பாகமாகிய ஆடு, மாடு தேவனுக்கு என்று கொடுக்கப் படுவதால், மேலும் இருக்கக்கூடிய 9 பாகத்திற்கு என்னவாகும்? அவைகள் கொல்லப்படுமா? இல்லை. அவை மேய்ப்பனோடு ஆடு, மாடு மந்தைகளாக உயிரோடு வாழும். ஆதலால் கோகின் படையெடுப்பின்போது 9 பாக யூதர்களும் அழிக்கப்படுவார்கள் என்ற கூற்றை 9 பாகமாக இருக்கக்கூடிய உயிரோடிருக்கும் ஆடு, மாடுகளை குறிக்காது. உண்மையில், கோகின் படையெடுப்பால் திரளான யூதர்கள் கொல்லப்படுவார்கள் என்று எங்கும் சொல்லப்படவில்லை. ஆனால் கோகின் படையெடுப்பால் ''இஸ்ரவேல் வம்சனைத்தும்'' மகிமைப்படுத்தப்படும் (எசேக்கியல் 39:26).

## பரிசுத்தமான மீந்தவர்கள் சிறுபன்மையினரா?

''மீந்தவர்கள்'' என்ற வார்த்தையை குறிக்கும் பல எபிரேய வார்த்தைகள் ''வழிதோன்றல்கள், உயிர்பிழைத்தவர்கள், எஞ்சியவர்கள்'' என்ற அர்த்தத்தை கொடுக்கும். ஆனால் இந்த வார்த்தையானது, சிறுபான்மையினரைக் குறிக்கும் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ''மீந்தவர்கள்'' என்பது சிறுமை அல்லது பெரும்பான்மையை குறிக்கலாம். மரக்காலின் பத்தாம் பாகமான மாவை, ஆசாரியனுக்கு பாவநிவாரண பலியாக கொடுக்கும்போது, அதில் அவர் ஒரு கைப்பிடி மாவை மட்டும் எடுத்து பலிபீடத்தின் மேல் தகனிப்பார். மிச்சமிருக்கும் மாவு ''மீதமானது'' என்று அழைக்கப்படும் (லேவியராகமம் 2:3:5:11-13). இங்கு மீதமானது [எபிரேய வார்த்தை யாதார் (Yathar)] என்ற வார்த்தை பெரும் பாகத்தை குறிப்பிடுகின்றது.

புதிய ஏற்பாட்டில், மீதமானவர்கள் என்ற வார்த்தை அதிக பகுதியைக் குறிக்கும் என்பதை அப்போஸ்தலர் பவுல் கூறுவதை இங்கு இன்னொரு உதாரணமாக பார்க்கலாம் (அப்போஸ்தலர் 15 : 14-17). சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடுவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். இங்கு ''மீதியானவர்கள்'' (எபிரேய வார்த்தை -சீரியத்) என்ற வார்த்தையை பழைய ஏற்பாட்டின் (ஆமோஸ் 9:11) வசனத்தில் இருந்து குறிப்பிட்டு காட்டுகிறார். ''ஏதோம்'' என்ற எபிரேய வார்த்தைக்கு ''சிவப்பு, ஆதாம் அல்லது மனிதன்'' என்று அர்த்தம். ''ஆதாம் அல்லது மனிதன்'' என்ற எபிரேய வார்த்தைகளுக்கு சிவப்பு என்று அர்த்தம். பேதுருவின் உரையாற்றலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஜாதிகள் என்ற வார்த்தை, கர்த்தருடைய இராஜ்யத்தில் பெரும்பாலான மனுகுலம் ''நித்திய ஜீவனை'' பெறும்படி சோதிக்கப்படுதை குறிக்கிறது. யாத்தர் மற்றும் சீரியத் (yathar & Sheeriyth)'' என்ற இரண்டு எபிரேய வார்த்தைகளும், ''இஸ்ரயேலில் மீந்தவர்களை பற்றிப் பேசினாலும், அவர்களை சிறுபான்மையினர் என்று எங்கும் குறிப்பிடவில்லை.

இஸ்ரயேலில் மீதமானவர்களின் அளவு எவ்வளவு இருக்கும் என்பதை மூன்று வித உதாரணங்களின் மூலமாக மீகா தீர்க்கதரிசி விளக்குகிறார்

(மீகா 2 : 12).

> யாக்கோபின் ஜனங்களே, உங்களெல்லாரையும் நான் நிச்சயமாய்க் கூட்டுவேன். இஸ்ரவேலில் மீதியானவர்களை நிச்சயமாய்ச் சேர்ப்பேன். போஸ்றாவின் ஆடுகளைப்போல் அவர்களை ஏகக்கூட்டமாக்குவேன்.தன் தொழுவத்துக்குள்ளே சேர்ந்த் மந்தைக்குச் சமானமாய் ஜனத்திரளினாலே இரைச்சல் உண்டாகும். மீகா 2:12

முதலாவதாக ''யாக்கோபு'' என்ற வார்த்தை மாம்சீக இஸ்ரயேலர்களை குறிக்கும். தேசத்தில் கர்த்தர் கூட்டிச் சேர்க்கும் யாக்கோபின் ஜனங்கள்,அடுத்த வரியில் உள்ள இஸ்ரேலின் மீதானவர்களுக்கு சமமாக இருக்கும். இதனால் மீந்தவர்கள் என்பவர்கள் 1/10 சிறுபான்மையினர் இல்லை. இரண்டாவது இந்த ''இஸ்ரயேலின் மீந்தவர்கள்''போஸ்றாவின் ஆடு மந்தையை போல இருப்பார்கள். கொழுத்த ஆடுகள் மட்டும் போஸ்றாவில் இருப்பதில்லை மாறாக பெரிய ஆட்டு மந்தைகளும் இருக்கும். மூன்றாவது, தொழுவத்துக்குள்ளே மந்தைக்குச் சமானமாய் மக்கள் திரளாக இருப்பதால், அங்கு இரைச்சல் உண்டாகும். ஆதலால் ''மீதியானவர்கள்'' என்பது நிச்சயமாக ஏகக்கூட்டமான ஆடு மந்தையை குறிக்கும்.

ரோதர்ஹாம் வேதாகம பதிப்பு (Rotherham Translation) ''மீதியானவர்களை'' ''ஆபத்தில் உள்ள ஆடுகள்'' என்று கூறியுள்ளது. இவை கோகின் படையெடுப்பின்போது, இஸ்ரயேல் தேசம் எதிரிகளால் சூழப்பட்ட நிலைமையை மையப்படுத்தி காட்டுகிறது. இதற்கு அடுத்த வசனம் கர்த்தர் எவ்வாறு இஸ்ரயேலின் ஆடுகளை காப்பாற்ற போகிறார் என்று விவரிக்கிறது (மீகா 2:13).

> தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார் கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார். மீகா 2:13

''தடைகளை நீக்கிப்போடுவார்'' என்ற எபிரேய வார்த்தைக்கு ''தடைகளை உடைத்துக் கொண்டு வருபவர்'' என்று பொருளாகும். கோகின் படையிடம் இருந்து இஸ்ரயேலின் இராஜா அவர்களை விடுவிப்பார். கர்த்தரை நோக்கி விசுவாசத்துடன் ஜெபம் செய்யும் ''தளர்ந்தவர்கள்'' (எபிரேய அர்த்தம் முட்டிப்போட்டு) மட்டும் விடுவிக்கப்படுவார்கள் (சகரியா 12:8). விசுவாசமில்லாதவர்கள் அழிக்கப்பட்டு போவார்கள் (எசேக்கியல் 20:38). இப்படி அழிக்கப்படுபவர்கள், ''மீதியானவர்களுக்கு'' கொடுக்கப்படும் விசேஷ ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்ளமாட்டார்கள். ஆனால் அப்படி விசுவாசமில்லாமல் மரித்தவர்களுமாகிய ''தீமைசெய்தவர்கள்'' ''ஆக்கினையை அடையும்படி'' பொதுவான உயிர்த்தெழுதலில் பிரேத குழியிலிருந்து வருவார்கள் (யோவான் 5 : 28, 29).

கோகு படையெடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகே, இஸ்ரயேல் தேசத்திற்கு மேசியா அல்லது கிறிஸ்து வெளிப்பட்டு, கர்த்தருடைய ஆவியை அவர்களின் மேல் ஊற்றுவார் (சகரியா 12 : 9-14). அந்த சமயத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் ''மற்றுமுண்டான சகல குடும்பங்களாக'' இருப்பார்கள் என்று விவரிக்கப்படுகிறது. ஆதலால் ஏகக்கூட்டமான ஆடுகளாகிய இஸ்ரயேலின் மீதியானவர்கள், தங்களுக்காக மரித்த இரட்சகரை தெரிந்து கொள்வார்கள். இதனால் தேச முழுவதும் பெரிய புலம்பல் உண்டாயிருக்கும். ஆனால் அடுத்த வசனத்தில் இஸ்ரயேலில் மீதியானவர்களுக்கு அதிசயமான சந்தர்ப்பம் திறக்கப்படும். ''அந்நாளில் பாவத்தையும் அழக்கையும் நீக்க தாவீதின் குடும்பாத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்'' சகாரியா 13:1)

## கோகின் தோல்விக்கு பிறகு யூதர்கள் திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுதல்

கோகின் படையெடுப்பிற்கு முன் யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவது போல், கோகின் படையெடுப்பிற்கு *பின்னும்* யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படு வார்கள். கோகு அழிக்கப்பட்டு பிறகு, யூதர்களின் கூட்டிச் சேர்த்தல் தொடரும் என்று ஏசாயா 60 & 66 மற்றும் எசேக்கியேல் 36 விளக்குகிறது. ஏசாயா

66-ம் அதிகாரத்தில் உள்ள விளக்கமானது: கர்த்தர் கோகின் மேல் கொண்டு வரும் பெரிய அழிவால், புறஜாதிகள் எல்லோரும் தேவனின் மகிமையை காண்பார்கள் என்ற காலத்திற்கு இணையாக உள்ளது (ஏசாயா 66 : 15, 16, 18; எசேக்கியேல் 39:21). இந்த தீர்க்கத்தரிசனம் மேலும் கூறுகையில், தப்பின புறஜாதிகளில் சிலபேர் தேவனுடைய மகிமையை புறஜாதிகளுக்குள்ளே பரப்புவார்கள். அவர்களுடைய சகோதரரெல்லாரையும்... சகல ஜாதிகளிலுமிருந்து.... என்னுடைய பரிசுத்த பர்வதத்துக்கு கொண்டு வருவார்கள் (ஏசாயா 66 : 19, 20).

இதேபோல், புறஜாதிகள் அனைவரும் இஸ்ரயேலில் கர்த்தருடைய மகிமையை காண்பார்கள் என்றும் புறஜாதிகள் எல்லோரும் வந்து கர்த்தருடைய ஆட்சியில் ஒருமித்து இருப்பார்கள். அவர்கள் உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஒளியினிடத்துக்கு வருவார்கள் என்று ஏசாயா 60-ம் அதிகாரத்தின் தீர்க்கத்தரிசனமும் விளக்குகிறது. உபத்திரவ காலம் முடிந்து, தேவனுடைய இராஜ்யம் இஸ்ரயேலில் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர், யூதர்கள் திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். உன் புத்திரர்கள் தூரத்தேசத்தில் இருந்து ''கப்பலில்'' இஸ்ரயேலுக்கு வருவர்கள் மற்றும் கர்த்தரின் துதிகளை பிரசித்தப்படுத்துவார்கள். (ஏசாயா 60 : 2-9).

இதனுடைய இணை வசனங்களான எசேக்கியல் 36-ம் அதிகாரம் மேலும் பல காரியங்களை விளக்குகிறது (பார்க்க வசனங்கள் 23 - 38). முக்கியமாக வசனம் 23, கோகின் தோல்விக்குப் பிறகு வரக்கூடிய காலத்தை காட்டுகிறது (எசேக்கியல் 36 : 23; எசேக்கியல் 39 : 21-23, 27).

> புறஜாதிகளின் நடுவே நீங்கள் பரிசுத்தக்குலைச்சலாக்கினதும் அவர்களுக்குள் உங்களால் பரிசுத்தக்குலைச்சலாக்கப்பட்டது மான என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன், அப்பொழுது புறஜாதிகள் தங்கள் கண்களுக்கு முன்பாக நான் உங்களுக்குள் பரிசுத்தம்பண்ணப்படுகையில், நான் கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எசேக்கியேல் 36:23
>
> இவ்விதமாய் என் மகிமையை நான் புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ணுவேன், நான் செய்த என் நியாயத்தையும் அவர்கள்மேல் நான் வைத்த என் கையையும் எல்லா

ஜாதிகளும் காண்பார்கள்.

அன்று முதல் என்றும் நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப்போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள், அவர்கள் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியால், என் முகத்தை நான் அவர்களுக்கு மறைத்து, அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன், அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுந்தார்கள்.
நான் அவர்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும்போது, எசேக்கியேல் 39:21-23,27.

**கோகின் படையெடுப்பில் இருந்து, கர்த்தர் இஸ்ரயேலை அதிசயமாக விடுவிப்பதை புறஜாதி தேசங்கள் காணும்போது, யூதர்கள் திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுவதை எதிர்பார்க்கலாம்.**

நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களைச் சகலதேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன்.

அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன், நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்.
- எசேக்கியேல் 36:24,25.

**இதன்பின்னர் கோகின் படையெடுப்பிற்கு முன்னதாக கூட்டிச் சேர்க்கப்பட்ட யூதர்களின் ''பாவங்கள்'' எப்படி ''ஊற்று நீரால்'' சுத்தமாக்கப்படுகிறதோ, அதேபோல் கோகின் படையெடுப்பிற்கு பிறகு கூட்டிச்சேர்க்கப்பட போகும் யூதர்களும் ''சுத்தமான ஜலத்தினால்'' சுத்திகரிக்கப்படுவார்கள் (சகரியா 13 : 1). தேசத்தில் இருக்கும் இஸ்ரயேலின்**

ஆடுமந்தை எப்படி கோகின் படையெடுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறதோ, அதேபோல் அந்த காலத்தில், புதிதாய் கூட்டிச் சேர்க்கப்பட்ட மந்தையும் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும் (சகாரியா 12: 9,10).

கோகின் படையெடுப்பிற்கு முன்னர் பெரிய ஆட்டுமந்தையாக இருந்த இஸ்ரேலின் மீந்தவர்களின் எண்ணிக்கை (மீகா 2:12) , கோகின் தோல்விக்கு பின்னர் கூட்டிச் சேர்க்கப்படும் ''சுத்திக்கரிக்கப்பட்ட யூதர்களின்'' எண்ணிக்கையால் அதிகரிக்கும். ''மந்தை பெருகுகிறதைப்போல் அவர்களில் மனிதரைப் பெருகப்பண்ணுவேன்''. இப்படியாக சேர்க்கப்பட்டதின் மூலம் அதிகரிக்கப்பட்ட மீதமானவர்கள் ''பரிசுத்த மந்தை'' என்று எண்ணப்படுவார்கள் (எசேக்கியேல் 36: 37,38).

யூதமக்கள் அனைவரும் கோகின் படையெடுப்பிற்கு முன்னரே இஸ்ரேல் தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவர் என்று ''இரண்டாம் இனப்படுகொலை'' கருத்தாளர்கள் கூறுகிறார்கள். இஸ்ரயேலுக்கு வெளியே அதிக யூதர்கள் இருக்கும்பட்சத்தில், தற்போது இஸ்ரயேல் தேசத்தில் 9-வது பாகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் யூதர்களுக்கு, கோகின் படையெடுப்பின் போது நியாயதிர்ப்பு கொடுக்கப்படும் என்று கூறப்படுவது அர்த்தமில்லாமலே இருக்கும் (ஏசாயா 66:18-20; 60:4-9 மற்றும் எசேக்கியல் 36 : 23-28). கோகின் படையெடுப்பின்போது ''நகரத்தில் பாதி மனுஷர் சிறைப்பட்டு போவார்கள்'' என்ற கருத்து இப்படியிருக்க, 10-ல் 9 பாகமாக இருக்கும் யூதர்கள் அழிக்கப்படுவார்கள் என்பது ஏற்புடைய தல்ல (சகரியா 14 : 2). கோகின் படையெடுப்பு முடிந்த பின்னர், கூட்டிச்சேர்க்கப்படும் யூதர்கள், தற்போது வந்து கொண்டிருக்கும் யூதர்களோடு சேர்க்கப்படுவார்கள். இவர்கள் அனைவரும் சுத்திகரிக்கப்பட்டு, தேவ ஆவியை பெற்று ''பரிசுத்த மந்தையில்'' ஒரு பாகமாக சேர்க்கப்பட்டு, கோகின் படையெடுப்பின்போது வாழ்பவர்களோடு ஒன்று சேர்ந்து வாழ்வார்கள்.

கோகு படையெடுப்பின் போது வாழும் யூதர்கள் மற்றும் கோகின் தோல்விற்கு பிறகு கூட்டிச் சேர்க்கப்படும் யூதர்களும் தங்களுடைய இரட்சகரை ஏற்றுக்கொண்டு, சுத்திகரிக்கப்பட்டு, தேவனுடைய ஆவியை பெற்றுக்கொள்ளுவார்கள். இவர்களே ''பரிசுத்த மந்தையாக'' தேவனுடைய திட்டங்களை நிறைவேற்ற உபயோகப்படுத்தப்படுவார்கள். எந்த சேவையை செய்வதற்காக இப்பரிசுத்த மந்தையானது பரிசுத்தப்படுத்தப்பட்டுள்ளது?

## ‘‘பரிசுத்த மந்தையின்’’ முக்கிய நோக்கம்

யாக்கோபின் வம்சத்தாராகிய இந்த பெரிய மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த மந்தையே ஆபிரகாமின் பூமிக்குரிய வித்தாக எண்ணப்படுகிறது (கடற்கரை மணலைப்போல). இவர்கள் ஆவிக்குரிய வித்தாகிய, கிறிஸ்து மற்றும் சபையோடு (வானத்து நட்சத்திரங்களை போல) சேர்ந்து பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பார்கள் (ஆதியாகமம் 22 : 16-18, கலாத்தியர் 3:16, 27-29). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஐபிராத்து நதி முதல் எகிப்தின் நதி வரைக்கும் உள்ள இடங்கள் யாக்கோபின் மீதியானவர்களுக்கு கொடுக்கப்படும் (ஆதியாகமம் 13:15,16: 15:18). தேவனுடைய இராஜ்யத்தின் தலைநகரமாகவும், இஸ்ரயேல் தேச செயல்பாட்டின் அடித்தளமாகவும் எருசலேம் விளங்கும்.

இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் மொத்தமாக மிகைப்படுத்திக் கூறவில்லை (ரோமர் 11:26). அவர்கள் எப்படி இரட்சிக்கப்படுவார்கள்? தேவனுடைய இராஜ்யமான சீயோனில் இருந்து வெளிவரும் மீட்கிறவராகிய கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்படுவார்கள். யாக்கோபின் அவபக்தியை விலக்குவதின் மூலமாக மீட்கிறவர் அவர்களை இரட்சிப்பார். இயேசுவின் மரணத்தின் மூலமாக ஆதாமின் மரணத்தில் இருந்தும் மற்றும் மோசே நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்தும் இஸ்ரயேலர்கள் இரட்சிக்கப்படுவார்கள். ஏன் அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும்?

> ‘‘சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்: தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக் கிறார்கள்.
>
> தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே.’’ (ரோமர் 11:28,29.)

இதன் பின் இஸ்ரயேலின் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது, சாமுவேல் மற்றும் மிச்சமுள்ளவர்களும் இஸ்ரயேலின் அரசாங்கத்தில் சேர்க்கப்பட்டு, பூமியில் ‘‘இராஜாக்களாகவும்’’ மற்றும் கிறிஸ்து அவருடைய சபைக்கு ‘‘பிள்ளைகளாகவும்’’ இருப்பார்கள் (சங்கீதம்

45:10-16). உயிர்த்தெழுப்புதல் மூலமாக கர்த்தர் ‘‘நியாயாதிபதிகளையும், ஆலோசனைக்காரரை முன்பிருந்தது போல திரும்பவும் கொண்டு வருவார் (ஏசாயா 1 : 25, 26). பூமியில் இருக்கும் எருசலேமில் தொடங்கப்படும் தேவனுடைய இராஜ்யம் பூமியின் கடையாந்திரமட்டும் விரிவுப்படுத்தப்படும் (ஏசாயா 2:2,3:)

கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.

திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். ஏசாயா 2:2,3.

அரேபியர்களும் மற்றும் முழு உலக மக்களும் யாக்கோபின் தேவனை வணங்க எருசலேமிற்கு வருவார்கள். கர்த்தர் இஸ்ரயேலை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து, இஸ்ரயேல் தேவனை வணங்க பலவித பாஷைக்காரரும் அவரை தேடி வருவார்கள் (சகரியா 8:3, 21-23).

நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேம் நடுவிலே வாசம் பண்ணுவேன். எருசலேம் சத்தியநகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதமென்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு பட்டணத்தின் குடிகள் மறுபட்டணத்தின் குடிகளிடத்தில் போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்துப் போவோம் வாருங்கள். நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள்.

அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்.

அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில்

பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு தேவன் உங்களோடே இருக்கிறார் எனறு கேள்விப்பட்டோம். ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

- சகரியா 8:3,21-23

மனிதனுடைய சமாதான நடவடிக்கை பொய்த்துபோகும்போது, தேவனுடைய சமாதான வேலைகள் வெற்றி பெறும். இஸ்ரயேலுக்கும் மற்றும் முழு உலகத்துக்கும் தரக்கூடிய தேவனுடைய சமாதானமானது நிரந்தரமாகவும் மற்றும் முழுவதுமாகவும் இருக்கும். எல்லா மக்களும், யூதர்களும் மற்றும் புறஜாதிகளும், இஸ்ரயேலர்கள் மற்றும் அரேபியர்களும் ''ஜீவ தண்ணீரை இலவசமாய்க்'' குடித்து ''எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்'' (வெளி. 22 : 17, 21:7).

# இறுதி குறிப்புகள்

(End Notes)

1. இஸ்ரயேலின் பத்தாவது சுதந்திர ஆண்டு விழாவில் பேசியது.

2. பரூக் கோல்ட்ஸ்டையின் வஞ்சக நீதி கொடுமையானது என்று நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

3. பாலஸ்தீன முஸ்லீம்களின் தலைவர்

4. அராபத்தின் முழுமையான பெயர் அபத் அல் ரகுமான் அபத் அல் பாவ் அராபத் அல் குத் அல் வுசைன் என்பதாகும். நாஜிக்களோடு கைகோர்த்த முன்னாள் எருசலேமின் முஸ்தீப்போடு (அஜ் முகமது அமின்) தனக்கிருந்த இரத்த சம்பந்தப்பட்ட உறவை மறைப்பதற் காகவே தனது பெயரை சுருக்கிக் கொண்டார். (ஹோவர்ட் மா. சச்சார், இஸ்ரேலின் வரலாறு (நியூயார்க் : நாப், 1976).

5. ஐச்மேன் உதவியாளர், அல் உசைனி பற்றி தான் கண்ணால் கண்டதை இவ்வாறாக கூறுகிறார் :- ஐரோப்பிய யூதர்களை படிப்படியாக அழிப்பதில், இவர் ஐச்மேனுக்கும் (Eichmann) மற்றும் ஹிம்லருக்கும் (Himmler) ஆலோசகராக இருந்தார். யூதர்கள் அழிக்கப்படவேண்டும் என்ற கொள்கை கொண்டவர்களில் இவரும் ஒருவராக இருந்தார். ஐச்மேனின் முக்கிய நண்பர்களில் ஒருவராக விளங்கிய இவர், வேகமாக யூதர்களை கொல்வதற்கு ஐச்மேனை ஆசுவாசப்படுத்தியவர். (ஐ.ப.செச்சட்-மேன், முப்தியும் ஜெர்மானிய அரசும், அஜ் அமீன் அல்-உசைனி உயர்தலும் வீழ்தலும் (நியூயார்க் : த. யோஸ்லப், 1965).

6. ஜேம்ஸ் வி. பார்க்ஸ், நாடு கடத்தப்படுதலின் முடிவு: இஸ்ரயேல், யூதர்கள் மற்றும் புறஜாதியாரின் உலகம் (மார்பிள்ஹெட், மா.மீகா 1982)

7. எட்வர்ட் ஆ. பிலானே, யூதர்களின் வேதனை : 23 நூற்றாண்டு களாக இருக்கும் யூத விரோத நடவடிக்கைகள் (நியூயார்க் : மேக்மில்லன், 1965) பக்கம் 31.

8. டேவிட் ஆ. ராஸ், வெறுக்கப்பட்டவர்களின் மரபுரிமை : ஏன் யூத

இனப்படுகொலையை கிறிஸ்தவர்கள் மறக்கக்கூடாது? (கிராண்ட் ரேபிட்ஸ் : பேக்கர் புத்தகங்கள், 1990) பக்கம் 20 - 21

9. கிலாடு டுவர்னாய், ''சீயோனின் சர்ச்சை'', ஜெருசலேம் கொரியர், தொகுதி - 5, எண் 5, பக்கம் 3.

10. டென்னிஸ் பிராகர் மற்றும் ஜோசப் டெலுஸ்கின், ஏன் யூதர்கள் மட்டும்? (நியூயார்க் : சீயோன் & சுசஸ்டர், 1983) பக்கங்கள் 94-95

11. Ibid பக்கம் 95

12. மேக்ஸ் இ. டிமோண்ட்: யூதர்கள், கடவுள் மற்றும் வரலாறு (நியூயார்க் : சிக்னெட் 192). பக்கம் 227

13. பிராகர் மற்றும் பெலுஸ்கின், ஏன் யூதர்கள் மட்டும்?

14. ஜாதிகளின் தலைவன் என்ற வார்த்தையை ஐக்கிய நாடுகள் சபை என்றும் மாற்று பெயராக பயன்படுத்திக் கொள்ளலாம்.

15. சாமுவேல் கேட்ஸ், யுத்தகளம் : பாலஸ்தீனத்தில் உள்ள உண்மையும் மற்றும் கட்டுக்கதைகளும் (நியூயார்க் : பாண்டம் புத்தகங்கள், 1973, பக்கம் 106). (ஜோசப்பஸ் கூற்றுப்படி மொத்தம் 50 - 70 இலட்சம் யூதர்கள் பாலஸ்தீனாவில் வாழ்ந்தார்கள் என்று சாமுவேல் கேட்ஸ் குறிப்பிடுகிறார்). கி.பி. 132-135 ஆண்டுக்கு முன்னர், 30 இலட்சம் யூதர்கள் வாழ்ந்ததாக இன்னொரு ஆதாரம் கூறுகிறது. டியோ கேசியஸ், ரோமர்களின் வரலாறு, 12-14. டி ஹாஸ், வரலாறு, பக்கம் 55, பார்க்க பக்கங்கள் 52-56). மேலும், தியோடர் மாம்சென், ரோம இராஜ்யத்தின் மாகாணங்கள், பக்கம் 243, டியோ கேசியஸ் கூற்றை இவர்கள் இரண்டு பேரும் மேற்கோள் காட்டுகின்றனர்.

16. மேலும் பார்க்க வெளி. 11:8, தேவனுடைய கண்ணோட்டத்தின் படி பார்ஜெயி, இயேசுவின் மரணத்திற்கு பெயர் கிறிஸ்தவமும் ஒரு முக்கிய குற்றவாளியாகும்.

17. அப்பா இபான், என்னுடைய ஜனம் (நியூயார்க் : பெகர்பேன் ஹவுஸ், 1968) பக்கம் 323...

18. பார்க்க முன்னுரை பக்கம் 1

19. பார்னெட் லிட்வினாப், தங்களுடைய பிதாக்களுடைய இடத்திற்கு

(நியூயார்க் : பிரட்ரிக் பிரகர், 1965) பக்கம் 114.

20. யூத கலைக்களஞ்சியம் (எருசலேம் : யூத கலைகளஞ்சியம், 1973) பக்கம் 872

21. அப்பா இபான், என்னுடைய ஜனம், பக்கம் 123

22. ஜேம்ஸ் பார்கர், யாருடைய தேசம்? பாலஸ்தீன மக்களின் வரலாறு (ஆர்மண்ட்ஸ் வோர்த், மகா பிரிட்டன், 1970) பக்கம் 66

23. குற்றங்களை பற்றிய ஆய்வு, பக்கம் 167, நாடுகளுக்கு மத்தியில் யூதர்கள் (நியூயார்க் : பி.உங்கர், 1967) பக்கம் 144. எரிக் கேக்ஸர் இந்த கூற்றை குறிப்பிடுகிறார்.

24. பிலிப்பு ஆ. ஹித்தி, சிரியாவின் சிறிய வரலாறு (நியூயார்க் : மேக்மில்லன், 1959) பக்கம் 170

25. Ibid, பக்கம் 622

26. யாக்யா அர்மாஜாமி, மத்திய கிழக்கின் இறந்த மற்றும் நிகழ்காலம் (ஈகிள் உட்ஸ் கிளப், நியூஜெர்ஸி : பிரிண்டைஸ் – ஹால், 1970) பக்கம் 143

27. ஏரியா லா. ஆவ்னெரி, பறித்தலின் கூற்று (நியூயார்க் : ஹெர்ஷல் பத்திரிக்கை துறை 1982).

28. கவுண்ட் கான்ஸ்டான்டைன் பெ. வால்னி, சிரியா மற்றும் எகிப்தின் வழியான பயணங்கள் (நியூயார்க் : எ. டொய்ன்கு & கோ, 1798).

29. ஹித்தி, அரேபியர்களின் வரலாறு (நியூயார்க் : புனித மார்டின் பத்திரிக்கை துறை, 1956).

30. ஆல்பிரட் போன், கிழக்கின் பொருளாதார வளர்ச்சி (லண்டன் : கே. பவுல், டிரன்சு, டிரப்னர் & கோ, 1945).

31. டேவிட் பென்–குரியன், இஸ்ரயேல் : தனிப்பட்ட வரலாறு (நியூயார்க் : ஹெர்ஷல் பத்திரிக்கை துறை, 1972) பக்கம் 817

32. சச்சார், இஸ்ரேலின் வரலாறு

33. தாமஸ் ஷா, பயணங்களும் மற்றும் கண்டதும் (ஆக்ஸ்போர்டு : அரங்கத்தில் அச்சிடப்பட்டது,1738)

34. வோல்னி, சிரியா மற்றும் எகிப்தின் வழியான பயணங்கள்

35. அல்போன்சா டி லாமர்டின், கிழக்கு பற்றிய மறுசேகரிப்பு




"இஸ்ரேல் எங்கு இருக்கிறது என்பதை கண்டுப்பிடியுங்கள்.
இதன் பின்னர் ஏன் அராபிய - இஸ்ரேல் சண்டை
என்பதை நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள்"